2729
தமிழ்நாடு
எழும்பூர், சென்னை-600

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை 1983 அக்டோபர் -28 தொகுதி LII எண் .5
**Friday 28th October 1983 —Volume LII No. 5**

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600009
**Legislative Assembly Department, Fort st. George,**
**Madras-600009**

விலை ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 paise

2729

T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: LII NO: 5

October 28 1983

D
211,31 N83
N83.52-5
136055

## உள்ளடக்கம்

**28-10-1983**


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்-விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 375—409 |
| 2. தகவல் கோரல்— | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் | 409 |
| 3. ஒத்திவைப்புத் தீர்மானம்— | |
| சென்னைப் பகுதியில் அடைமழையினால் ஏற்பட்டுள்ள சேதம் | 410—418 |
| 4. கவன ஈர்ப்பு— | |
| தஞ்சை மாவட்டத்தில் விவசாய பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பது | 418—420 |
| 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| (அ) கட்டட கட்டுமானப் பணியாளர்கள் (பணி நிலைமைகள்-பல்வகை விதித்துறைகள்) சட்ட முன்வடிவு 1983 | 420— 421 |
| (ஆ) எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு 1983 | 458—505 |
| 6. அரசினர் தனித் தீர்மானம்— | |
| இலங்கைவாழ் தமிழர் பிரச்சினை—(தொடர்ச்சி) | 421—458 |
| மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் | 421—438 |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 439—453<br>494—504 |
| 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 505 |

VA11,31 N83
N83·S2·5
136055
சென்னை-600 008.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1983, அக்டோபர் 28, வெள்ளிக்கிழமை,

ஐப்பசி 11, ருத்ரோத்காரி — திருவள்ளுவர் ஆண்டு 2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று."

பிறகு நினைந்து வருந்துவதற்குக் காரணமான செயல்களைச் செய்யக் கூடாது. ஒருகால் தவறிச் செய்தாலும், மீண்டும் அத்தன்மையானவற்றைச் செய்யாதிருத்தல் நல்லது.

### I. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*1982–83-ல் செங்கல்பட்டு மாவட்டத்தில் விவசாயப் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்க அளிக்கப்பட்ட நிதியுதவி.*

*வினா எண் 61—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1982–83-ம் ஆண்டிற்கு செங்கல்பட்டு மாவட்டத்தில் விவசாயப் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்க தமிழ் நாடு மின்வாரியத்திற்கு மத்திய அரசு கிராமப்புறம் மின்வசதி நிறுவனம் நிதி உதவி அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) வேறு மாவட்டங்களுக்கும் நிதி கிடைத்துள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) மற்றும் (ஆ)- 1982–83-ல் சங்கல்பட்டு மாவட்டத்தில் மின்விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்க எந்த புதிய திட்டத்திற்கும் மத்திய அரசு கிராமப்புற மின் வசதிக் கழகம் அனுமதி வழங்கவில்லை. ஆனால், 1-4-82-க்கு முன் அக்கழகத்தால் அனுமதிக்கப்பட்ட கடனுதவியில் அடுத்த தவணையாக ரூ. 1.36 லட்சத்தை 1982–83-ம் வருடத்தில் வழங்கியுள்ளது.

(இ) ஆம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, கடனாகப் பெற்ற மொத்தத் தொகை எவ்வளவு? அதனால் பலன் பெற்ற விவசாயிகள் எவ்வளவு பேர் என்ற விவரங்களை அறிவிக்க இயலுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, 1982—83-ஆம் ஆண்டில் கிராமப்புற மின் வசதிக் கழகம் இந்த மாநிலத்தில் 23,425 விவசாய மின் இணைப்புகளுக்கான 48 திட்டங்களுக்காக 1923 இலட்சம் ரூபாய் அனுமதி அளித்தது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, இதுபோன்ற திட்டங்கள் வேறு எந்தெந்த மாவட்டங்களில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன என்று நான் கேட்டிருக்கிறேன். அதற்கு பதில் தரவில்லை. வேறு மாவட்டங்களில் இந்தத் திட்டம் செயல் படுத்தப்பட்டிருக்குமேயானால் அவை எந்தெந்த மாவட்டங்கள், அங்கே எவ்வளவு விவசாயிகள் பயன் பெற்றுள்ளார்கள் என்ற விவரங்களை அறிவிக்க முடியுமா என்று நான் கேட்டுக்கொள் கிறேன்,

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, அனைத்து மாவட்டங்களிலுமே இது செயல்படுத்தப்பட்டிருக் கின்றது. அதற்கான புள்ளி விவரங்களைத் தனியாக அளிக் கிறேன்.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது 1978-க்குப் பின்னால் மின் இணைப்பு அனுமதிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அவ்வாறு அனுமதிக்காததற்கான காரணம் என்ன? தமிழ்நாட்டிலே அதிகமான பம்ப் செட்டுகள் இருந் தாலும் எத்தனை பம்ப்செட்டுகள் ஓடிக் கொண்டு இருக்கின்றன, எத்தனை பம்ப் செட்டுகள் ஓடாமல் இருக்கின்றன என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்த வரையில் 1-10-83-வது நாள் வரை வழங்கப்பட்டுள்ள மொத்த விவசாய மின் இணைப் களின் எண்ணிக்கை 9, 70, 362 ஆகும். நிலுவையில் உள்ள மின் இணைப்பு விண்ணப்பங்களின் எண்ணிக்கை 3, 16, 719 ஆகும். 1983—84 ஆம் ஆண்டில் 20,000 விவசாயக் கிணறுகளுக்கு மின் இணைப்பு வழங்குவதெனத் திட்டம் தீட்டப்பட்டு முனைந்து செயல்பட்டு வருகின்றது. இதுவரையில் 5,345 இணைப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன,





## தமிழகத்தில் மின் பற்றாக்குறையைப் போக்க மேற்கொண்ட நடவடிக்கைகள்

*வினா எண் 62—திரு என். பழனிவேல்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தமிழத்தில் மின்சாரப் பற்றாக்குறையைப் போக்கு வதற்கு மைய அரசின் உதவியை மாநில அரசு நாடியதா?

(ஆ) ஆம் எனில் அதற்கு மைய அரசின் பதில் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) மின் பற்றாக் குறையைக் கருத்தில்கொண்டு தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு வரும் நிலக்கரியின் அளவினை அதிகரித்து கையிருப்பில் வைத்துக்கொள்ளும் பொருட்டு 5 லட்சம் டன் நிலக்கரி இறக்குமதி செய்ய மத்திய அரசிடம் அனுமதி கேட்கப்பட்டது. மேலும் ஒவ்வொன்றும் 50 மெகாவாட் திறன் கொண்ட 6 எரிவாயு (கேஸ் டர்பைன்) மின் திட்டத்திற்கு மத்திய அரசின் அனுமதி கேட்கப்பட்டிருக்கின்றது.

(ஆ) மத்திய அரசு இன்னமும் அனுமதி வழங்கவில்லை.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, தமிழகத்திலே கடந்த இரண்டாண்டுக் காலமாகவே கடும் மின்சாரப் பற்றாக் குறை ஏற்பட்டு நம்முடைய உணவு உற்பத்தியைக் கூட பெருமளவில் பாதிக்கக்கூடிய அளவுக்கு இருக்கின்ற இந்த நேரத்தில் மத்திய அரசிடம் இது சம்பந்தமாக உதவியினைக் கோரியும் இதுவரையில் எந்த பதிலும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். எப்போது என்னென்ன உதவிகளைக் கேட்டீர்கள்? அவர்கள் பதில் கொடுக்காமல் இருப்பதற்கான காரணத்தை வலியுறுத்தி மறுபடியும் கடிதம் எழுதி இருக்கிறீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கருத்தை முதற்கண் வலியுறுத்த விரும்புகிறேன். மத்திய அரசுக்கு நம்முடைய கோரிக்கைகளைச் சொல்லி, அந்தக் கோரிக்கையின் மீது மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் இடையே இன்றைய தினம் நடைமுறைப் பேச்சுவார்த்தைகள், வலியுறுத்தல்கள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக இன்றையதினம் தமிழ்நாட்டில் 113 கோடி ரூபாய் அளவில் (கேஸ் டர்பைன்) எரிவாயு மின் நிலையம் அமைக்க வேண்டும் என்று திட்டம் அனுப்பினோம். அவர்கள் சில சங்கடங்களைச் சொன்னார்கள். அந்தச் சங்கடங்களைப் போக்குவதற்கு தமிழக அரசு இன்றைக்கு சில விவரங்களைத் தந்து இருக்கிறது. குறிப்பாக, மத்திய அரசு வெளி நாட்டில் இருந்து டீசல் எரி எண்ணெய் இறக்குமதி செய்வதில் சில தடைகள், சங்கடங்கள்,

சிரமங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அது குறித்து சில தகவல்களை, விளக்கங்களை அவர்களுக்கு நாம் தந்து இருக்கிறோம். குறிப்பாக, பம்பாயில உற்பத்தியாகும் எண்ணெயை இந்த எரி எண்ணெய்க்கு பதிலாகப் பயன் படுத்தலாம் என்றும், இறக்குமதி செய்ய வேண்டிய எண்ணெயின் விலையை விட இது குறைவானதாக இருக்கலாம் என்றும் தமிழக அரசு மத்திய அரசுக்கு யோசனை சொல்லி யிருக்கிறது.

அது மட்டுமல்ல, 12 மாதத்திலே இந்த எரிவாயு மின் நிலையத்தை உருவாக்கலாம் என்ற தகவலையும் அளித்துவ இருக்கிறோம். அது மட்டுமல்ல, தமிழ்நாட்டில் இன்றைக்கு அடிக்கடி தென்படுகின்ற மின் நிறுத்தம் (இன்டரப்ஷன்), மின் தடை (லோட் ஷெட்டிங்) போன்ற இந்தக் குறைபாடுகளையும் கூட இந்த கேஸ் டர்பைன் முறை மூலமாக மின்சாரம் உற்பத்தி செய்தால் தவிர்க்கலாம் என்ற ஆலோசனையையும் நாம் மத்திய அரசுக்குச் சொல்லியிருக்கிறோம். அதை அவர்கள் பரிசீலித்துக் கொண்டு இருக்கிறார்கள். நிச்சயமாக நல்ல ஆரோக்கியமான முடிவைக் கொடுப்பார்கள் என்று மனதார தமிழக அரசு நம்புகிறது.

**திரு. தி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள மின் பற்றாக்குறையைப் போக்குவதற்கு மத்திய அரசு பொறுப்பில் இருக்கும் ராம குண்டம் மின் நிலையத்தில் இருந்தும், கல்பாக்கம் மின் நிலையத்தில் உற்பத்தியாகும் முழு மின்சாரத்தையும்பெறுவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, கல்பாக்கத்தைப் பொறுத்தவரையில்' தமிழகத்திற்கு அதிலே உற்பத்தியாகும் மின்சாரத்தை முழுமையாகக் கொடுப்பதாக ஏற்கனவே வாக்குறுதி அளித்தார்கள். பிறகு அதைப் பரிசீலனை செய்து, தென் மாநிலங்களுக்கு அதைப் பகிர்ந்தளிப்பது என்று சொன்னார்கள். அந்தக் கருத்தின் மீது மீண்டும் இன்றைக்கு நாம் வற்புறுத்தி, தமிழகத்திற்கே முழுமை யாக அதைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இருக்கிறோம். ஆகவே, கல்பாக்கத்திலே (குறுக்கீடு) உற்பத்தி செய்கிற மின்சாரத்தை முழுமையாக தமிழ்நாட்டிற்கே அளிக்க வேண்டும் என்று மீண்டும் வற்புறுத்திக் கொண்டு இருக்கிறோம். அது மட்டுமல்ல, நெய்வேலியில் 3-வது மின்நிலையம் ரூ. 803 கோடி செலவில் 1,050 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட அந்த நிலையம் அமைக்கும் நேரத்தில், அதை மாநில அரசின் பொறுப்பிலேயே விடவேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டு இருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நம்முடைய மின்சாரப் பற்றாக்குறையை போக்குவதற்கு சாண எரி வாயு, இன்னும் பல முயற்சிகள்



மூலமாக நம்முடைய தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு மத்திய அரசு யோசனை சொல்லியிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் இன்றைக்கு சொல்லி இருக்கிறார்கள். ஆனால் அமைச்சரின் இந்த பதில் யதார்த்த நிலைக்கு முற்றிலும் பொருந்தாது என்று கருதுகிறேன். இன்றைக்கு மின்சாரப் பற்றாக்குறையால் நமது தமிழகம் எவ்வளவோ சின்னாபின்னப் பட்டு இருக்கிறது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். அப்படியிருக்கிறபோது இன்றைக்கு மத்திய அரசோடு ஏற்பட்டு இருக்கும் அரசியல் உறவை வைத்துக்கொண்டு ஏனோதானோ என்ற முறையில் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே,இந்தப் போக்கை மாற்றுவதற்கு உடனடியாக நமது தேவைக்கு ஏற்ப மின்சாரத்தைப் பெறு வதற்கு.........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மத்திய அரசோடு ஏற்பட்டு இருக்கும் உறவை வைத்துக் கொண்டு ஏனோதானோ என்று மாண்புமிகு அமைச்சர் சொல்கிறார் என்று சொல்வது பொருத்தமுடையதாக இல்லை. பொருத்தமுள்ள வகையில் துணைக் கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.

**திரு. என். பழனிவேல்:** தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல்வேறு நீர்மின் நிலையங்கள் அமைக்க வேண்டும் என்று நாம் கேட்டு இருக்கிறோம். அப்படி அமைக்கப்பட்டால், அதனால் நமக்குப் பல்லாயிரக்கணக்கான யூனிட் மின்சாரம் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. அதை உடனடியாக நிறைவேற்றுவதற்கு அனுமதி கொடுக்கவேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

(முற்பகல் 9-10)

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தண்ணீரை அடிப்படையாக வைத்துக்கொண்டு மின்சாரத்தை உற்பத்தி செய்ய முனைய வேண்டுமென்று கூறுகிறார்கள். தமிழ்நாட்டிலே அவ்வப்போது பருவமழை தவறுகின்ற காரணத்தால் பல சங்கடங்கள் ஏற்படுவது அவர்களுக்குத் தெரியும். அதனால் தண்ணீரை மட்டும் அடிப்படையாக வைத்து மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது. அதன் காரணமாகத்தான் நிலக்கரி, எரிவாயு, அணுசக்தி என்று இப்படி 'ஆல்டர்னேட்டிவ் சோர்ஸஸ்' என்ற முறையிலே மாற்று சக்திகளை முன்வந்து பயன்படுத்த பல பல முயற்சிகளை தமிழக அரசு எடுத்துவருகிறது.

**திரு. என். வரதராஜன்:** தலைவரவர்களே, தமிழகத்தினுடைய மின் தேவை எவ்வளவு? இப்போது இருக்கக்கூடிய பற்றாக்குறை எவ்வளவு? கிட்டத்தட்ட 50 சதவீதம் பற்றாக்குறை இருக்கிறது என்ற விவரங்கள் இருக்கின்றன. ஆகவே, மத்திய அரசிலிருந்து

பெறுகின்ற உதவிகளை இதற்கு முதலிடம் கொடுத்து, இந்தத் திட்டங்களை நிறைவேற்ற அரசு முயற்சி எடுத்திருக்கிறதா? அல்லது இனிமேலாவது எடுக்க உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தலைவரவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இன்றைக்கு 15,379 மில்லியன் யூனிட் மின்சாரம் தேவைப்படுகிறது. ஆனால் எதிர் பார்க்கின்ற உற்பத்தி அளவு 12,267 மில்லியன் யூனிட். அதனால் தமிழ்நாட்டிலே இருக்கிற மின் பற்றாக்குறை 2,812 மில்லியன் யூனிட் தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவரவர்களே, தமிழ்நாட்டில் மின்சாரத்தின் மொத்த உற்பத்தி 12,267 மில்லியன் யூனிட் என்று சொன்னார்கள். அதிலே புனல் மின் உற்பத்தி எவ்வளவு? அனல் மின் உற்பத்தி எவ்வளவு? தமிழ்நாட்டின் மின் பற்றாக் குறையைப் போக்குகின்ற வகையில் ஒகனேக்கலில் ஒரு மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் திட்டம் இருந்ததே, அது எந்த நிலையில் உள்ளது? கர்நாடக அரசுடன் பேசி அதற்கு ஒரு ஏற்பாடு செய்ய இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தலைவரவர்களே எந்த எந்த வகையிலே எவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்யப் படுகிறது என்ற விவரம் தற்போது என்னிடம் இல்லை. அதற்கு தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒகனேக்கல் மின் உற்பத்தித் திட்டம் இந்த மூலக்கேள்விக்கு சம்பந்தப் பட்டதாக இல்லை என்பதால் அதுபற்றிய விவரமும் இல்லை; தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பாபு ஜனார்த்தனன்:** தலைவரவர்களே, மின்சாரப் பற்றாக்குறை என்பது ஒரே சீராக இருக்கிறதா? மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசமாகஇருக்கிறதா? தஞ்சை மாவட்டத்திலே பகலிலே 6 மணி நேரமும் இரவிலே 8 மணி நேரமும் மின்சாரம் வழங்க அரசு உறுதிமொழி கொடுத்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

துணை மின் நிலையங்கள் அமைக்கும் திட்டம்.

* வினா எண் 63— திரு. ச. அங்குசாமி: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தேவகோட்டை மற்றும் திருவாடானையில் துணை மின் நிலையங்கள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி** (அ) மற்றும் (ஆ): தேவ கோட்டையில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை. திருவாடானையில் 66/11 கி. வோ. துணை மின் நிலையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இது 1983-84-ம் ஆண்டு முடிவுக்குள் முடிவுபெறும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

*வினா எண் 64—திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், வாய்மேடு கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது முதல் இயங்கும்?

(இ) அதற்கென செய்யப்பட்ட மொத்தச் செலவு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** (அ) மற்றும் (ஆ): வாய்மேடு கிராமத்தில், 66/11 கி. வோ. துணை மின் நிலையம் 24-1-83 முதல் செயல்பட்டு வருகிறது.

(இ) 38.07 லட்சமாகும்.

**திரு. எம். எஸ். மாணிக்கம்:** தலைவரவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் அங்கே வந்து பார்த்த பிறகு இந்த மின் நிலையத்தை அமைத்து, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே செயல்படுத்தியிருக்கிறார்கள். அதற்கான என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனாலும் கூட இதிலேயிருந்து முத்துப்பேட்டை பகுதிக்கும் மின்சாரம் வழங்கப்படுகின்ற காரணத்தால் எந்தப் பகுதிக்கு பயன் கிட்டவேண்டுமென்று கருதினோமோ அந்தப் பகுதிக்கு அந்தப் பயன் கிட்டவில்லை. ஆகையால் வேதாரண்யம் பகுதிக்கு ஒரு புதிய மின் நிலையத்தை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகள் கவனத்தில் கொள்ளப்பட்டு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: தலைவர் அவர்களே, இந்த மின்சார நிலையம் இப்போது அமைந்திருக்கின்ற இடம் கிராமத்தை விட்டு வெளியே, பாதை போக்குவரத்து வசதி இல்லாத இடத்தில்அமைந்திருக்கிறது. அந்தப்பகுதியிலே இன்னும் அதிகமான வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று ஊழியர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதையும் அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்.

சினிமாவை மத்திய, மாநிலப் பொதுப்பட்டியலுக்கு மாற்றும்

திட்டம்

*வினா எண். 65—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:
திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சினிமாவை மாநிலப் பட்டியலிலிருந்து மத்திய மாநிலப் பொதுப் பட்டியலுக்கு மாற்ற மத்திய அரசு ஆலோசிப்பதாகத் தமிழ் மாநில அரசுக்கு தகவல் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதுபற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ): மத்திய அரசால் நியமிக்கப்பட்ட தேசிய திரைப்படக் கொள்கை பற்றிய செயற் குழு (Working Group on National Film Policy) சினிமாவை மாநில அரசு அதிகாரப் பட்டியலில் (State List) இருந்து இந்திய அரசு அதிகாரப் பட்டியல் (Union List) அல்லது ஒருங்கியல் அதிகாரப்பட்டியலுக்கு (Concurrent List) மாற்ற வேண்டும் எனப் பரிந்துரைத்துள்ளது. இப்பரிந்துரையின் மீது மத்திய அரசு இம் மாநில அரசின் கருத்தைக் கேட்டது. அரசு இப்பரிந்துரைக்கு தன்னுடைய தீவிர எதிர்ப்பைத் தெரிவித்து இப்பரிந்துரையை ஏற்க வேண்டாம் என மத்திய அரசிற்குக் கூறியுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, சினிமாவை மாநில அரசினுடைய பட்டியலிலே இருந்து மத்திய அரசுக்கு மாற்ற வேண்டும் என்ற கொள்கையை நம்முடைய தமிழ்நாடு அரசு மறுத்து கடிதம் எழுதி இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்கு மத்திய அரசு ஏதாவது பதில் அளித்து இருக்கிறதா? மத்திய அரசு இதில் முடிவெடுத்து விட்டதா? மற்ற மாநிலங்கள் இந்தக் கொள்கையை நம்முடைய அரசைப் போன்று வற்புறுத்துகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆண்டிலே டெல்லியிலே நடைபெற்ற செய்தித் துறை அமைச்சர்கள் மாநாட்டில் தமிழக அரசின் சார்பில் அதற்கு தீவிரமான எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. அதைப் போல மேற்கு வங்கம் போன்ற சில மாநில அரசுகளும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அதை ஒட்டி, மத்திய அரசு மேற்கொண்டு இதன்மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இப்போதுள்ள நிலையே நீடித்துக் கொண்டு வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, ஒரு பக்கத்திலே நம்முடைய மாநில அரசு மத்திய அரசாங்கத்திடம் இருக்கின்ற அதிகாரங்களைப் பகிர்ந்து மாநில அரசுகளின் அதிகாரங்களை அதிகமாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதைப்பற்றி விசாரிப்பதற்காகக் கூட மத்திய அரசு ஒரு கமிஷனை நியமித்து இருக்கின்ற இந்த காலகட்டத்தில், ஒவ்வொன்றாக மாநில அரசிடம் உள்ள அதிகாரத்தை மத்திய அரசாங்கம் எடுத்துக் கொள்ள முயற்சிகளை செய்வதை இந்த அரசாங்கம் வன்மையாகக் கண்டிப்பதாக இந்த மாமன்றத்திலே தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்புமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த முயற்சிகள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே மேற்கொள்ளப்பட்டன. மத்திய அரசினுடைய செய்தி, ஒலி பரப்புத் துறையிலே மத்திய அரசினுடைய கொள்கை முடிவாக இதை எடுத்துக்கொண்டு இந்த முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்களா என்பது நமக்குத் தெரியவில்லை. ஆனால் அந்த அமைச்சர்களுடைய மாநாட்டிலே தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை ஒட்டியும், நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தை ஒட்டியும், அதற்குப் பிறகு இப்படிப்பட்ட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டாம் என்று இந்தியப் பிரதமர் தடுத்து நிறுத்தியிருப்பதாகத் தகவல் எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால் அதிகாரப்பூர்வமாக அறிவிப்பு எதுவும் வரவில்லை. இன்றைக்கு எழுந்துள்ள சூழ்நிலையில் மத்திய மாநில அரசுகளுடைய உறவுகளையும், அதிகார பகிர்வுகளையும் பற்றி ஆலோசனை தெரிவிப்பதற்காக, கருத்துக்கள் வழங்குவதற்காக மத்திய சர்க்கார் சர்க்காரியா கமிஷன் நியமித்திருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட நிலையில் கண்டனத் தீர்மானமோ அல்லது வேறு வகையான தீர்மானமோ அனுப்ப இப்போது அவசியம் இல்லை.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ அமைச்சர்கள் மாநாடு, அமைச்சர்கள் மாநாடு என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த மாநாடு செய்தி திரைப்படமாக வரும்போது தமிழ்நாட்டு

செய்தித் துறை அமைச்சர் படம் இல்லாமலேயே, மற்ற மாநிலங்களிலே இருந்து வந்த செய்தித்துறை அமைச்சர்களுடைய படங்களைக் காண்பித்திருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

நம்முடைய மாநில பண்பாடு, கலாச்சாரம் போன்றவைகளைத் தெரிந்தவர்களை மத்திய அரசு நியமித்து, சினிமாத் துறையில் நம்முடைய கருத்துக்களைப் பிரதிபலிக்கின்ற வகையில் தணிக்கை நடத்த தமிழக அரசு முயற்சி எடுக்குமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

**திரு மி. வின்செண்ட் :** பேரவைத் தலைவர் அவர்களே, சினிமாவை மாநிலப் பட்டியலிலிருந்து மாற்றுவதன் மூலம் ஏற்படும் சங்கடங்கள் என்ன என்பதை தெரிவிக்க இயலுமா?

(முற்பகல் 9-20)

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது திரைப்படத்துறை இந்த 7-வது ஷெட்யூலில் இருக்கிறது. இந்த 7—வது ஷெட்யூல் என்று அழைக்கப்படுகிற, 7—வது அட்டவணை மத்திய சர்க்காருக்கு திரைப்படங்களை பொது மக்களுக்குக் காண்பிப்பதற்கு அனுமதி அளிக்கிறது. Sanction of cinematograph films for exhibitions என்கிற ஒரு பொறுப்பு மாத்திரம் மத்திய அரசுக்கு இருக்கிறது. அதைத் தவிர மற்ற திரைப்படங்கள் சம்பந்தப்பட்ட எல்லாப் பொறுப்புகளும் மாநில அரசுக்கு இருக்கின்றன. அப்படி மாநில அரசு அந்த அதிகாரத்தின் கீழ்தான் திரை அரங்குகளைக் கட்டுகின்ற அந்த உரிமைகளையும்—எப்போது கட்ட வேண்டும், எப்படிக் கட்ட வேண்டும் என்பது போன்ற விதிகளையெல்லாம் நாம் இன்றைக்கு நிர்ணயித்து இருக்கிறோம். இப்படி திரை அரங்குகள் கட்டுவதற்கான அதிகாரத்தையும் மத்திய சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான், மத்திய அரசினுடைய பட்டியலுக்கு அல்லது ஒருங்கிணைந்த பட்டியலுக்கு மாற்றுவதற்கான இதன் அடிப்படை நோக்கமாகும், அதனாலேதான் அதை கடுமையாக நாம் எதிர்த்து இருக்கிறோம். ஒரு மாநிலத்திலே திரை அரங்குகளைக் கட்ட வேண்டும், எந்த இடத்திலே கட்டவேண்டும். எப்போது கட்ட வேண்டும், ஏன் கட்ட வேண்டும் என்பது போன்ற அடிப்படைத் தேவைகளை ஒரு மாநில அரசுதான் நிர்ணயிக்க முடியுமே தவிர, மத்திய அரசு டெல்லியிலேயிருந்து கொண்டு தீர்மானிக்க முடியாது. இந்த வளர்ச்சி என்பது மாநில அரசோடு ஒட்டிய வளர்ச்சி. ஆகவே இதை விட்டுத்தர முடியாது, அதைக் கேட்பது முறையல்ல. அப்படிப்பட்ட எண்ணத்தை மத்திய அரசு கொள்ளக் கூடாது என்பதில் நாம் திட்டவட்டமாக இருக்கிறோம். உதாரணமாக அந்த அதிகாரத்தை மத்திய அரசு எடுத்துக் கொண்டால் இங்கே, எங்கோ ஒரு கிராமத்திலே ஒரு திரை அரங்கு கட்ட வேண்டுமானால் மத்திய அரசினுடைய அதிகாரிகளுக்கு விண்ணப்பம் போட்டு, அதற்காக காத்துக் கொண்டிருக்க வேண்டும். மாநில அரசின் பொறுப்பிலே அந்த அதிகாரம் இருக்கிற காரணத்தால் 1977 ஆம் ஆண்டில் நம்முடைய மாநிலத்திலே திரைப்படத் துறையே அழிந்து விடுமோ என்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, தென் மாநிலங்களிலே முதலிடம் வகித்து, இந்தியாவிலே முதலிடம் வகித்த நம்முடைய திரைப்படத்துறை அன்றைக்கு முன்னாலே இருந்த அரசு எடுத்த சில முடிவுகளின் அடிப்படையில் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து, சுமார் 1500 திரை அரங்குகள்தான் என்ற அளவில் குறைந்தது. ஆனால் நம்முடைய அரசு வந்ததற்கு பிறகு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக இப்போது 2 ஆயிரமாக வளர்ந்திருக்கிறது. அதன் மூலம் வருவாயும் வளர்ந்திருக்கிறது. ஏழை எளிய மக்களுக்கு இருக்கின்ற ஒரே பொழுது போக்கான இந்த திரைப்படத் துறையை வளர்ப்பதற்கு நம்மால் முடிகிறது. மாநில அரசினிடத்திலே இந்த உரிமை இருக்கிற காரணத்தாலேதான் விரைவிலே அழிந்து கொண்டிருந்த ஒரு தொழிலைத் தடுத்து நிறுத்தி, ஊக்கம் அளித்து இன்றைக்கு அந்த வளர்ச்சியை நாம் பெற்றிருக்கிறோம். இதிலே இருக்கின்ற சங்கடங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். நான் சொன்னதிலேயிருந்து ஏற்பட்டிருக்கிற சங்கடங்கள் அவர்களுக்குப் புரிந்திருக்கும் என்று கருதுகிறேன்.



**சென்னை மிருகக் காட்சி சாலையை வண்டலூருக்கு மாற்றும் திட்டம்.**

* **வினா எண் 66 —திரு. நு. புருஷோத்தமன் :** மாண்புமிகு செய்தி—அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை மிருகக்காட்சி சாலையை வண்டலூருக்கு மாற்றும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) எந்த ஆண்டில் இத்திட்டம் முழுமை பெறும்?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** (அ) ஐந்து கட்டமாக பிரிக்கப்பட்டுள்ள இப்பணியில் தற்சமயம் மூன்றாம் கட்ட பணி நடைபெற்று வருகிறது.

(ஆ) 31—3—1986-க்குள் இத்திட்டப் பணிகள் முடிவு பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**வண்டலூரில் அமைக்கப்படும் வனவிலங்கு சரணாலயம்.**

* **வினா எண். 67—திரு. சி. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு செய்தி—அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வண்டலூரில் அமைக்கப்படும் வனவிலங்கு சரணாலயம் எத்தனை இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படுகிறது?

(ஆ) அந்த வனவிலங்கு சரணாலயத்தில் ஜப்பான் நாட்டைப்போல கம்பியில் ஓடும் இரயில் விட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) தற்போதைய மதிப்பீட்டின்படி சுமார் 300 இலட்சம் ரூபாய்.

(ஆ) வண்டலூர் உயிரியல் பூங்காவில் ''மோனோ'' இரயில் விட அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வண்டலூரில் அமைக்கப்பட இருக்கும் வனவிலங்கு சரணாலயம் எத்தனை ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட இருக்கிறது. அந்தச் சரணாலயத்தில் வனவிலங்குகளை இயற்கையான சூழ்நிலையில் பார்ப்பதற்கு அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை முதலிலே முன்னாலே திட்டமிட்டபோது ஒரு சாதாரண வனவிலங்கு காட்சியகம் என்பதைப்போல ஒரு குறைந்த அளவிலே வைப்பதற்குத்தான் திட்டமிடப்பட்டது. ஆனால் நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதை விரிவுபடுத்தி, இந்தியாவிலேயே சிறந்த வனவிலங்குப் பூங்காக்களில் ஒன்றாக இருக்க வேண்டும் என்ற அந்த அடிப்படையிலே இப்போது, 1275 ஏக்கர் பரப்பளவில் இந்த வனவிலங்கு பூங்கா அமைய இருக்கிறது. அதற்காகத்தான் 3 கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் லையன் சபாரி என்று அழைக்கப்படுகிற, மனிதர்கள் கூண்டுக்குள்ளே உட்கார்ந்து கொண்டு மிருகங்கள் இயற்கையாக, தன்னிச்சையாக சுற்றித் திரிகின்ற காட்சியை பார்ப்பதற்கு ஏற்ற வகையில் இந்தத் திட்டங்கள் எல்லாம் ஆலோசிக்கப்பட்டு வருகின்றன.

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, வண்டலூரில் வனவிலங்கு சரணாலயம் அமைக்கப்படுவது பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதேபோல் மதுரையில் அழகர் கோவில் மலைப் பகுதியில் ஒரு வனவிலங்கு சரணாலயம் அமைப்பது பற்றி இந்த அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, வனவிலங்கு சரணாலயம் என்பது எல்லாஇடத்திலும் அமைப்பதற்கு இயலாது. அதற்கு பொருளாதாரத் தேவைகள் மற்றைய சூழ்நிலைகள் எல்லாம் அதற்கு ஒத்துவர வேண்டும். ஆனால் தமிழக அரசைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு மாவட்டத்திலேயும் ஒன்று அல்லது இரண்டு இடங்களில் சிறிய மிருகக்காட்சி சாலைகள் அமைக்க வேண்டும் என்ற ஒரு கொள்கை முடிவை



எடுத்திருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு கொள்கை முடிவின் அடிப்படையில் அதை வைகையில் வைகை அணைக்கட்டு ஓரத்திலோ அல்லது அழகர்கோவிலில் உள்ள அந்த மலைப்பகுதியிலேயோ, வேறு நல்ல வாய்ப்பான ஒரு பகுதியிலேயோ அப்படிப்பட்ட ஒரு சிறிய மிருகக்காட்சிசாலையை எங்கு அமைக்கலாம் என்பது பற்றி வனத்துறையிடத்தில் கருத்துரை கேட்கப்பட்டிருக்கிறது.

திரு. ந. சிவஞானம் : தலைவர் அவர்களே, இந்த வண்டலூரில் ஏற்பட இருக்கும் வனவிலங்கு சரணாலயம் முழுமையாக உருப்பெற்று எந்த ஆண்டிலிருந்து செயல்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, அந்தப் பணிகளை ஐந்து கட்டங்களாகப் பிரித்து நடத்த வேண்டுமெனத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்போது மூன்றாவது கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 1986-ம் ஆண்டில் அந்தப் பணிகள் முடிவுபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### தமிழகத்தில் கிராம்பு பயிரிடப்படும் மாவட்டங்கள்.

* வினா எண் 68—திரு. டி. மணி: மாண்புமிகு செய்தி—அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்களில் கிராம்பு பயிரிடப்படுகிறது?

(ஆ) 1982-ம் ஆண்டு கிராம்பு மூலம் கிடைத்த மொத்த வருவாய் எவ்வளவு?

(இ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் கிடைத்த வருவாய் எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) தமிழகத்தில் அரசு பொறுப்பில் மேற்குமலைத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் கிராம்பு பயிரிடப்படுகின்றது.

(ஆ) மற்றும் (இ) : கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அரசு கிராம்புத் தோட்டங்களிலிருந்து 1982 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 5,569 வருவாய் கிடைத்துள்ளது.

திரு. டி. மணி: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மாராமலை, வேளிமலைகளில் பயிரிடப்படுகிற அந்தக் கிராம்புத் தோட்டங்களில் இன்றைய பரப்பளவிலிருந்து அதிகப்படியான பரப்பளவிற்கு விஸ்தரிக்க ஏதாவது நடவடிக்கை

எடுக்கப்பட்டுள்ளதா? அதேபோல் இந்தக் கிராம்புத் தோட்டங்களில், வேளிமலையில் கிடைப்பது போல் மாராமலையில் ஆதாயம் கிடைப்பதில்லை என்று தகவல் சொல்லப்படுகிறது. ஆகவே தனியார் துறையில் வருகிற வருவாய்க்கு ஒத்தாற்போல் அரசாங்கத் துறையில் உள்ளதிலும் வருவாய் வரக்கூடிய அளவில் அந்தக் கிராம்புத் தோட்டங்களை அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவர் அவர்களே, 1976-ம் ஆண்டிலே இந்தத் திட்டம் தொடங்கப்பெற்றிருக்கிறது. 1978-ம் ஆண்டு வரை 110 ஹெக்டேர் வனப்பகுதியில் இந்தக் கிராம்பு பயிரிடப்பட்டது. அதற்குப் பிறகு நம்முடைய இன்றைய அரசாங்கம் அதைக் கொஞ்சம் தீவிரமாகப் பரிசீலித்தது. இந்த கிராம்பு பயிரிடுவதற்காக அடர்ந்த இயற்கைக் காடுகளை அழித்துவிட்டுத்தான் இந்தக் கிராம்புப் பயிரையே ஆரம்பிக்கிறார்கள். ஆகவே அடர்ந்த காடுகளை அழிப்பது என்பதை அடிப்படையிலேயே இன்றைக்கு நாம் நிறுத்தியாக வேண்டும் என்ற கொள்கை முடிவு இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் எடுக்கப்பட்டிருக்கிற காரணத்தால் மீண்டும் இப்படிப்பட்ட இயற்கைக் காடுகளை உருவாக்குவதில் மக்களுக்கு மிகுந்த சிரமம் இருக்கிற காரணத்தினால் அதற்கு மேல் இந்த கிராம்பு பயிரிடுகிற அந்தத் திட்டத்தை விரிவாக்குவது இல்லை என்று அரசாங்கம் முடிவு எடுத்திருக்கிறது இந்தக் கிராம்புப் பயிர் ஒரு மென்மையான, குழந்தையை வளர்ப்பது போல் செய்ய வேண்டிய ஒரு காரியமாக இருக்கிறது. ஆகவே அதை அவ்வளவு பொறுப்போடும் அக்கறையோடும் கவனித்துக் கொண்டு வந்தாலும் இயற்கைச் சூழ்நிலை, அந்தந்தக் காலத்தில் மழை இன்மை மற்றும் இயற்கை அமைப்புகளில் மாறுபாடு ஏற்பட்டால் கூட அந்தப் பயிருக்கு கேடுகள் வந்துவிடுகின்றன. ஆகவே அ வகளையெல்லாம் கவனித்து தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று, கண்காணிப்போடு இந்தப் பயிரைப் பொறுத்தவரையில் அந்தத் துறை கவனித்துக் கொண்டு வருகிறது.

**திரு. டி. மணி:** தலைவர் அவர்களே, ஏற்கனவே மாராமலையில் நான்காண்டுகளாக கிராம்புப் பயிரில் தவறான மருந்துகள் பயன்படுத்தியதால் 2000-க்கு அதிகமான செடிகள் நஷ்டமடைந்துள்ளன. காரணம், இந்த வனத்துறையில் எடுத்திருக்கிற நடைமுறை—வனத்துறைக்கு சரியாக இந்த கிராம்புப் பயிரைப் பராமரிப்பதற்கான வழிமுறை தெரியாது என்று கருதுகிறேன். ஆகவே இதை இந்தத் துறையிலிருந்து வேளாண்மைத் துறைக்கு மாற்றி அதைப் பக்குவமாக வேளாண்மைத் துறை கண்காணிக்குமானால் இதைப் பாதுகாக்க முடியும். ஆகவே இதை வேளாண்மைத் துறைக்கு மாற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?



**மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இதைப்பற்றிய கருத்து ஒன்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடமிருந்து அரசுக்கு அப்போதே வந்தது. அதைப்பற்றி தீவிரமாக அரசு ஆராய்ந்து, பரிசீலனை செய்ததில் மருந்து அடித்ததினால் அந்தத் தவறுகள் நிகழவில்லை. அந்தச் சமயத்தில் போதுமான மழை இல்லாத காரணத்தாலும், வேறு பல இயற்கை சூழ்நிலைகள் இருந்ததாலும், அந்தத் தவறுகள் ஏற்பட்டன என்பதை வேளாண்மைத் துறையினரே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். இதிலே பயிற்சி பெற்ற அதிகாரிகள் அங்கே இருக்க வேண்டும். இப்பயிற்சியை வேளாண்மைத் துறையின் மூலமாகவும் பயிற்சி பெறலாம் என்று இப்போது வனத்துறைக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் இப்படிப் பட்ட ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், அடிப்படை அமைப்புகளை ச செய்யாமல், மேலும் விரிவாக்கக் கூடாது என்ற அடிப்படையில், இதிலே மிகுந்த கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

(முற்பகல் 9–30)

**திரு. உ. சுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கிராம்பு வாசனை திரவியம் இன்றையதினம் விலை உயர்ந்த வருமானம் கொடுக்கக் கூடிய ஒரு விளைபொருள். 15 ஆண்டுகளுக்குப் பிறகு, பலனளிக்கக்கூடிய ஒரு நீண்டகால பயிராக இருக்கின்ற காரணத்தினால், உடனடியாக போதிய வருமானம் இதன்மூலம் வருவதில்லை. ஆகவே, ஒட்டு முறையில், விரைவில் பலனளிக்கக்கூடிய வகையில் உற்பத்தி செய்யும் முறையை வனத் துறை ஆராய்ச்சி செய்திருக்கிறதா? அல்லது அதற்கான ஏற்பாட்டைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப் பயிரை விளைவிக்கின்ற திட்டத்தை நிறைவேற்றாததற்கு அதுவும் ஒரு காரணம். நீண்டகாலமாக இருந்து பாதுகாக்கப்பட்டு, அதற்குப் பிறகு, சந்தையிலே அதற்கான கிராக்கியில்லாமல், விலைபோகாத ஒரு சரக்காகும். ஆகவே, மிகக் குறைந்த அளவிலே ஒருசிலரே இதிலே அக்கறை செலுத்துகிறார்கள். கடந்த ஆண்டில் நமக்கு கிடைத்த கிராம்புகள் எல்லாம் நல்ல விலை போகவில்லை என்ற காரணத்தினால், அவைகள் சேகரித்து வைக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, இப்படிப்பட்ட முயற்சிகளை மேற்கொள்கிறபோது, இவைகள் எல்லாம் இயற்கையாகவே வளர்ந்து, ஒருகாலம் வரை வளர்ந்தால்தான், அதற்கான மணமும் வரும். இதிலே ஒட்டுப் பயிரைப் பார்த்தால், அந்த மணம் வருமா என்பது வேறு விஷயம். மேலும் இதைப் பற்றிய ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. வேளாண்மைத் துறை இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறது. அந்த ஆராய்ச்சியிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்ற கருத்துக்களும், எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கும் என்று நான் கருதுகிறேன்.

[1983 அக்டோபர் 28

திரு. சி. சிவப்பிரகாசம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கிராம்பு பயிரிடுவதைப் பற்றிச் சொன்னார்கள். சேலம் மாவட்டத்தில், கொல்லி மலைப் பகுதியில் இப்போது வேளாண்மைத் துறையினரால் பயிரிடப் பட்டு வருகிறது. அந்தப் பகுதியில், மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் இதை ஊடு பயிராக பயிரிடுவதற்கு முயற்சி மேற் கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது பல இடங்களில் வேளாண்மைத் துறை இந்தப் பயிரை விளைவிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. சில தனியார்களும் இதைப் பயிரிடுவதிலே ஈடுபட்டு வருகிறார்கள். ஆனால், கிராம்பைப் பொறுத்தவரையில் ஊடு பயிராக விளைவிக்க முடியாது. அதனால்தான், மிகப் பரிய காடுகளை அழிக்க வேண்டிய சூழ்நிலை வருகிறது. எந்தவிதமாக, எந்த அளவுக்கு நிழல் வேண்டுமோ, அந்த அளவுக்கு நிழல் வேண்டும். எந்த அளவுக்கு சூரியஒளி வேண்டுமோ அந்த அளவுக்கு சூரியஒளி வேண்டும். நான் ஆரம்பத்திலேயே கூறியதுபோல், இந்தப் பயிரை குழந்தையை வளர்ப்பதுபோல் பாதுகாப்பாக வளர்க்க வேண்டியிருக்கிறது. எல்லா இடங்களிலும் இதை ஊடு பயிராக பயிரிட முடியாது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, வன இலாகாவிலே இருக்கும் அடர்த்தியான காடுகளை வெட்டாமல் காலியாக இருக்கின்ற இடங்களில்—கன்னியாகுமரி மாவட்டத்தில் அங்கே நிறைய இடங்கள், அடர்த்தியான மரங்கள் இல்லாமல், காடு புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அந்த மாதிரியான இடங்களில், இந்தப் பயிரைப் பயிரிட அரசு பரிசீலிக்குமா? தற்போது வன இலாகா கீழே நல்ல முறையில் செயல்படவில்லை என்ற கருத்து பரவலாக ஏற்பட்டிருக்கிறது—அதன்காரணமாக, பணப்பயிர்களாகிய ரப்பர், தேயிலை, கிராம்பு, சின்கோனா போன்ற பயிர்களைப் பயிரிட, திறமையாக நடத்துவதற்காக, இலாபகரமாக நடத்துவதற்காக ஒரு முழு நேர தலைவரின் கீழ் ஒரு கழகத்தை, கார்ப்பரேஷனை அமைப்பதற்கான திட்டத்தை அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடர்ந்த மரங்கள் உள்ள காடுகளை அழித்து விட்டு கிராம்பு பயிரிடுவது இல்லை என்று அரசு முடிவெடுத்திருப்பதை நான் முன்பேயே தெரிவித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மரங்கள் இல்லாத பகுதிகளிலேயெல்லாம் அதை வளர்க்க ஆரம்பிக்கலாமே என்று கேட்கிறார். கிராம்பு பயிரிடுவதிலே, அதிலேதான் சிக்கல் இருக்கிறது. எல்லா இடங்களிலேயும் அது வருவதில்லை. குறிப்பிட்ட அளவு உயரத்திலேதான் வருகிறது. குறிப்பிட்ட மண் வளத்திலேதான் வருகிறது. இது போன்ற சூழ்நிலைகள் எல்லாம் பொருத்தமாக அமைய வேண்டும்.



1983 அக்டோபர் 28]

மேலும் அப்படி மரங்கள் இல்லாத பகுதிகளிலேகூட, மரங்களை உருவாக்கி காடுகளை வளர்ப்பதுதான் அரசாங்கத்தினுடைய இந்திய அரசின், மாநில அரசின், திட்டமாக இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட எலிவேஷன் என்று சொல்லப்படும் உயர்ந்த மலைச் சரிவுகளிலே, மலைப்பகுதிகளிலே போய், மண் அரிப்பிற்குக் காரணமாகக்கூடிய இந்தப் பயிர்களை வளர்ப்பது அவ்வளவு சிறந்தது அல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு நிறுவனங்கள், அரசு துறையின் சார்பிலே நடத்தப்படுகிற பல்வேறு துறைகள் போன்றவைகளை ஒருங்கு இணைத்து, அதற்கு ஒரு தலைவரை நியமிக்கலாமே என்று கேட்டிருக்கிறார்கள், அப்படி வனத் துறையினுடைய சார்பிலே தேயிலைத் தோட்டக் கழகம் இருக்கிறது. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் இருக்கிறது, இப்போது ரப்பருக்கும் கழகம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இதிலே நல்ல சிறந்த அனுபவம் உள்ள அதிகாரிகளை போட்டு, கழகங்களை எல்லாம் இணைத்து ஒரு தலைமைப் பொறுப்பிலே தனிப்பட இயக்கலாமா என்பது நல்ல ஆலோசனை. அதை அரசு பரிசீலிக்கும்

சேர்வலார் நீர்த்தேக்கத்தில் மூழ்கும் காடுகளில் உள்ள மரங்கள்.

* வினா எண்:—69 திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு செய்தி-அற நிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் சேர்வலார் நீர்த் தேக்கத்தில் மூழ்கும் காடுகளில் உள்ள மரங்கள் வெட்டப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதன் பரப்பளவு எவ்வளவு?

(இ) அதன் வருமானம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) 132.87 எக்டேர்.

(இ) இதுவரையில் கிடைத்துள்ள வருமானம் ரூ. 15,87,774.32 ஆகும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காடுகளில் உள்ள சில்வர் ஓக் என்ற மரம், வெட்டக்கூடாத மரங்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறதா? ஆம் என்றால், அந்த மரங்கள் 5 ஆண்டுகளில் வளர்ந்து முதிர்ச்சி பெற்றுவிடுகிற காரணத்தால், வெட்டப்படாவிடில் மரங்களும் வீணாகின்றன. மலைப்பகுதியிலே இருக்கக்கூடிய விவசாயினுடைய பொருளாதாரமும் சீர்குலைகிறது. ஆகவே, அதை வெட்ட அனுமதி தர அரசு மறு பரிசீலனை செய்யுமா?

[1983 அக்டோபர் 28

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, சில்வர் ஒக் மரம் 5 ஆண்டுகளில் முதிர்ச்சிபெற்று கெட்டுப் போய்விடாது. 100 ஆண்டுகளுக்கு மேலும் நன்கு ஓங்கி வளர்ந்து நல்ல சிறந்த வனச்செல்வமாக நின்று கொண்டிருக்கக் கூடிய மரங்களிலே ஒன்று அது. ஐந்து ஆண்டுகளில் வெட்டுவது என்று ஆரம்பித்தால், 5 வயது குழந்தையை வெட்டுவதற்கு ஒப்பாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவில்லிப்புத்தூர் கூட்டுறவுப் பண்டக சாலை.

* வினா எண்.—70 **திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் ஏ—1389 கூட்டுறவுப் பண்டக சாலை செயல்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) மற்றும் (ஆ) திருவில்லிப்புத்தூர் கூட்டுறவு பண்டகசாலை சரிவர இயங்காததாலும், அதிக நட்டம் அடைந்ததாலும், புத்துயிரூட்டி மேலும் திறம்பட நடத்த அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு பயனின்றிப் போனதாலும் 29-1-83—ம் நாளன்று கலைக்கப்பட்டு விட்டது.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திருவில்லிபுத்தூர் ஏ—1389 கூட்டுறவு பண்டகசாலை கலைக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அது மிகவும் வரவேற்கத்தக்கது. ஆகையினால் அந்த பண்டக சாலையில் தனி அலுவலரை நியமித்து அதில் தவறு செய்தவர்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பண்டகசாலையைப் பொறுத்தவரைக்கும் 1965 ஆம் ஆண்டிலேயிருந்து தொடர் நட்டத்திலே இயங்கி வந்த காரணத்தால், அது குறித்து ஆராய 65வது பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டது நட்டத்தைப் பொறுத்தவரைக்கும் படிப்படியாக ஆண்டுக்காண்டு நட்டம் அதிகரித்து வந்திருக்கிறது. மைய வங்கியினுடைய உதவி, அரசினுடைய மானியம், இவைகளைக் கொடுத்தும் கூட, இறுதியாக சென்ற ஆண்டு வரை 4,95,531 ரூபாய் நட்டம் என்கிற முறையிலே தான் ஒவ்வொரு ஆண்டும் நட்டம் ஏற்பட்டு வந்த காரணத்தாலே, அந்தக் குழுவைக் கலைத்துவிட்டு, மறு தேர்தல் வைத்துமீண்டும் அந்த நிர்வாகக் குழுவைக் கூட்டி



1983 அக்டோபர் 28]

செம்மைப்படுத்தக்கூட முடியாத நிலை ஏற்பட்ட காரணத்தாலே, நிர்வாகச் சீர்கேடுகள் அதிகமாகி வந்த காரணத்தாலே அங்கே விசாரணை நடந்து வருகிறது. அந்தப் பண்டக சாலை கலைக்கப்பட்டு விட்டது. அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் நலம் கருதி, புதியதாக ஒரு கூட்டுறவு அமைப்பை, நுகர்வோர் அமைப்பை ஏற்படுத்த அரசு பரிசீலிக்கும்.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்த கூட்டுறவு பண்டக சாலைக்கு என்று சில கட்டிடங்கள் இருக்கின்றன. அந்தப் பண்டக சாலை மத்திய வங்கிக்கு எவ்வளவு ரூபாய் கடன் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதற்காக அந்தக் கூட்டுறவு பண்டக சாலையின் சொத்துக்கள் ஜப்தி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, அரசுக்கு 18,800 ரூபாயும் முகவை மாவட்டத்தினுடைய கூட்டுறவு மைய வங்கிக்கு 2,06,369 ரூபாயும் தவணை தவறிய கடனாக செலுத்தப்பட வேண்டிய நிலையில் இருக்கிற காரணத்தினால் அதுகுறித்து ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து கவனத்தில் கொள்ளப்படும்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, செயல்படாத கூட்டுறவு சங்கங்கள் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் சாத்தூரிலே உள்ள சங்கத்திற்குச் சென்ற போது அங்கே கூட்டுறவு நிறுவனமே செயல்பட வில்லை, கிரடிட் சொசைடியும் செயல்படவில்லை, அர்பன் பாங்கும் செயல்படவில்லை, பால் வள சொசைடியும் செயல் படவில்லை. இப்படி ஒன்றுகூட செயல்படவில்லை என்று சொன்னார்கள். எனக்கு அதைக் கேட்டபோது அதிர்ச்சியாக இருந்தது, அவ்வப்போது நிர்வாகத்திலே. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி திருவில்லி புத்தூரைப் பற்றியது, அதைப்பற்றி மட்டும் கேட்க வேண்டும்.

**திரு. சோ. அழகர்சாமி:** திருவில்லிபுத்தூரை ஒட்டியதுதான் சாத்தூர். இப்படிப்பட்ட தவறுகள் ஏற்படாமல் இருக்க வேண்டுமென்றால் தணிக்கைகள், இன்ஸ்பெக்ஷன்கள் அவ்வப் போது நடைபெறவேண்டும். ஆனால் உடனுக்குடன் செய்ய முடியாத நிலை அரசியல்வாதிகள் தலையீட்டின் காரணமாக ஏற்பட்டு இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இனிமேலாவது

உடனடியாக நடவடிக்கை எடுத்து சீராக அந்த நிறுவனங்கள் நடைபெறுவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, இதுபோன்ற கூட்டுறவு அங்காடிகளைப் பொறுத்தவரைக்கும் 1967 ஆம் ஆண்டிற்கு முன்னாலே தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இருந்த அங்காடிகள் என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். 1967 ஆம் ஆண்டிற்கு முன்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இருந்த அங்காடிகளில் தலையீடு ஏற்பட்டு செம்மையுற நிர்வாகம் நடைபெறவில்லை என்று நான் நம்பவில்லை. மாண்புமிகு உறுப்பினர் செலக்ட் கமிட்டியிலே உறுப்பினராக இருந்தார். தமிழ்நாட்டிலே கூட்டுறவுத் துறை செம்மையாகச் செயல்பட்டாலும் அதிக அளவுக்கு வளர்ச்சி பெறமுடியாமல் இருக்கிற நிலைமைக்குக் காரணம் சட்டத்திலே இருந்த சந்துபொந்துகள் தான் என்பதை நாம் அறிவோம். அந்த சந்து பொந்துகளின் காரணமாக தணிக்கை 3, 4 ஆண்டுக்காலம் ஆனபிறகும் செய்யலாம் என்ற நிலைமை இருந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுறவாளர்களாக இருந்தாலும்சரி, பணியாளர்களாக இருந்தாலும்சரி, அதிகாரிகளாக இருந்தாலும்சரி, அந்த சந்து பொந்துகள் அவர்களுக்கு ஊக்கம் அளிப்பனவாக இருந்தன. 65 என்குயரி என்பதுகூட வெறும் கண்துடைப்பு போன்றுதான் இருந்தது. கையாடல் செய்யப்பட்டால் கையாடல் செய்தவர் அந்தப் பணத்தைத் திருப்பிக் கட்டிவிட்டால் குற்றத்திலிருந்து விடுபடக்கூடிய நிலைமையெல்லாம் இருந்தது. அதையெல்லாம் நாம் மாற்றி 3 மாதத்திற்குள் தணிக்கை செய்யப்பட வேண்டும், ஷார்ட்டேஜ் அல்லது டெபிசிட் இருந்தால் அது கிரிமினல் மிஸ்-அப்ரோப்பிரியேஷனாகக் கருதப்பட்டு குறிப்பிட்ட அளவுக்கு மேலே தொகை இருக்குமானால் தண்டனை அளிக்கக்கூடிய முறையிலும் சட்டம் வந்து இருப்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். அதன் மூலமாக தவறுகள் இல்லாத அளவுக்கு நடைபெற அவை வழிவகுக்கும் என்று நான் கூற விரும்புகிறேன்.

### உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்குகள்

*வினா எண். 71—**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தின்கீழ் சென்ற ஆண்டு தொடரப்பட்ட வழக்குகள் எத்தனை?

(ஆ) வியாபாரிகள் தவிர, அப்படிப்பட்ட பொருள்களைத் தயாரித்தவர்கள் என்ற முறையில் தயாரிப்பாளர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகள் எத்தனை?



**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) உணவு கலப்படத் தடுப்பு சட்டத்தின் கீழ் 1980-81, 1981-82ல் பதிவு தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை முறையே 1970, 1728 ஆகும்.

(ஆ) இதில் தயாரிப்பாளர்கள், உற்பத்தியாளர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகள் 1980-81ல் 49—ம், 1981—82ல் 39 மாகும்.

**திரு. செ. செம்மலை:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளிவிவரப்படி பார்த்தால் கூட சிறு வியாபாரிகள் தான் அதிகமாக அதிலே பாதிக்கப் பட்டிருக்கிறார்கள், உற்பத்தியாளர்கள் அல்லது தயாரிப் பாளர்கள் என்ற முறையிலே குறைந்த அளவுக்குதான் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே அந்தச் சட்டத்தின் மூலம் சிறு வியாபாரிகளைத் தண்டிப்பதன் மூலமாக கலப்படத்தை ஒழித்துவிட முடியாது. இப்படி சிறு வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்கிறபோது வழக்கின் எந்தக் கட்டத்திலும் தயாரிப்பாளர்களும் சேர்க்கப்படலாம் என்ற சட்டப் பிரிவு இருந்தும்கூட அது அமல்படுத்தப்படவில்லை என்ற நிலைமை தான் இருக்கிறது முழுக்க முழுக்க கலப்படத்தை ஒழிக்க வேண்டுமானால் சிறு வியாபாரிகள மீது நடவடிக்கை எடுப்பதை விட உற்பத்தியாளர்கள்மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய முறையிலே ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, உற்பத்தியாளர்கள்மீது இப்போது படிப்படியாக ஜாஸ்தியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம். இந்தச் சட்டத்தின் கீழ் 14வது பிரிவிலே

'Section 14 of the Act Provides for mandatory issue of a warrant for the food articles sold by the wholesalers and manufacturers to the retailers.' 20(A) provides for impleading the manufacturers of food articles at any time.

என்று இருக்கிறது. இந்தச் சட்டத்தின்கீழ் நாம் ஒப்படித் தான் செயல்படமுடியும். இந்த இரண்டு ஆண்டுகளைப் பார்த்தால் முன்பு இருந்ததைவிட உற்பத்தியாளர்கள்மீது ஜாஸ்தியாக வழக்குத் தொடர்ந்து நடவடிக்கை எடுத்துக் கொண்டு வந்து இருக்கிறோம் என்று தெரியும்.

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை அமல்படுத்துகிற அதிகாரிகள் இப்போது அங்கே இருக்கிற களப்பணியாளர்கள் மட்டும் தான். அதாவது சானிடேரி இன்ஸ்பெக்டர், ஹெல்த் இன்ஸ்பெக்டர் மட்டும் தான் அமல்படுத்த முடியும். ஆனால் உற்பத்தியாளர்கள் அவர்கள் நெருங்க முடியாத நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட உற்பத்தியாளர்கள்மீது கடுமையான நடவடிக்கை

எடுக்கும் வகையில் மாவட்டங்களில் அதற்காக தனியாக பிரிவுகளை ஏற்படுத்தி அரசு முயற்சி செய்யுமா? சட்டத்தை இன்னும் கடுமையாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சானிடேரி இன்ஸ்பெக்டர்க்கு அந்த வழக்குகள் தொடரக்கூடிய உரிமை இருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சொல்லக்கூடிய அந்த கருத்து அடிப்படையில் வெகு விரைவில் உற்பத்தியாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கும் அவர்கள் தப்பித்துக் கொண்டு போகமுடியாமல் — இப்போது சாமர்த்தியமாக ரீடெய்லர் மீது அவர்கள் பழியை போட்டுக்கொண்டு இருக்கிறார்கள் — உற்பத்தியாளர்கள் வலுவாக சிக்கக்கூடிய முறையிலும் தண்டனை பெறக்கூடிய முறையிலும் வெகு விரைவில் ஒரு கடுமையான சட்டம் வர இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது கடந்த ஆண்டை விட குறைந்து இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் அவர்கள் கொடுத்த புள்ளி விவரத்தில் 1980–81ல் 1,970 வழக்குகள் என்றும், 1981–82ல் 1,728 வழக்குகள் என்றும், உற்பத்தியாளர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகள் 1980–81ல் 49ம், 1981–82ல் 39-ம் ஆகும். முந்தைய ஆண்டை விட அதற்கு அடுத்த ஆண்டு குறைந்து இருக்கிறது நமக்குத் தெரிகிறது. விலைவாசி உயர்ந்து இருப்பதன் காரணமாக கலப்படம் அதிகரித்து இருக்கிறது. சட்டத்தில் சானிடேரி இன்ஸ்பெக்டர்கள் பார்க்கவேண்டும் என்று இருக்கிறது. அவர்களால் மட்டும் இயலாது. இதில் முனைப்பாக ஈடுபட்டு அதற்குத் தனியாக அதிகாரிகள் படையை அமைத்து நடவடிக்கை எடுக்கவேண்டும். மேலும் அதற்கு சட்ட திருத்தம் என்ற முறையில் இந்த சட்டமன்ற கூட்டத்தொடர்லேயே ஒரு சட்டமுன்வடிவு கொண்டுவர அரசு தயாராக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சானிட்டரி இன்ஸ்பெக்டர் மட்டும் கிடையாது.

'Sanitray Inspectors on behalf of local bodies like Municipalities and Corporation, Township and Town Panchayat and Health Inspector of Panchayat Union only.'



இப்போதே ஒரு குழு இருந்து பணியாற்றிக்கொண்டிருக்கிறது. இங்கே நான் சொன்னது முன்பு இருந்ததைவிட இந்த 2 ஆண்டுகளில் என்று சொன்னேன். இந்த 2 ஆண்டுகளை மட்டும் ஒப்பிட்டுப் பார்ப்பது சரியல்ல, சென்ற 5 ஆண்டுகளில் உள்ள புள்ளிவிவரங்கள்

Total number of prosecutions launched against manufacturers during 5 years are 13176. The total number of traders find are 3,844 and 416 were imprisoned and 1074 were fined as well as imprisoned, 4128 were acquitted.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலப்படத்தைத்தடுக்க நடவடிக்கைகள் சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன புள்ளிவிவரங்கள் கொடுத்தாலும் இதை நாம் புள்ளிவிவரப் பிரச்சனையாக பார்க்கக்கூடாது. அவ்வளவு நடவடிக்கைகளுக்குப் பிறகும் கலப்படம் இன்றைக்கு ஒரு மெனேஸிங் புரபோர்ஷனில் அபாயகரமான நிலையை எட்டியிருக்கிறது. ஏராளமான மக்களுக்கு அதனால் வயிற்றுப் புண் உண்டாகக்கூடிய நிலைமை இருக்கிறது. So it has become an established industry. நானே 15 நாட்கள் ஜெனரல் ஆஸ்பத்திரியில் வயிற்றுப்புண் காரணமாக படுக்க வேண்டியிருந்தது. உற்பத்தியாளர்கள்மீது நடவடிக்கை என்பது அல்ல. அந்த கலப்படத்தை செய்யக்கூடிய வியாபாரிகள் கலப்படத்திற்குத்தேவையான பொருட்களை உற்பத்திச் செய்வதற்கு பேக்டரியை அமைத்து இருக்கிறார்கள். அரிசியில் கல்லைச் சேர்ப்பதற்கு பெரிய பாறாங்கல்லை அரைத்து சின்ன சின்ன கற்கள் ஆக்க பேக்டரியை வைத்து இருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம் இந்த கலப்படத்திற்கு காரணம் வெறும் வியாபாரிகளும், உற்பத்தியாளர்களும் மட்டும் அல்ல. இந்த கலப்படத்தை செய்வதற்கான பொருட்கள் உற்பத்தி செய்யக்கூடிய பேக்டரியை எஸ்டாபிளிஷ் செய்து இருக்கிறார்கள். இதை லோகல்பாடிஸ் ஸ்டாப்ஸ் தடுக்கமுடியாது. அந்த பேக்டரிகளை ஒழிப்பதற்கு ஒரு கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு என்ன உத்தேசம் வைத்து இருக்கிறது என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத்தினுடைய உணர்வுகளை முழுமையாக நான் பகிர்ந்து கொள்கிறேன். அது இந்த மன்றத்தினுடைய உணர்வு கூட. ஆனால், ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நமக்கு இருக்கக்கூடிய சிக்கல்களையும் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

Total number of traders fined என்ற விவரத்தை நான் கொடுத்தேன். மொத்தமாக, 12,041 cases were found adulterated. அவர்கள்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அதில், 4128 பேர்கள் 'அக்குவிட்டட்'. நமக்கு வரக்கூடிய பிரச்சனையெல்லாம் நாம் கேஸ் போடுகின்றோம்; வழக்கு தொடருகின்றோம். எவ்வளவு ஆதாரங்களைக் கொடுத்தாலுங்கூட, 4,128 பேர்கள் 'அக்குவிட்' ஆகியிருக்கிறார்கள். அதற்குமேல் நாம் ஒன்றும் செய்ய இயலவில்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தின் அடிப்படையிலே, கடுமையான சட்டத்தைக் கொண்டு வர முடிவு எடுத்திருக்கிறோம். 'சோர்ஸ்' எங்கே என்று பார்த்து, எங்கே உற்பத்தி செய்கிறார்களோ, அந்த ஆட்களையும் இந்தச் சட்டத்தின் எல்லைக்குள்ளே கொண்டு வந்து நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு கணக்கு சொன்னார்கள். இன்னின்னார் மேல் கேஸ் போட்டிருக்கிறோம் என்று. அதிலே, மிளகாய்ப் பொடியில் செங்கல் பொடியைக் கலக்கிறவர்கள் எண்ணிக்கை இருக்கிறதா? அரிசியில் கல்லைக் கலக்கிறவர்கள் எண்ணிக்கை இருக்கிறதா? உணவுப் பொருள்களில் மட்டுமல்லாமல், உற்பத்தி செய்யும் இடத்திலேயே, சிமெண்டிலே சாம்பலையும், நிலக்கரியையும் அரைத்து கலக்கிறார்களே, அந்தமாதிரி நபர்களுடைய பெயர்கள் மற்றும் எண்ணிக்கை இருக்கிறதா என்பதைத் தயவு செய்து அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அத்தனை குற்றங்களையும் செய்திருக்கக் கூடியவர்கள் இதிலே இருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக ஏழு இடங்களில் 'புட் அனாலிஸிஸ் லாபரெட்டரி' அமைத்திருக்கிறோம்.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் குடியிருப்பில்
என்.ஜி.ஓ.க்களுக்கென தனியாக மருந்தகம்
திறக்கும் திட்டம்.

*வினா எண். 72—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் குடியிருப்பில் N.G.O.—க்களுக்கென தனியாக மருந்தகம் ஒன்று திறக்கப்பட வேண்டுமென்ற அரசு ஊழியர்கள் கோரிக்கைமீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இதுபற்றிய குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.



திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் குடியிருப்பிலிருந்து மருந்துவமனைக்கு 3 கிலோ மீட்டருக்கு மேல் செல்ல வேண்டியிருக்கிறது. அதற்குப் போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தால், அந்த மருத்துவமனையிலே இருக்கிற என்.ஜி.ஓ. மருந்தகத்தை, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே இருக்கக்கூடிய சிக்கல் என்னவென்றால், 8 கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளே இன்னொரு மருத்துவமனையோ, மருந்தகமோ கொண்டு வர வாய்ப்பில்லை. ஆகவே, இங்கே பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தின் அடிப்படையிலே கலெக்டரின் குடியிருப்புக்குள்ளே நாம் இன்னொரு மருந்தகத்தை அமைக்கலாமா என்பதைப் பரிசீலனை செய்து உரிய நடவடிக்கையை அரசு எடுத்துக்கொள்ளும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருந்தகத்தை எவ்வளவு நாட்களுக்குள் அங்கே அமைக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்கள்? அதற்கான இடத்தையும் ஏற்கனவே மாவட்ட ஆட்சித் தலைவர் நம்முடைய அரசுக்குப் பரிந்துரை செய்திருப்பதாக அறிகிறேன். எவ்வளவு நாட்களுக்குள் அது அமைக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே. தலைவர் அவர்களே, அதற்காகத் தீவிரமான முயற்சியிலே அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது என்று சொன்னேன்.

மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் காசநோய்ப் பிரிவு
ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண்.73— திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட தலைமை மருத்துவ மனைகளில் காசநோய்ப் பிரிவை (T. B. Ward) ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) அன்ட் ( ) திருச்சி, கன்னியாகுமரி, ஈரோடு மாவட்டங்களைத் தவிர மற்ற எல்லா தலைமையிட மருத்துவமனைகளிலும் காசநோய் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருச்சியில் அனைத்து வசதிகளுடன் கூடிய ஒரு காசநோய் மருத்துவமனையும், நாகர்கோவிலில்

ஒரு காசநோய் சானடோரியமும் இயங்கி வருகிறது. மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் மேலும் காசநோய் பிரிவுகள் கட்ட வேண்டிய அவசியமில்லை. திருப்பூரிலுள்ள தலைமை மருத்துவமனையில் 50 படுக்கைகள் கொண்ட காசநோய் வார்டு கட்டுவதற்கு ஒரு செயற்குறிப்பு தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையில் தனியே பரிசீலனையில் உள்ளது.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருச்சி, குமரி, பெரியார் மாவட்டங்கள் நீங்கலாக, மீதி மாவட்டங்களிலே காசநோய் பிரிவு செயல்பட்டு வருவதாகத் தெரிவித்தார்கள். திருச்சி, குமரி ஆகிய இரண்டு இடங்களிலேயும் காச நோய் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. அதை விரிவுபடுத்த வேண்டுமென்று சொன்னார்கள். காச நோய் பிரிவு ஏற்படுத்தாத இதர மாவட்டங்களிலே, விரைவிலே ஏற்படுத்த அரசு முனைப்போடு செயல்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே ஏற்கனவே மூன்று மாவட்டங்களின் நிலைமைகளைச் சொல்லியிருக்கிறேன். இப்போது இருக்கக்கூடியது கோவை மாவட்டம் ஒன்று தான். கோவை மாவட்டத்திற்காக திருப்பூரில் தொழிலாளர் நல இலாக்கா மூலமாக முயற்சி எடுத்து 50 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையை ஆரம்பிக்க அதனுடைய செயல்குறிப்பு பரிசீலனையில் இருந்து வருகிறது என்று சொன்னேன். பெரியார் மாவட்டத்திலே பெருந்துறையில் ஒரு சானடோரியம் இருந்து வருகிறது. தமிழகத்திலே ஒட்டுமொத்தமாக காச நோய்க்காக 3,604 படுக்கைகள் செயல்பட்டுக் கொண்டு வருகின்றன.

திரு. ஏ. பாலுச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுக்கா மருத்துவ மனைகளில் காச நோய் பரிசோதனை செய்யப்படுகிறதா? கிராமப்புற மக்களின் நலன் கருதி கிராமங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் காச நோய் மருத்துவப் பிரிவு ஏற்படுத்த இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு நல்ல கேள்வி. ஏனென்றால் ஆரம்ப சுகாதார நிலையங்களில் காச நோய்க்காக ஏதாவது பணி செய்ய வேண்டுமென்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்பிருந்து ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் ஒரு மைக்ரோஸ்கோப்பை மலேரியாவை கண்டுபிடிப்பதற்காக செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். காச நோய் ஸ்பூட்டத்தை பரிசோதனை செய்து டியூபர் குளோசிஸ் பேசிலிஸ் இருக்கிறதா என்று கண்டு பிடிப்பதற்காக சென்ற இரண்டு ஆண்டுகளாக ஒரு மாதத்திற்கு





13605 சென்னை-600 008.

சராசரியாக 30-லிருந்து 50 நோயாளிகளை நாம் பரிசோதனை செய்து அதிலே சிலபேரை நோய் இருக்கிறது என்று கண்டு பிடித்து இருக்கிறோம். ஆரம்பக் கட்டத்திலேயே அளிக்கும் வகையில் ஆரம்பச் சுகாதார நிலையங்களில், அகில இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்குச் செயல்பட்டுக் கொண்டு வருகிறோம்.

செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மகளிர் விடுதிக்கான கட்டிடம்.

*வினா எண் 74—திரு சி. கணேசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மகளிர் விடுதிக்காகக் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடம் செயல்படாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயல்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம். (ஆ) இம்மருத்துவக் கல்லூரிக்கான கூடுதல் மகளிர் விடுதி கட்டி முடிக்கப்பட்டுள்ளது, ஆனால் இம்மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில் மகளிரின் எண்ணிக்கை ஆண்களைவிட விடுதியில் அதிகமாக உள்ளதால் ஆண்களுக்கான இரு விடுதிகளில் ஒன்று மகளிர்க்கு ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, மகளிர்க்காக புதிதாக கட்டப்பட்ட கட்டிடத்தை இந்த ஆண்டு சேரவிருக்கும் ஆண்களுக்கு விடுதியாக கொடுக்கப்படும்.

ஆனைமலை ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் திட்டம்.

*வினா எண் 75.—திரு எம். வி. இரத்தினம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி தாலுகா ஆனைமலை ஒன்றியத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் கட்டுவதற்கு நிலம் ஆர்ஜிதம் செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) & (ஆ) பொள்ளாச்சி தாலுகா, ஆனைமலை ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்கு நிலம் ஆர்ஜிதம் செய்ய கோயம்புத்தூர் மாவட்ட வருவாய் அதிகாரியுடனும் ஆரம்ப சுகாதார நிலைய இயக்குநருடனும் கடிதம் மூலம் தொடர்பு கொண்டு பரிசீலிக்கப்படுகிறது.

திரு. எம். வி. இரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டுகளாக ஆரம்ப சுகாதார நிலையமானது ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்டு சிறிய கட்டிடத்தில் நடத்தப்பட்டு வருகிறது. அந்தப் பகுதியினுடைய மக்களின் தேவையைப் பார்த்தால் அந்த சிறிய மருத்துவ மனை போதாது என்பதால் உடனடியாக நிலத்தை ஆர்ஜிதம் செய்து, அரசால் ஒதுக்கப்பட்டிருக்கிற நிதியை வைத்து புதிய கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 22-1-1982-ம் தேதி ஜி.ஓ.எம்.எஸ். எண்.94-ல் உத்தரவு போட்டோம். அதற்கு பிறகு ஐந்து ஏக்கர் நிலம் கொடுக்க வேண்டுமென்றும், 10 ஆயிரம் ரூபாய் கேஷ் கண்ட்ரிபியூஷன் கொடுக்க வேண்டுமென்றும், அந்தப் பகுதி மக்களைக் கேட்டிருக்கிறோம். அவ்வாறு கேட்பது வழக்கம் என்பதால் கேட்டோம். அவர்களும் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். அதிலே தாமதம் ஏற்பட்டது. அதற்குப் பிறகு இன்னொரு பகுதியில் 8.305 ஏக்கர் ட்ரை லேண்ட்ஸ் 49,455 ரூபாயில் எடுத்துக்கொள்வதற்கு முயற்சித்தோம். அதற்கிடையில் ஐந்து ஏக்கர் நிலம் கொடுக்கிறார்களா என்பதைப் பார்க்க வேண்டுமென்று ஒரு ஆடிட் அப்ஜெக்ஷன் ஏற்பட்டது. ஆகவே அதனை பார்த்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்— விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. எம். வி. இரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நிலத்தை அரசு ஆர்ஜிதம் செய்யும்பொழுது அதற்குக் கட்ட வேண்டிய தொகையை பொதுமக்கள் சார்பாக உடனடியாகக் கட்டுவதாக மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிக்குக் கடிதம் மூலம் நான் தெரிவித்திருக்கிறேன். ஆகவே, நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்தத் தொகை கொடுக்கப்படும் என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நிலத்தைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். உடனடியாக அது செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





திருச்சி பொன்மலைப் பகுதியிலுள்ள சாராய ஆலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர்.

*வினா எண் 76.—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு சுற்றுப்புற சூழல் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி பொன்மலைப் பகுதியிலுள்ள சாராய ஆலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரால் பொது மக்களுக்கு சுகாதாரக்கேடு ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கழிவுநீரை முறையாக அப்புறப்படுத்த வழிவகை செய்ய அரசு அறிவுறுத்துமா?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: (அ) ஆம். (ஆ) கழிவுநீரை முறையாக சுத்திகரித்து அப்புறப்படுத்த வேண்டுமென்று திருச்சி எரி சாராய தொழிற்சாலைக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. சமீபத்தில் அரசு மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் உயர் அதிகாரிகளும் இத்தொழிற்சாலையைப் பார்வையிட்டு நேரடியாகவும் அறிவுரை வழங்கியுள்ளார்கள். தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. எஸ். இராசாராமன்: பேரவைத் தலைவரவர்களே; பொன்மலைப் பகுதியில் அரியமங்கலம் டோல்கேட்டில் வாழ்கின்ற மக்கள் சுகாதாரக் கேடுகளுக்கு ஆளாகிறார்கள். அந்தக் கழிவு நீர் அங்கேயுள்ள வாய்க்கால்களில் கலந்துவிடுவதால் விவசாயப் பயிர்களுக்குப் பாய்ந்து விவசாய உற்பத்தி பாதிக்கப்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். ஆர். இராதா: மாண்புமிகு தலைவரவர்களே, அரசு அறிந்துதான் அதற்கான நடவடிக்கையிலே ஈடுபட்டிருக்கிறது.

திரு. எஸ் இராசாராமன்: பேரவைத் தலைவரவர்களே; அமைச்சரவர்கள் அரசு அறிந்துதான் நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாகக் கூறினார்கள். என்னென்ன நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. அங்கே ஓடுகின்ற கழிவு நீரைக் குழாய்களின் மூலமாக பொதுமக்கள் இல்லாத இடத்திற்கு அப்புறப்படுத்துவதற்கு முன்வருமா என அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு எஸ். ஆர். இராதா: மாண்புமிகு தலைவரவர்களே, தற்பொழுது அங்கேயுள்ள ஆலையிலிருந்து வெளிவரும் துர்நீரை மாற்றுவதற்கு ட்ரிட்மெண்ட் பிளான்ட் ஒன்று இருக்கிறது. அது தற்பொழுது சரியாகச் செயல்படாத நிலையில் இருப்பதால், அதைச் சரியாகச் செயல்படுத்தி அங்கேயிருந்து வெளிவரும் நீரைச் சுத்திகரித்து விவசாயத்திற்குப் பாதிப்பு இல்லாத நிலையில் செய்ய வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளில் தற்போது ஈடுபட்டிருக்கிறோம்.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட ஆலைகளில் மட்டுமல்ல, தோல்பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்தும் கழிவு நீர் வெளியேற்றப்பட்டு கீழ் பகுதியில் பாய்ந்து அங்கேயுள்ள நிலங்களிலும், ஏரிகளிலும் பாய்ந்த பாசனத்திற்குப் பாதிப்பு ஏற்படுகிறது. இதனால் அந்தப் பயிர்கள் எல்லாம் சாவியாகக் கூடிய நிலைமை வடாற்காடு மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு நிரந்தரப் பரிகாரம் காண்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்வி திருச்சி பொன்மலைப் பகுதியைப் பற்றியது. வடாற்காடு மாவட்டம் சம்பந்தமாகக் கேள்வி வரும்பொழுது உறுப்பினரவர்கள் கேட்கலாம்.

திரு. எல். இளையபெருமாள்: பொதுவாக எல்லா இடங்களிலும் இப்படி நடக்கிறது. ஆகவே திரு. துரைமுருகன் கேட்ட கேள்வியை அனுமதிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதில் இருந்தால் அமைச்சரவர்கள் சொல்லலாம்.

மாண்புமிகு திரு எஸ், ஆர். இராதா: மாண்புமிகு தலைவரவர்களே, திருச்சியிலே இருக்கின்ற எரி சாராயத் தொழிற்சாலையின் நிலைமை வேறு. திருச்சி சம்பந்தப்பட்ட கேள்வியில் வடாற்காடு மாவட்டத்திற்கு மாண்புமிகு உறுப்பினரவர்கள் என்னை அழைத்துச்செல்கிறார்கள். அங்கே உள்ள நிலைமைகள் வேறு. வாணியம்பாடி. திண்டுக்கல் சம்பந்தமாக ஒரு குழு போடப்பட்டு அதன் முடிவு அரசுக்கு வந்திருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு, அறிக்கைகள் கேட்கப்பட்டு, விடைகள் வாங்கப்பட்டு நடவடிக்கையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**வடாற்காடு மாவட்டத்தில் பனைப்பொருள்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை துவக்கும் திட்டம்.**

*வினா எண் 77—திரு த. வேணுகோபால்: மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டத்தில் பனைப்பொருள்களைக் கொண்டு கையினால் (Handicrafts) உற்பத்தி செய்யும் தொழிற்சாலை துவக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?



மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி? வட ஆற்காடு மாவட்டம், வந்தவாசி ஒன்றியம், மங்களம் மாமண்டூர் கிராமத்தில் பனைப் பொருள்கள் உற்பத்தி நிலையம் ஒன்று நிறுவ அரசு அண்மையில் அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த தமிழ் நாடு கிராமத் தொழில் வாரியத்தால் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் வந்தவாசி ஒன்றியத்தில் மங்களம் மாமண்டூர் கிராமத்தில் பனைப்பொருள் தொழிற்சாலை ஆரம்பிப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அது எப்போது ஆரம்பிக்கப்படும்? அதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அரசு ஆணை வழங்கப்பட்டு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

அதனுடைய மதிப்பீடு 34 இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய். 34 இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய் திட்டச் செலவில் அந்த பனைப் பொருள் உற்பத்தி நிலையம் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மங்களம் மாமண்டூர் கிராமத்தில் ஆரம்பிக்கப்படும் பனைப் பொருள் தொழிற்சாலையின் மதிப்பீடு 34 இலட்சம் ரூபாய் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அங்கே எத்தனை பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்? அது கையால் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை என்ற காரணத்தால் பெண்களுக்கு முன்னுரிமை அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி; மாண்புமிகு, பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினால் 481 ஆதி திராவிடர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும். 4-8-83 முதல் இந்தத் தொழிற்சாலையில் 120 நபர்களுக்குப் பனைத் தொழிலில் பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றது.

**நன்னீர் இறால் உற்பத்தி பற்றிய ஆராய்ச்சி.**

*வினா எண் 78—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னீர் இறால் உற்பத்தி பற்றிய ஆராய்ச்சி அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) அதற்காக 1982-8[illegible]-ம் ஆண்டு ஆன செலவு எவ்வளவு?

(இ) உற்பத்தியின் மதிப்பு எவ்வளவு?

**மாண்புமிகு திரு க. கலைமணி:** (அ) மீன்துறை செங்கற்பட்டுக்கருகில் மாதிரி நன்னீர் இரால் பண்ணையொன்றை நிறுவி அங்கு இரால் உற்பத்தி பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளது.

(ஆ) 1982-83 ஆம் ஆண்டில் இரால் ஆராய்ச்சிப் பண்ணைப் பணியாளர்களுக்கு ரூ. 8,605.15ம், பண்ணைப் பராமரிப்புக்காக ரூ. 1,221,05ம் ஆக கூடுதல் ரூ. 9,826.20 செலவு செய்யப்பட்டுள்ளது.

(இ) இப்பண்ணையில் ஆராய்ச்சிகள் மட்டுமே நடைபெறுகின்றன. இவ்வாராய்ச்சிகளின் போது 19.20 கிலோ இரால் மீன்களும் 14.80 கிலோ மற்ற மீன்களும் உற்பத்தி செய்யப்பட்டன; இவற்றின் மொத்த மதிப்பு ரூ. 340.20 வணிக ரீதியில் இரால் உற்பத்தி இன்னும் மேற்கொள்ளப்படவில்லை.

**திரு ரா கிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, செங்கற்பட்டுக்கு அருகாமையில் உள்ள நன்னீர் இரால் உற்பத்திப் பண்ணையினை நான் வெளியில் இருந்து பார்த்தபோது அந்த இடம் காய்ந்து போய் கட்டடம் கூட அடைக்கப்பட்டு இருந்தது. அதை நான் பஸ்ஸில் போகும்போது பார்த்திருக்கிறேன், ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது கிட்டத்தட்ட 20 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்து ரூபாய் 340 வருமானம் ஈட்டியுள்ளதாகக் கூறியிருக்கிறார்கள் இதனை ஒரு அற்புதமான சாதனை என்றுதான் சொல்ல வேண்டும். சில தனியார்கள் கூட இப்படிப்பட்ட ஏற்பாடுகளைச் செய்து அந்நியச் செலாவணியை ஈட்டக்கூடிய நிலைமை இருக்கின்றது. அதாவது மிக அதிகமான தொகையை ஈட்டக் கூடிய இந்த இரால் மீனை ஒரு சிறப்பான முறையிலே வளர்ப்பதற்கு ஆக்கபூர்வமான திட்டம அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு க. கலைமணி:** தலைவர் அவர்களே, அந்த இரால் வளர்ப்பு தற்போது ஆராய்ச்சி நிலையில் இருக்கின்றது. அது வணிக ரீதியில் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**1982ம் ஆண்டில் கொள்முதல் செய்யப்பட்ட சங்குகள்.**

*வினா எண் 79—**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் கடலில் எடுக்கப்பட்ட சங்குகள் 1982-ம் ஆண்டில் எவ்வளவு கொள்முதல் செய்யப்பட்டது?



(ஆ) அவற்றில் விற்பனை போக கையிருப்பின் எண்ணிக்கை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. க. கலைமணி:** (அ) 1982 ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் சங்குகுளிப்பு நடைபெறவில்லை. ஆனால் மண்டபத்தை அடுத்துள்ள கன்னிராஜபுரம், இராமேஸ்வரம் ஆகிய இடங்களில் 1981-82 ஆம் ஆண்டு சங்குகுளி பருவத்தில் மொத்தம் 2,96,735 சங்குகள் கொள்முதல் செய்யப்பட்டன.

(ஆ) கொள்முதல் செய்யப்பட்ட சங்குகள் இருப்பில் உள்ளன. அவைகள் இன்னும் விற்பனை செய்யப்படவில்லை. விற்பதற்கு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(முற்பகல் 10-10)

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் 1981-82-ஆம் ஆண்டு சங்குகுளி பருவத்தில் மொத்தம் 2,96,735 சங்குகள் கொள்முதல் செய்யப்பட்ட சங்குகள் கையிருப்பில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த சங்குகள் வாங்குகின்ற நேரத்தில் அவை அரசாங்கத்தின் மூலம் தரம்பிரித்து வாங்கப்படுகிறதா? என்ன விலைக்கு வாங்கப்படுகிறது? அப்படி வாங்கும் சங்கு அரசு மூலமாக விற்கப்படுகிறதா அல்லது டெண்டர் மூலமாக அல்லது வியாபாரிகள் மூலமாக விற்கப்படுகிறதா? அவை எங்கே விற்கப்படுகின்றன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. கலைமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலக் கணக்காய்வுத் தலைவரிடமிருந்து ஒப்படை சான்றுகள் பெறப்பெற்றபிறகு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். சமீபகாலத்தில் தமிழ்நாடு கைவினைப்பொருள் மேம்பாட்டு இணையம் சங்கு ஆபரணங்கள் செய்வதற்காக வாங்கியிருக்கிறது. இந்த சங்கு ஆபரணங்கள் செய்யும் தொழில் மேற்கு வங்காளத்தில் நல்ல வளர்ச்சி அடைந்துள்ளது. அங்கே இதற்கு நல்ல மார்க்கெட் இருக்கிறது. ஆகவே, மேற்கு வங்காளத்திற்கு இது விற்பனை செய்யப்படுகிறது.

**திரு. பொ. உத்திராபதி:** தலைவர் அவர்களே, இந்த சங்கு மூலமாக மோதிரம், பெண்கள் அணியும் பவள மாலை; இன்னும் பல்வேறு பொருள்கள் மேற்கு வங்காளத்திலே செய்யப்பட்டு, இங்கே கொண்டு வந்து விற்கப்படுகிறது. அதனால் விலை அதிகமாகிறது. தமிழகத்திலே கிடைக்கும் இந்தச் சங்கைக் கொண்டு. இங்கேயே அப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலையை இராமநாதபுரம் மாவட்டத்தில் சிறிய அளவிலாவது அமைத்தால் இதன் மூலமாக ஒரு நூறு பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். அவற்றின் விலையும் குறைவாகயிருக்கும். அந்த அடிப்படையில் சங்கு மூலமாக பொருள்கள் உற்பத்திச் செய்யும் தொழிற்சாலை ஒன்றை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. கலைமணி: தலைவர் அவர்களே, அரசு அதை ஆராயும்.

மேட்டூர் மீன்பிடி தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்

*வினா எண் 80—திரு.செ. செம்மலை: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் மேட்டூர் மீன்பிடி தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து மீன்பிடிக்க நிர்ணயித்துள்ள உரிமத் தொகையை குறைக்க கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு.க. கலைமணி: (அ) ஆம். (ஆ) மேற்படி சங்கத்திடமிருந்து, 1-4-1983 முதல் புதிய உரிமம் பெறுவதற்கான கட்டணத்தைக் குறைத்து, ரூ. 10-க்குமேல் போகாமல் நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை பெறப்பட்டது. இதனை மீன்துறை இயக்குநர் பரிசீலித்து, தற்போது அமுலில் உள்ள உரிமைக் கட்டணத்தொகையைக் குறைக்க அரசுக்குப் பரிந்துரைக்க இயலவில்லை என்று 19-6-1983 நாளிட்ட தமது கடிதத்தில் சங்கத்திற்குத் தெரிவித்துவிட்டார்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் நீர்த்தேக்கத்தில் இருக்கும் உள்நாட்டு மீனவர்கள், குறிப்பாக கூணான்டியூர், கீரைக்காரனூர் போன்ற இடங்களில் உள்ள உள்நாட்டு மீனவர்கள், ஒரு நியாயத்தின் அடிப்படையிலே அந்தக் கோரிக்கைய வைத்தார்கள். ஏற்கனவே அந்த மீனவர்களிடமிருந்து உரிமத்தொகை வசூலிக்கப்பட்டு வந்தது. ஆனால் இப்போது அரசாங்கம் ராயல்டி என்று ஒரு தொகையைப் போட்டு வசூலித்துக் கொண்டிருக்கிறது. எனவே ஒரு தொழிலுக்கு இரண்டு வரிகள் தேவையில்லை என்ற அடிப்படையில் துறையின் சார்பில் அந்தக் கோரிக்கையை அவர்கள் எழுப்பினார்கள். உரிமத் தொகை வசூலிப்பதன் மூலமாக உரிமைதாரர்களை வரைபறுக்கலாம் என்ற அடிப்படையில் அதை வசூலிப்பதாகச் சொல்லப்படுகிறது. உள்நாட்டு மீனவர்கள் சார்பில் எங்களுடைய கோரிக்கையெல்லாம், புரட்சித் தலைவர் அரசு மீனவர்களுக்கு நிறைய சலுகைகளை வழங்கியிருக்கின்ற இந்த நேரத்தில், ஏற்கனவே ராயல்டி வசூலித்து வருகின்ற காரணத்தால், உரிமத்தொகையை முழுமையாக நீக்காவிட்டாலும், உரிமத் தொகை 125 ரூபாய் என்பதைக் குறைக்கவாவது, மீண்டும் கோரிக்கை வந்தால், பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. கலைமணி: தலைவர் அவர்களே, மீண்டும் கோரிக்கை வந்தால் அதைப் பரிசீலிக்கலாம்.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. இரா. கருப்பையா: தலைவர் அவர்களே, திருச்சி, மதுரை, வேலூர் ஆகிய சிறைச்சாலைகளில் உள்ள கைதுகள் கடந்த 18-ம் தேதியில் இருந்து உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பற்றி ஒத்திவைப்புத் தீர்மானத்தை எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் கொடுத்து இருக்கிறார்கள். அதிலே உங்களுக்கு மட்டும் தனிப்பட்ட உரிமையில்லை. இன்றைக்கு வேறு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது.

திரு. ரா. உமாநாத்: 18-ஆம் தேதியில் இருந்து அவர்கள் உண்ணாவிரதம் இருந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் ஒரு வாய் இல்லாப் பூச்சிகள், இவ்வளவு நாட்கள் ஆகியும் அரசாங்கம் அசையாமல் இருந்தால் என்ன அர்த்தம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அண்மையில் பெய்த மழை காரணமாக ஏற்பட்ட விளைவுகள் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும் என்று நேற்றைக்குக் கேட்டுக்கொண்டதற்கிணங்க இன்றைக்கு அது பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பெற இருக்கிறது. இந்தப்பிரச்சினை குறித்து நாளைக்கு வேண்டுமானால் எடுத்துக்கொள்ளலாம்.

திரு. பொ. உத்திராபதி: தலைவர் அவர்களே, தமிழகத்திலே நீண்ட நாட்களாக தேர்தல் நடைபெறவில்லை. சில நாட்களுக்கு முன்னால் 20 கட்சியினர் கூட்டம் நடைபெற்றது.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தேர்தல் என்பது பொதுப் பிரச்சினை. அது இதிலே வராது.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### சென்னை பகுதியில் அடைமழையினால் ஏற்பட்டுள்ள சேதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ரா. கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், சு. பாலன், தி. கா. நல்லப்பன், செ. சிவசாமி, மு. அம்பிகாபதி, என். ஏ. பூங்காவனம், வெ. இராஜசேகரன் ஆகியோர் ''சென்னை பகுதியில் அடைமழையின் காரணமாக சிறுவன் இறந்தும் ஏராளமான வீடுகள் இடிந்தும் பாதித்தும் உள்ளதால் பொது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, கடந்த ஒரு வார காலமாக சென்னை, தஞ்சை. தென்னாற்காடு போன்ற மாவட்டங்களில் காற்றழுத்தம் காரணமாக உருவான புயலால் பெருத்த மழை பெய்து, அந்தப் பகுதிகளில் அதிகமான சேதம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக சென்னை பகுதியில் கிட்டத்தட்ட 4,000 குடிசைகளுக்குமேல் பாதிக்கப்பட்டுள்ளன; 21,150 பேர்களுக்குமேல் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட நிலைமை அநேகமாக ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர், நவம்பர் மாதங்களில் எற்படுவது வழக்கமாக இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுவதும். ஏற்பட்ட பிறகு நிவாரணப்பணிகள் மேற்கொள்ளப்படுவதும் ஒரு தொடர் கதையாக இருக்கிறது. ''வருமுன் காப்பது மந்திரிக்கு அழகு'' என்பது வாக்கு. ஏற்கெனவே முன்னெச்சரிக்கையாக இப்படிப்பட்ட சேதங்களைத் தடுப்பதற்காக; இழக்கின்ற உயிர்களைக் காப்பதற்காக இந்த அரசு ஆக்கப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பது எங்களுடைய கோரிக்கை, வேண்டுகோள். இப்படிப்பட்ட காலங்களில் சேதங்கள் ஏற்படுவதைத் தடுக்கக்கூடிய முறையிலே மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஏதாவது ஆலோசனை கூறப்பட்டிருக் றதா? அதற்கான ஒரு நிரந்தரமான திட்டம் இந்த அரசிடம் இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

றட்சி வாரணப்பணி முடிந்து, இப்போது வெள்ள நிவாரணப் பணி என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் இப்படிப்பட்ட நேரங்களில் நிவாரணப் பணிகள் தொடங்கப்படுவதும் அதனால் சில விவகாரங்கள், கோளாறுகள் நடைபெறுவதும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட் டிருக்கின்றன. இந்த அரசைப் பொறுத்தவரையில் இப்படிப்





பட்ட நிவாரணப் பணிகள் என்ற பெயரால் 1976 ஆம் ஆண்டு முதல் பாதிக்கப்பட்டவர்களுக்கு 200 ரூபாய், 5 கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய், ஒரு வேட்டி, ஒரு சேலை என்று வழங்கப்படுகிறது. இது போதாது. இன்றைக்கு இருக்கக்கூடிய விலைவாசி காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டும் புனர் வாழ்வு பெறுவதற்கு இந்த உதவி போதாது. அவர்கள் புனர்வாழ்வு பெறுவதற்குத் தேவையான அனைத்துப் பணிகளுக்கும் அரசு உதவி செய்ய வேண்டும். அல்லது இந்த அரசே பாதிக்கப்பட்ட குடிசைகளைக் கட்டிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டியது மிக மிக அவசியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு அரிசி 5 கிலோ என்று வழங்கப்படுகிறது. ஏற்கெனவே, பாதிக்கப்பட்டவர்கள் இரவு எங்கே தங்குவது என்பது ஒரு பரிதாபகரமான நிலைமை. அந்தச் சூழ்நிலையில் அவர்கள் எந்த வேலைக்கும் போக முடியாத சூழ்நிலை ஏற் படுகிறது. அவர்களுக்கு 5 கிலோ அரிசி மட்டும் வழங்கினால் அது 4,5 பேர்கள் உள்ள ஒரு குடும்பத்திற்கு ஒரு நாளைக்குத் தான் போதுமானதாக இருக்கும். கிட்டத்தட்ட ஒரு வாரம் வரையில் அவர்கள் எந்த வேலைக்கும் போக முடியாது. ஆகவே, இந்த 5 கிலோ அரிசி போதாது என்பது என்னுடைய கருத்து. அதை அரசு பரிவோடு கவனித்து, தாராளமாக அரிசி வழங்க, அவர்கள் வேலைக்குத் திரும்புகின்ற வரையில் அரிசி வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

மேலும் இப்படிப்பட்ட வெள்ளச்சேதங்கள் ஏற்படுகின்ற போது பொதுச் சுகாதாரம் கடுமையாகப் பாதிக்கப் படுகிறது. ஆகையால் மக்கள் நல்வாழ்வுத் துறையும் இப்படிப்பட்ட நேரங்களில் சில ஆக்கப்பூர்வமான பணிகளைச் செய்வதற்கு ஒரு நிரந்தரமான ஏற்பாடு செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் இப்படிப்பட்ட நேரங்களில் முன்னெச்சரிக்கையாக இருந்து தடுப்பு நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அல்லது மற்ற அதிகாரிகளோடு தொடர்பு ஏற்படுத்தப்பட்டு, உருப்படி யான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கும் உரிய நடைமுறை களை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் ஆக இப்படிப் பட்ட பல்வேறு விஷயங்களை இங்கே விரிவாக விவாதிக்க வேண்டியிருப்பதால் இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இதுகுறித்து விவாதிக்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-20.)

திரு. சு. பாலன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அண்மையில் வடமேற்கு பருவ மழை ஆரம்பித்ததின் காரணமாக அடைமழையின் காரணமாக சென்னையில் பல பகுதிகளில், தாழ்வான பகுதிகளின் குடிசைப் பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்

டுள்ளது. மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட நேரில் சென்று நிவாரணப் பணியை மேற்கொண்டதை பார்வையிட்டார். அதே நேரத்தில் மாநகராட்சி அதிகாரிகள் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்றதால், அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்ததாக பத்திரிகையிலே பார்த்தோம். பெரம்பூர், பட்டாளம், புளியந்தோப்பு போன்ற பகுதிகள் பள்ளப் பகுதிகளாகும். சிறு மழை பெய்தாலும் அங்கே தண்ணீர் தேங்கி குடிசைகளின் சுவர்கள் இடிந்து விழுகின்ற நிலை இருக்கிறது.

ஒவ்வொரு முறையும் வெள்ளம் ஏற்படுகின்றபோதும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்கப்படுகிறது. இதற்கு என்ன காரணம் என்பதை மாநகராட்சி அதிகாரிகள் கண்டுபிடிக்க வேண்டும். நாங்கள் சொன்னாலும் அவர்கள் கேட்க வேண்டும். இங்கே ''ஓட்டேரி நல்லா'' என்ற ஒரு ஆறு செல்கின்றது. சென்னையில் உள்ள மழைத் தண்ணீர் வடிகால் மூலமாக வெளியேற்றப்பட்டு பக்கிங்காம் கால்வாயில் வெளியேறிவிடுகிறது. இன்றைக்கு மாநகராட்சியால் கட்டப்பட்ட வடிகால் வாய்கள் நீண்டகாலமாக மண் அடிப்பட்டு, அதன் காரணமாக மழை நீர் போக முடியவில்லை. ஓட்டேரி நல்லா முழுவதும் மண் நிரப்பப்பட்டு, தண்ணீர் வேகமாகப் போக முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக தண்ணீர் தேங்கி இருக்கக் கூடிய நிலை இன்றைக்கு இருக்கிறது. இது குறித்து மாநகராட்சி அதிகாரிகள் பி.டபிள்யு.டி. அதிகாரிகளுக்கு தெரிவித்தும் அந்த ஓட்டேரி நல்லா-வில் மண் எடுக்கப்படவில்லை.

இப்போது கூட 25-வது வட்டத்தில் இருக்கின்ற என்.எஸ்.கே. நகர், அண்ணா நகர், காமராஜர் நகர், மேல்பட்டி பொன்னப்ப முதலி தெரு, அம்பேத்கார் தெரு போன்ற இடங்களில் இன்றைக்கும் தண்ணீர் தேங்கி, வெள்ளம் ஏற்பட்டு மக்கள் அங்கே நடமாட முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது, எனவே நான் சொல்ல விரும்புவது இந்த ஓட்டேரி நல்லா ஆற்றில் உள்ள மண்ணை வாரிவிட்டால் இப்படிப்பட்ட நிலை இருக்காது. உடனடியாக தண்ணீர் வெளியேறிவிடும். கார்ப்பரேஷன் கட்டி உள்ள வடிகால் கால்வாய் உடனடியாக தூர் வாரப்படவேண்டும். அப்படிச் செய்தால்தான் இப்படி தேங்கிக் கிடக்கின்ற தண்ணீரை வெளியேற்ற முடியும். இப்படிப்பட்ட விவரங்களை எல்லாம் விரிவாக விவாதிப்பதற்கு இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னை மாநகரத்தில் பெய்த கடுமையான மழையின் காரணமாக ஏழை எளிய மக்கள் லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு புறத்தில் வறட்சி ஏற்பட்டு, கோவை மாவட்டம் போன்ற பகுதிகளில் தண்ணீர் கிணற்றுக்குக் கீழே போய்க்கொண்டு இருக்கிறது. சென்னை போன்ற நகரங்களிலே லட்சக்கணக்கான பேர்கள் வீடிழந்து பரிதவித்து வீதியிலே நிற்கும்



பரிதாபகரமான நிலை ஏற்பட்டுள்ளது. பத்தாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் வீடுகளை இழந்து இருக்கிறார்கள். 5,6 பேர்கள் இறந்திருக்கிறார்கள். இதிலே ஒருவர் மின் கம்பத்தில் மின் கசிவின் காரணமாக மாண்டிருக்கிறார். இப்படிப்பட்ட ஒரு பரிதாபகரமான நிலை சென்னையிலே ஏற்பட்டிருக்கிறது.

ஆண்டுதோறும் இப்படிப்பட்ட நிலை ஏற்படுகிற காரணத்தினால் சென்னை மாநகரத்திலே குடிசையிலே வாழ்கின்ற சாதாரண ஏழை எளிய, உழைக்கின்ற மக்களுக்கு நிரந்தரமான நிவாரணம் கிடைக்கின்ற முறையில் அரசாங்கம் யோசித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம். குறிப்பாக அரங்கநாதன் சுரங்கப்பாதை, பெரம்பூர் இரயில்வே பாலம், போன்ற இப்படிப்பட்ட இடங்களில் தண்ணீர் அதிகமாக நிற்கிறது. அதைப் போல அடையாறு கக்கன் காலனி, மற்றும் சி.ஐ.டி. நகர், பரமேஸ்வரி நகர், மல்லிகா நகர், மற்றும் புளியந்தோப்புப் பகுதியிலே உள்ள ஏழைகளின் குடிசைகள் தண்ணீரிலே அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. இந்தப் பரிதாபகரமான, ஏழ்மையிலே சிக்கித் தவிக்கின்ற மக்கள், கடும் மழையிலேயும் சிக்கித் தவிக்கின்ற மக்களுடைய சங்கடங்களைப் போக்க வேண்டும். ''வேண்டும்போது பெய்யாய், வேண்டாதபோது பெய்வாய், யாண்டும் நீ செய்வதெல்லாம் இடும்பைகளே'' என்று ஒரு கவிஞன் சொன்னான். மாநிலத்தில் ஒரு பக்கத்தில் வறட்சி, மற்றொரு பக்கத்தில் வெள்ளம், இதுதான் இன்றைய தமிழகத்தின் நிலை. எனவே இத்தகைய நிலையில், நிவாரண நடவடிக்கைகள் எடுத்து அவர்களுக்கு நிரந்தரமாக நிவாரணம் அளிக்கவும், தற்போது 200 ரூபாய் வழங்குவதாகச் சொல்கிறார்கள், அதை 500 ரூபாய் என்ற அளவிற்கு கொடுக்க வேண்டும். குடும்பத்திற்கு ஒரு சேலை ஒரு வேட்டி, என்று கொடுத்தால், ஒரு குடும்பத்திலே 5,6 பேர்கள் வயது வந்தவர்களே இருப்பார்கள், எனவே அதை யார் கட்டிக்கொள்வது என்பது போன்ற பிரச்சனைகள் வந்து அதனால் கலவரம் உண்டாகும். எனவே எல்லா வயது வந்தவர்களுக்கும் ஒரு வேட்டி, சேலை என்ற வகையில் வழங்கப்பட வேண்டும் என்பதற்காகவும், இன்னும் இதுபோன்ற இதர நிவாரண நடவடிக்கைகளை எடுக்கவேண்டி பேச வேண்டியிருப்பதாலும் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாண்புமிகு தலைவர் அவர்களை பணிந்து மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வெ. இராஜசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை ஆகிய 2 நாட்களும், சென்னையிலும், சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பெய்த பெருமழையின் காரணமாக சென்னை நகரத்தினுடைய குடிசைப் பகுதிகள், தாழ்வானப் பகுதிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பாதிக்கப்பட்ட பகுதிகளில் மிகவும் அதிகமாக ராதாகிருஷ்ணன் தொகுதியிலே உள்ள கொருக்குப்பேட்டை, தண்டையார்பேட்டை ஆகிய பகுதிகள் மிகவும் அதிகமாகப்பாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் செய்தி அறிந்த முதல்வர் அவர்கள்

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் தெரிவித்தார்கள். அப்படி வாடியிருக்கிறபோது ஏதோ சொற்ப மழை பெய்திருக்கிறது என்பதைத்தான் நானும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, மழை பெய்த உடனேயே, சென்னையைப் பொறுத்தவரைக்கும், தாழ்வான பகுதிகளில் தண்ணீர் வந்து விடுகிறது. மழை விட்ட உடனேயே போய் விடுகிறது. அது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். மழை பெய்த உடனேயே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், மழை பெய்த பகுதிகளுக்கெல்லாம் சென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளையெல்லாம் அழைத்து, எப்படி நிவாரணப் பணிகளை தீவிரப்படுத்த வேண்டும் என்றும், அவைகளைச் செய்வதற்கு வேண்டிய உத்தரவுகளையும், ஊக்கத்தையும் அளித்து அந்தப் பணிகளை துரிதப்படுத்தி வந்தார்கள் என்பதும் உங்களுக்கு மிக நன்றாகத் தெரியும். அது மட்டும் அல்ல பல்வேறு அமைச்சர்களும் அந்தந்த இடங்களுக்குச் சென்று பார்த்துவிட்டு வருகிறார்கள் என்பதும் உங்களுக்கு நன்றாகத் தெரியும்,

அதேபோல 27ஆம் தேதிகூட மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள் பல பகுதிகளுக்குச் சென்று பார்த்துவிட்டு, வீடு இழந்திருப்பவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 200 ரூபாய் பணம் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் சென்றபோது கூட சுமாராக200பேர்களுக்கு இவ்வாறுஉதவிப்பணம்கொடுத்தார்கள். இப்படி அரசு எல்லாப் பணிகளையும் தீவிரமாக எடுத்துக்கொண்டு வருகிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சு. பாலன் அவர்கள் சொன்னார்கள், ஆண்டாண்டு காலமாக இப்படி இருக்கிறது என்று. அது உண்மைதான். இன்றைக்கு நேற்று அல்ல, பல ஆண்டுகாலமாக 20 ஆண்டு, 30 ஆண்டு காலமாக இப்படிப்பட்ட நிலை இருந்துவருகிறது. சென்னையைப் பொறுத்தவரைக்கும் தாழ்வான பகுதிகள் மிக அதிகம். இங்கே மழை பெய்த உடனேயே தண்ணீர் வந்துவிடுகிறது. மழை விட்டவுடனேயே தண்ணீர் போய்விடுகிறது. இதற்கு நிரந்தரமாக எப்படி பரிகாரம் செய்வது என்றால், அவர்களையெல்லாம் அந்த இடங்களை விட்டு வெளியே மாற்ற வேண்டும். அப்படி மாற்றலாம் என்றால், அவர்கள் எல்லாம் அங்கேயே வேலை செய்கிற அன்றாடக் கூலிகளாக இருக்கிறார்கள். ஆகவே இப்படிப் பல சங்கடங்கள் இருக்கின்றன என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் சமீபத்தில் நாகப்பட்டினத்திற்கு அருகாமையில் புயல் சின்னம் உருவாகியதன் காரணமாகத்தான், தமிழ்நாட்டில் பல இடங்களில் சொற்ப மழை பெய்திருக்கிறது. பெய்த மழையினால் நீங்களும் நிம்மதி அடைந்திருக்க மாட்டீர்கள்; மற்றவர்களும் நிம்மதி அடைந்திருக்க மாட்டார்கள்; நானும் நிம்மதி அடையவில்லை, இந்த அரசும் நிம்மதி அடையவில்லை,





சென்னையில் பெய்த மழையின் அளவு நேற்று நான்
சொன்னபடி, மீனம்பாக்கத்தில் 244 மில்லி மீட்டர், நுங்கம்
பாக்கத்தில் 226 மில்லி மீட்டர் பெய்திருக்கிறது என்பதை நான்
தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி மழை பெய்ததினால்
இன்றைக்கு எனக்கு கிடைத்திருக்கிற கணக்கின்படி சுமாராக 4
ஆயிரம் குடிசைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதிலே 21
ஆயிரம் நபர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதிலே எல்லா
நபர்களுக்கும் 25-10-1983 அன்று தேதிபடி 5350 பேருக்கு
உணவுப் பொட்டலங்கள் கொடுக்கப்பட்டிருகின்றன. 26-10-1983
அன்று காலையில் 13,150 பேர்களுக்கு உணவுப் பொட்டலங்
களும், 27-10-1983 அன்று 5,600 பேர்களுக்கு உணவுப் பொட்
டலங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பாதிக்கப்பட்ட எல்
லோருக்கும் மாநகராட்சிப் பள்ளிகளில் தங்கும் இடம் கொடுக்கப்
பட்டிருக்கிறது. அவர்களுடைய வீடுகள் சரி செய்யப்படுகிற
வரைக்கும் தங்கும் இடம் அவர்களுக்கு கொடுக்கப்படுகிறது.
அதேபோல காவல் துறையைச் சேர்ந்தவர்களும், வருவாய்த்
துறையைச் சேர்ந்தவர்களும், தீயணைப்புத் துறையைச் சேர்ந்த
வர்களும் துரிதமாக அங்கும் இங்கும் சென்று எல்லா நிவாரணப்
பணிகளுக்கும் துரிதமாக நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்
என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். தடுப்பு ஊசி
போட வேண்டும், தடுப்பு மருந்து கொடுக்க வேண்டும் என்று
பலர் சொன்னார்கள். இப்படிப்பட்ட ஏற்பாடுகளையெல்லாம்
வெள்ளம் வந்தாலும் சரி, புயல் வந்தாலும் சரி, அரசினுடைய
உத்தரவை எதிர் பாராமல், சம்பந்தப்பட்ட அதிகாரிகளே,
தடுப்பு மருந்து கொடுத்து, தடுப்பு ஊசிகள் போட்டு எல்லாப்
பணிகளிலேயும் முன்கூட்டியே தீவிரமாக நடவடிக்கை எடுத்து
வருகிறார்கள். தடுப்பு மருந்துகள் கொடுக்கப்படுகின்றன
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்குக் கிடைத்த
கணக்குப்படி பெரியபாளையம் கோயில் தெருவைச் சேர்ந்த 44
ஆம் எண்ணுள்ள வீட்டின் மண் சுவர் இடிந்து விழுந்ததன்
காரணமாக 25-10-83 அன்று 4 வயது சிறுவன் ஒருவன் உயிர்
இழந்திருக்கிறான். 25 ஆம் தேதி பிற்பகலில் மூலக்கொத்தளத்தில்
ஒரு வீட்டின் ஓடு, கூரை இடிந்து விழுந்ததினால் 5 வயது
சிறுவன் உயிர் இழந்திருக்கிறான். அதேபோல் 22 வயதுள்ள
சேகர் என்ற வாலிபர் திருமூர்த்தி தெருவில் நடந்து செல்லும்
போது பக்கத்திலே இருந்த மின் பெட்டியில் இருந்து மின்சாரம்
தாக்கியதால் உயிர் இழந்திருக்கிறார். சென்னை கதீட்ரல்
சாலையில் 45 வயதுள்ள ஒருவர் 26-10-83 அன்று சாலையில்
சென்றபோது குளிரால் உயிர் இழந்து இருக்கிறார். அசோக்
நகரைச் சேர்ந்த 22 வயது குமார் என்ற வாலிபர் மழைக்காக
ஒதுங்கி பிளாட்பாரத்தில் நடந்து செல்லும்போது உயிர் இழந்
திருக்கிறார். இவைகளையெல்லாம் ஆராய்ந்து முதலமைச்சர்
நிவாரண நிதியிலிருந்து அவர்களுக்கெல்லாம் ஆயிரம் ரூபாய்
கொடுக்கப்படும். ஆனால் 500 ரூபாய் கொடுக்கப்பட வேண்டு
மென்று கேட்டார்கள். 500 ரூபாய் என்று அவர்கள் சொல்கிற
போது நான் சொல்ல வேண்டுமென்றால் முதலமைச்சர் அவர்கள்
உள்ளத்திலே 500 அல்ல 1000 ரூபாய் கொக வேண்டுமென்ற

எண்ணம்கூட அவர்களுக்கு உண்டு. ஆனால் நம்முடைய நிலைமை அப்படியல்ல. இதற்கு முன்பு 70 ரூபாயாக இருந்ததை அவர்கள்தான் 200 ரூபாயாக ஆக்கினார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லாவித நிவாரணங்களும் விரைவிலே நடந்துக் கொண்டிருக்கின்றன, முடியும் தருவாயில் இருக்கின்றன, இன்னமும் மழை பெய்யவில்லையே என்று ஏங்கிக் கொண்டிருக்கின்றேன் என்று சொல்லி நீங்கள் கேட்ட காரியங்கள் நடந்துக்கொண்டிருக்கின்றன என்பதால் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்று தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்க தேவை இல்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## 4. கவன ஈர்ப்பு

### தஞ்சை மாவட்டத்தில், விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பது.

திரு. இரெ. இராசமானிக்கம்: தலைவர் அவர்களே, "உணவு உற்பத்தியை பெருக்க வேண்டிய அவசியம் கருதி தஞ்சை மாவட்டத்தில் சொந்தமாகவும், வங்கிகள் மூலம் கடன் பெற்றும் பம்ப் மோட்டார் வைத்துள்ள அனைவருக்கும் மின் இணைப்புக் கொடுக்க வேண்டியது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

கடுவிரைவுத் திட்டத்தின் கீழ் வடிமுனைக்குழாய் கிணறுகளுக்கும் மற்றும் சாதாரண திட்டத்தின் கீழ் தஞ்சையிலுள்ள கிணறுகளுக்கும் மின் இணைப்புக் கொடுத்த விவரங்களாவன:—
1. கடுவிரைவுத் திட்டம்—

| | | |
|---|---|---|
| அ. | நீர் இருப்புப் பற்றிய ஆய்விற்கான சான்றிதழ் பெறப்பட்ட எண்ணிக்கை .. .. | 1,444 |
| ஆ. | மின்பாதை அமைக்கப்பட்டுள்ள விசையேற்றங்களின் எண்ணிக்கை .. .. | 1,136 |
| இ. | மின் இணைப்பு கொடுக்கப்பட்ட விசையேற்றங்களின் எண்ணிக்கை .. .. | 790 |



| | | |
|---|---|---|
| ஈ. | விசையேற்றங்களில் மின்இணைப்பு கொடுக்கப்படவேண்டியவை .. .. | 346 |
| உ. | மின்பாதை அமைக்கப்பட வேண்டிய விசையேற்றங்களின் எண்ணிக்கை (விவசாயம் செய்யப்படுவதால் வேலை தடைப்பட்டுள்ளது | 308 |
| ஊ. | 308 எண்ணிக்கையில் வைப்புத் தொகை செலுத்தப்பட்டது | 34 |

மேற்கூறியுள்ள 'ஊ' என்பதில் கண்டுள்ள 34 கிணறுகள் வேலை முன்னேற்றத்தில் உள்ளது. எனினும் தற்போது நீர்ப் பாசனம் செய்யப்பட்டு வருவதால் கட்டுமான வேலைகள் தடைபட்டுள்ளன.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, அவையில் வைக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில் கடும் விரைவுத் திட்டம் என்பதன் கீழ் நீர் இருப்பு பற்றிய ஆய்விற்கான சான்றிதழ் பெறப்பட்ட எண்ணிக்கை 1,444 என்றும் மின் இணைப்புக் கொடுக்கப்பட்ட விசையேற்றங்களின் எண்ணிக்கை 790 என்றும் விசையேற்றங்களில் மின்இணைப்புக் கொடுக்கப்பட வேண்டியவை 654 பாக்கியுள்ளது என்றும் அதுபோல சாதாரணத் திட்டம் என்பதன் கீழ் விசையேற்றங்களுடன் தயார் நிலையில் உள்ள நபர்களின் எண்ணிக்கை 1,736 என்றும், மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ள விசையேற்றங்களின் எண்ணிக்கை 827 என்றும், மின் இணைப்புக் கொடுக்கப்பட வேண்டியது 909 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவைகளைத் தவிர எல்லாம் மனுப் போடப்பட்டு அதிகாரிகள் பார்வையிடாமல் ஏராளமான மனுக்கள் தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்றன. உணவுப் பற்றாக்குறை எற்பட்டுள்ள நிலையில் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டியதன் அவசியத்தையும் கவனத்தில் கொண்டு மின் இணைப்புக்காக 1983-ம் ஆண்டு செப்டம்பர் வரையில் மனுக் கொடுத்துள்ள அனைத்து விவசாயிகளுக்கும் உடனடியாக டிசம்பர் மாத இறுதிக்குள் மின் இணைப்புக் கொடுக்க ஆவண செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, அரசு ஏற்கெனவே முடிவு எடுத்தபடி விரைவுத் திட்டத்தின்கீழ் 5 ஆயிரம் பேர்களுக்கு மின் இணைப்பு செய்து கொடுக்கப்படுகிறது. அதற்கு யார் யார் முன்வருகிறார்களோ அவர்களுக்குச் செய்து கொடுக்கும்.

(முற்பகல் 10-40)

**திரு. இரெ. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு 5 ஆயிரம் பேர்களுக்கு மின் இணைப்புத் தர தயாரான நிலையில் உள்ளதாக நம்முடைய அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் நிலைமை அப்படி அல்ல. தற்போது நிலவள வங்கி மூலமாக மின் மோட்டார் வாங்கி வைத்துள்ளவர்களுக்கு மட்டும் விரைவுத் திட்டத்தின் மூலமாக மின் இணைப்புக் கொடுக்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் சொந்தமாகவும், தேசிய ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலமாகவும் மற்ற வங்கிகள் மூலமாக கடன் பெற்று மின் மோட்டார் வாங்கி கட்டிடம் உட்பட கட்டி முடித்துள்ள பல விவசாயிகள் மின் இணைப்பு கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். தற்போது காவிரி நீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில் தஞ்சை மாவட்டத்திலுள்ள மாயவரம் சீர்காழி குடவாசல், குத்தாலம் போன்ற பகுதிகளில் 2 போகம் சாகுபடி செய்து உணவு உற்பத்தியை பெருக்கவும் செப்டம்பர் மாதம் கடைசி வரையில் மனு கொடுத்த அனைத்து விவசாயிகளுக்கும் மின் இணைப்புக் கொடுக்க வேண்டியது அவசியமாகும். ஆகவே செப்டம்பர் மாதம் இறுதி வரையில் மனு கொடுத்துள்ள விவசாயிகள் அனைவருக்கும் மின் இணைப்பு தருவதற்கு தனியான நிதி ஒதுக்கீடு செய்து ஒரு விரைவுத் திட்டம் தீட்டி அனைவருக்கும் மின் இணைப்பு கிடைப்பதற்கு அரசு ஆவண செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர்வுகளை மையமாக வைத்துக் கொண்டு என்னென்ன காரியங்களை விரைந்து செய்ய முடியுமோ அவைகளை நிச்சயமாக செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) கட்டிட—கட்டுமானப் பணியாளர்கள் (பணி நிலைமைகள்—பல்வகை விதித்துறைகள்) சட்ட முன்வடிவு 1983.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கட்டிட—கட்டுமானப் பணியாளர்கள் (பணி நிலைமைகள்—பல்வகை விதித்துறைகள்) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.



**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

## 6. அரசினர் தனித் தீர்மானம்.

### இலங்கைவாழ் தமிழர் பிரச்சினை—(தொடர்ச்சி).

***மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று தொடங்கிய என்னுடைய பதிலை தொடர்ந்து இன்றும் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த அவைக்கு உங்கள் மூலமாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்று பேசிய பல நண்பர்களுக்கு ஆதரித்தவர்களுக்கு நான் என்னுடைய பேச்சின் இறுதியில் எந்த அளவுக்கு நன்றியைக் கூற கடமைப்பட்டிருக்கிறேன் என்பதைக்கூற தயாராக இருக்கிறேன்.

ஆனாலும் எங்களைப் பற்றி, இந்த அரசைப் பற்றி குறை கூறுகிறவர்களுக்கு அந்த குறைக்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை என்பதையும் எடுத்துச் சொல்ல வேண்டியது இந்த அரசை நடத்துகின்ற பொறுப்பில் முதன்மையாக இருக்கின்ற என்னுடைய கட்டாய கடமை என்பதை இந்த அவை ஏற்றுக் கொள்ளும் என்று நம்புகிறேன்.

நான் முதன் முதலிலே எம்.எல்.சி. யாக அண்ணாவால் கட்டளையிடப்பட்டு அந்தப் பதவிக்குச் சென்றபோது தேனி தியாகராஜன் அவர்கள் அங்கே சில கருத்துக்களை வெளியிட்டார்கள். அதை எதிர்த்து அமரர் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள் கடுமையாக பதில் சொன்னார்கள். நான் கற்பனை செய்துகொண்டு போன மேலவை ஒன்று, நான் கண்ட காட்சி, அனுபவித்த காட்சிகள் வேறு. இதைப் பற்றி நான் என்னுடைய கன்னிப் பேச்சில் பேசும்போது ஒன்றைச் சொன்னேன், எறிகிற பந்தை நாம் எவ்வளவு வேகமாக எறிகிறோமோ அவ்வளவு வேகமாக அது திரும்பி நம்மிடம் வரும் என்று நான் சொன்னேன். இந்த நேரத்தில் அந்த சொற்களை நான் நினைவு படுத்திக் கொள்கிறேன். எங்கள் மீது எவ்வளவு வேகமாக பந்தை வீசுகிறீர்களோ, பேச்சு என்ற கருத்தை, அதே போல எங்கள் கருத்தும் உங்கள் மீது வந்தால், நாங்கள் எப்படி தாங்கிக் கொண்டு அமைதியாக உட்கார்ந்து கொண்டு இறுதிவரையில் உங்களுடைய கருத்தைக் கேட்டோமோ, அது போல், நீங்களும் கேட்பீர்கள் என்று நம்பிக்கையோடு இன்று நான் எனது பேச்சைத் தொடர விரும்புகிறேன்.

[டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 அக்டோபர் 28

நேற்றையதினம் மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத் துணைத் தலைவர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், நீண்ட பேச்சைப் பேசி இருக்கின்றார்கள். அதில் சிலவற்றிற்குத்தான் இன்று பதில் சொல்ல இருக்கிறேன். மற்றவை, மற்றவர்களுக்கு. அதில் அவர் சொல்லியிருக்கிறார். ஒரு தேரை இழுத்துச் செல்ல வேண்டுமென்றால், இரு வடங்களையும் ஒரே மாதிரியான உள்ளத்தோடு, ஒரே மாதிரியான எண்ணத்தோடு எந்த இடத்தில் தேர் நிலைக்குச் செல்ல வேண்டுமோ, அந்த இடத்தை நோக்கி, இழுத்துச் செல்ல வேண்டுமென்ற கருத்துப்பட அவர் இங்கே பேசினார்கள். நல்ல உதாரணம். எத்தனை ஆயிரம் மக்கள் அந்த வடத்தை அக்கறையோடு சேர்த்து இழுக்க வேண்டுமென்ற அவர் கருத்தை நான் மதிக்கின்றேன், போற்றுகின்றேன், பாராட்டுகின்றேன், வரவேற்கிறேன். அதற்காக இப்படிப்பட்ட நண்பர் இங்கே சட்டமன்றத்திற்கு மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறார் என்பதற்காக நான் பெருமைப்படுகிறேன். ஆனால், அவருடைய சொல்லுக்கும் அந்தக் கழகத்தின் செயலுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா என்பதை நான் திரும்ப, திரும்ப, அந்தப் பேச்சை படித்து நேற்று இரவு—பல மணி நேரம் என்றுகூடச் சொல்லலாம்—சிந்தித்துப் பார்த்தேன். எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து இலங்கைத் தமிழர்களுக்கு தமிழ் ஈழத் தமிழர்களுக்கு, நன்மை செய்ய வேண்டுமென்ற நினைவு வந்து, பல வழிமுறைகளில் நாம் ஒன்று சேர்ந்து பணியாற்ற வேண்டிய நேரத்தில், நாங்கள் தனியாகப் பணியாற்றுவோம்—செயல் செய்வோம் என்று சொன்னதற்குக்கூட மத்திய அரசும் மாநில அரசும் ஒத்துழைத்துங்கூட இங்கே கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தில், அத்தனை கட்சிகள், வெளியே இருப்பவர்கள் எல்லாம் சொன்ன கருத்துக்களை எல்லாம உள்ளடக்கிக்கொண்டு வந்துங்கூட, அத்தனை பகுதிகளையும் கண்டிக்கின்ற ஒரு தீர்மானத்தை இங்கே பரிந்துரை செய்திருக்கிறீர்களே, என்று எண்ணிப் பார்க்கும்போது யார் வடத்தை எந்தப் பக்கம் இழுத்துச் செல்ல விரும்புகிறார்கள் என்பதிலே எனக்கு ஐயம் ஏற்படுகிறது. இழுத்துச் செல்ல வேண்டிய இடம் இலங்கைக்கு. இலங்கையிலே இருக்கிற தமிழ் மக்களுக்கு நன்மை செய்ய. ஆனால், இங்கே என்ன நடக்கிறது என்றால், நன்மை செய்ய விரும்புகின்ற அத்தனை பேர் சொன்னதற்கும் எதிராக, ஒரு தனிக் கட்சி நான் சொல்வதை மற்றவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்; நாங்கள் சொல்வதுதான் சரி என்ற ஒரு முடிவுக்கு வந்து இதை ஆதரியுங்கள் என்று சொன்னால், அவை நல்ல எண்ணங்களாக திட்டங்களாக இருந்தால், ஒருவர் சொன்னாலும் அல்லது ஒரு சிறு குழந்தை சொன்னாலும்கூட, எல்லோரும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்—அதுதான் தமிழகத்தினுடைய வழக்கம். ஆனால், நேர் முரணாகச் சொல்லும் போது, இதை எப்படிச் சொல்கிறார்கள்? வேண்டுமென்றே சொல்கிறார்களா? இதை திருப்ப வேண்டுமென்பதற்காகச் சொல்கிறார்களா? என்று சிந்திக்க வேண்டியுள்ளது.



1983 அக்டோபர் 28] [டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன்]

நேற்றைக்கு நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசிய பேச்சை, பத்திரிகையிலே வெளியிட்டிருக்கிறார்கள். அதையும் படித்தேன். அதற்கு என்ன, என்ன தலைப்புகள் கொடுக்கிறார்கள், எப்படி எழுதியிருக்கிறார்கள் என்று பார்க்கும்போது, இது இலங்கைத் தமிழர்களுக்கு நன்மை செய்யக்கூடிய ஒரு காரியமாக அமைகிறதா என்பதை தயவுசெய்து அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று என்னுடைய பணிவான வேண்டுகோள் என்றே வைத்துக் கொள்ளுங்கள், கவலை இல்லை; நான் அதிலே கௌரவத்தைப் பார்க்கவில்லை, வேண்டுகோளாக வைக்கிறேன்.

இங்கே பேசுகிறவர்களிலே, எத்தனை பேர் என்ன பேசினார்கள் என்று பார்த்தால், எனக்குத் தெரிந்தவரையில் தி.மு.க. கழகத்தைத் தவிர, பாக்கி எல்லோரும் மைய அரசும் மாநில அரசும் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் சரியானவை, நியாயமானவை, ஆனால் இந்தத் தீர்மானத்திலே சில திருத்தங்கள் தேவை என்று அவர்கள் திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். நடைமுறைக்கு ஏற்றதாக, இலங்கை வாழ் தமிழர்களுக்குப் பயன்படும்படியாக அவை சொல்லப்பட்டிருக்கின்றன. உதாரணமாக அங்கு இருக்கிற ஒட்டுமொத்தமான ஜனநாயக சக்திகள் எல்லோரையும் ஒன்றாக்கி, அவர்களுடைய ஆதரவையும் பெற்று, பெறச் செய்து, ஆதரவை ஏற்கச் செய்து ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும். அதைப் பயன்படுத்த வேண்டுமென்று மைய அரசைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று சொன்னால் அதை யாரும் மறுக்க முடியாது. இதிலே ஜாதி இல்லை, மதம் இல்லை, கட்சிகள் இல்லை. வேறு முதலாளி, தொழிலாளி வர்க்கம் என்று எந்தப் பிரச்னையும் இல்லாத ஒரு கருத்தைச் சொல்கிறார்கள் என்றால் அதை வரவேற்காமல் இருக்க முடியாது.

(முற்பகல் 10-50)

ஆனால் அதேசமயத்தில் இந்திரா காந்தி என்ன செய்தார்கள் என்று கேட்டு, எப்படியும் கடைசியில் அந்த நான்கைந்து வார்த்தைகளைச் சொல்லியே தீரவேண்டும் என்பதற்காக (குறுக்கீடு) கடைசியிலே உங்களுக்கு நிறைய டைம் இருக்கிறது. என்னுடைய பேச்சை முடித்துவிடுகிறேன். உங்களுடைய பேச்சின் போது நான் சிரித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். இப்போது சிரித்துக்கொண்டு நீங்கள் உட்கார்ந்திருங்கள். (குறுக்கீடு) இதில் கேள்வி பதில்களுக்கு இடமில்லை. எண்ணங்கள் விமர்சனம் செய்வதுதான் இந்தத் தீர்மானத்தின் நோக்கம். இதற்கு கேள்வி இல்லை. எனக்குத் தெரிந்தால் விளக்கத்தைச் சொல்லப் போகிறேன். இல்லையென்றால் ஒன்றும் சொல்லாமல் இருக்கப் போகிறேன். எல்லாம் தெரிந்தவன் நான் என்று சொல்லத் தயாராக இல்லை.

கூட கொருக்குப்பேட்டை, தண்டையார்பேட்டை போன்ற பகுதிகளில் நேரடியாகச் சென்று சுற்றிப் பார்த்துவிட்டு அங்கே ஏற்பட்ட சேதத்தினுடைய மதிப்புகளை அறிந்துக் கொள்வதற்கு அவருக்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

அந்த அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, ஆயிரக் கணக்கில் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு குடிசை மாற்று வாரியம் கட்டிக் கொடுத்த குடியிருப்புகள் அல்ல—முழுமையாக குடிசைப் பகுதியாக இருக்கின்ற, 21-வது வட்டம், 2-வது வட்டம், கடலோரப் பகுதியான 4-வது வட்டம் போன்ற பகுதிகளில் சரியான அளவில் தண்ணீர் செல்வதற்கான முறையான கால்வாய்கள் இல்லாத காரணத்தால் அங்கே அதிகமான அளவில் குடிசைகள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன; மழைத் தண்ணீர் பள்ளப் பகுதிகளிலே அதிகமான அளவிலே தேங்கி விடக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. இதனால் அங்கேயுள்ள குடிசைகள் இடிந்துவிடக்கூடிய நிலைமையில் அவைகள் இருக் கின்றன. அந்தப் பகுதியில் 3 அடி அளவிற்கு தண்ணீர் நிற்கின்றது. குறிப்பாக கார்நேஷ் நகர், செரியன் நகர், பட்டேல் நகர், அண்ணா நகர், நெடுஞ்செழியன் நகர் மூப்பனார் நகர், மீனாம்பாள் நகர், கடலோரப் பகுதியிலுள்ள பூங்காவனக் குப்பம், சீனிவாசநகர் போன்ற பகுதிகளில் உள்ள மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு, அந்த மக்கள் அனைவரும் இன்றைக்கு மாநகராட்சிப்பள்ளிகளிலே அடைக்கலம் கொண்டிருக்கிறார்கள். நான் மாநகராட்சியின் விசேஷ அதிகாரியிடத்திலும், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும், தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு பேசினேன். தீயணைப்புத்துறை மூலமாக பள்ளமான பகுதிகளில் தேங்கியிருக்கின்ற தண்ணீரை அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டேன். ஆனால் நேற்று இரவு 9 மணி வரையிலும் தீ அணைப்புப் படையினர் வரவில்லை அந்தத் தண்ணீரை வெளியேற்றும் முயற்சிகளில் ஈடுபடவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து மாநகராட்சிகளினுடைய தெரு விளக்குகள் எரிவதே இல்லை, குறிப்பாக மின்சார விளக்கே இல்லாத குடிசைகள் இருக்கின்ற தெருக்களிலே விளக்குகள் சரியாக எரிவது இல்லை. அதனால் அந்தப் பகுதிகள் முழுவதும் ஒரே இருளாக இருக் கிறது. எனவே அங்கே போலீஸ் பந்தோபஸ்து போடவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொலை பேசியில் தொடர்பு கொண்டு பேச முடியவில்லை. அதுவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது.

இப்போது பெய்த இந்த மழையின் காரணமாக தண்ணீர் தேங்கி விடுகின்றது. அதனால் பொதுச் சுகாதாரம் மிகவும் பாதிக்கப் பட்டு இருக்கிறது. இதனால் தொத்து நோய்கள் வரக்கூடிய வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. இதைத் தடுக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பாக விரிவாகவும் விளக்கமாகவும் ஒரு தீர்மானம் இங்கே கொடுக்கப்பட்டு, அந்த தீர்மானத்தின் மீது இந்த மன்றத்தில் இருக்கின்ற அனைத்துக் கட்சித் தலைவர்களும் தங்களுடைய உணர்ச்சிப்பூர்வமான நல்ல கருத்துக்களை மிக சிறப்பாகவும், செம்மையாகவும் எடுத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரசு எடுத்து இருக்கின்ற நடவடிக்கைகள் பற்றியும் அரசு எடுத்துக்கொள்ள முனைந்து இருக்கின்ற தன்மைகள் பற்றியும் தன்னுடைய பதிலுரையில் மிக விரிவாகவும், விளக்கமாகவும் சொல்லியிருப்பதன் காரணமாக மேற்கொண்டு அதுபற்றி நான் கூற வேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன். இங்கே பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் எல்லாம் அதற்கு திருத்தங்கள் தந்து இருக்கிறார்கள். அந்த அந்த திருத்தங்களை எவற்றை தீர்மானங்களில் இணைத்துக்கொள்ள இயலுமோ அவற்றை நாம் இணைத்துக்கொண்டு இருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

முக்கியமாக அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் தம்முடைய பேச்சில் மிக சிறந்த முறையில் உணர்ச்சிகளை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இந்திய அரசு ஏற்றுக்கொண்டு இருக்கிற நடவடிக்கைகளை எல்லாம் அவர்கள் ஆதரித்து இருக்கிறார்கள். அது மட்டும் அல்லாமல் சிலபல தடைகள் விதிக்கவேண்டும் என்று கூறுகின்ற திருத்தங்களை கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் இப்போது இருக்கின்ற சூழ்நிலைகளிலே அப்படிப்பட்ட பகைமையான அடிப்படையில் போக்குவரத்துத் தடை மற்ற தடைகள் ஏற்படுத்துவது பொருத்தமாக இருக்காது என்ற காரணத்தினால்தான், அவர்கள் அதை அழுத்தம் திருத்தமாக கூறினார்கள். அது பலருக்கும் புரியும்படியாக இருக்கும் காரணத்தினாலும் அந்த தீர்மானத்தை அவர்கள் வற்புறுத்தவேண்டாம் என்று அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

மற்றைய திருத்தங்களைப் பொறுத்தவரை எதை எதை இணைத்துக் கொள்ளலாமோ அந்த வகையில் இணைத்துக் கொண்டு ஆக ஒருமித்த உணர்வோடு நிறைவேற்றுகின்ற அளவுக்கு அரசின் சார்பாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் களும், உறுப்பினர்களும் கொடுத்து இருக்கிறார்கள் நிறைவேற்று கின்ற தீர்மானங்களிலே அந்த திருத்தங்களையும் நாங்கள் கொண்டு வந்து சேர்த்து இருக்கிறோம். மற்ற வகையில் ஒரு குறிப்பிட்ட கட்சியினுடைய அடிப்படையில் நாங்கள் எந்த பாராட்டும் தெரிவிக்கவில்லை. அதைதான் எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களும் எடுத்து தெரிவித்து இருக்கிறார்கள். என்றாலும்கூட நாங்கள் இந்த தீர்மானத்தில் எல்லா அரசியல் கட்சிக்காரர்களும் ஒருமைப் பாட்டோடு இருந்து இந்தப் பணிகளை நிறைவேற்றி இருப்ப தற்கு பொதுமக்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்

ஆகவே ஒரு விஷயத்திலே நான் ஒரு விளக்கத்தைத் தர கடமைப்பட்டிருக்கிறேன். யாருக்கும் நான் சிபார்சாக வர வில்லை. திருமதி இந்திரா காந்தி என்ன செய்தார்கள் என்று கேட்கிறீர்கள். முதலிலே அவர்கள் செய்த காரியம், அவர் களுடைய சிக்கிம் சுற்றுப் பயணத்தை இடையிலே நிறுத்தி விட்டு டெல்லிக்கு வந்து, அதிகாரிகளை அழைத்து, தனக்கு யார் யோசனைச் சொல்லக் கூடியவர்களோ அவர்களை அழைத்துப் பேசி, நாம் இங்கேயிருந்து சந்திக்க வேண்டுமென்று சொன்ன உடனே தேதி கொடுத்து, நம்மையெல்லாம் சந்தித்து, நாம் சொன்னதையெல்லாம் கேட்டு, அவர் சொன்ன பதில் ஒன்றை இங்கே நான் தெளிவுபட, விளக்கமாக உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். 'ஏதாவது செய்ய வேண்டும், எப்போது, எப்படி என்பதைத் தான் நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன் என்று சொன்ன அந்த வார்த்தையை நாம் மறந்து விடுகிறோமே, அது ஏன் என்று எனக்குப் புரிய வில்லை. உட நாட்டிற்கு ஒன்றா? தமிழ்நாட்டிற்கு என்றால் ஒன்றா? அவர்கள் செத்தால்தான்கவலையா? பங்களாதேஷில் செத்தால்தான் வருவார்களா என்றெல்லாம் பேசுவது சரியா?

நான் ஒரு குறிப்பைச் சொல்ல வேண்டுமென்று ஆசைப்படு கிறேன். கிழக்குப் பாகிஸ்தானை பங்களாதேஷ் என்னும் சுதந்திர குடியரசாக முஜிபுர் ரகிமான் அவர்கள் அறிவித்த தேதி 26-3-1971. இதை நாம் மறந்து விடுகிறோம். பங்களா தேஷில் ஏதோ நடந்தது; ஆகவே நாம் அங்கே பாதுகாப்பிற்குப் போனோம் என்பதை மறந்துவிடுங்கள். அது உண்மையல்ல. (குறுக்கீடு) அது நான் அல்ல, உலகம் எப்படித் தீர்மானிக் கிறதோ அப்படி (குறுக்கீடு) ஏதாவது ஒன்றைச் செய்வதற்கு சொல்வதற்கு எனக்கு தகுதியிருந்தால் உங்களை நான் அழைத்துக்கொண்டு போயிருப்பேன். நீங்கள் மாத்திரம் எங்களோடு சேர்ந்தவர் இல்லையா? முதலில் உங்களைத் தான் தளபதியாக அனுப்பி வைப்பேன், அந்த சக்தி இல்லை, அந்த நிலைமை இந்தியாவில் இல்லை. இந்தியா ஒரு உரிமை பெற்ற நாடு; தனி சக்தி பெற்ற நாடு. தமிழ் நாடு பிரிவினை அடைந்த நாடு அல்ல, நாம் சுதந்திரம் பெற்ற தமிழ்நாடு அல்ல. நாட்டிலே உலகத்திலே உள்ள நிலவரங்கள், ஒரு நாடு தன்னை எப்படி என்று அறிமுகப் படுத்திய பிறகு, வெளியிட்ட பிறகு ஐக்கிய நாடுகள் ஏற்றுக்கொள்கிறது. அதன் ஜனத் தொகை ஐந்தாயிரமாக இருந்தாலும் சரி, ஐம்பதாயிரமாக இருந்தாலும் சரி ஐம்பது இலட்சமாக இருந்தாலும் சரி, அல்லது ஐம்பது கோடியாக இருந்தாலும் சரி. அதேபோல் பங்களாதேஷ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு சுதந்திர குடியரசாக முஜிபுர் ரகிமான் அவர்கள் அறிவித்தார்கள். அப்படியானால் அது ஒரு தனி நாடு என்று 26-3-71-ல் பிரிந்து விட்டது. பாகிஸ்தானிலும், இந்தியாவிலும் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டது எப்போது என்றால் ஒன்பது மாதங்களுக்குப் பிறகு 3-12-1971-ல் பிரகடனம் செய்யப் பட்டது. இதைக் குற்றம் சொல்பவர்கள், நண்பர்கள் தயவு



செய்து கொஞ்சம் இதை மனத்தில் பதிய வைத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் இதை மறந்திருக்க மாட்டார்கள் என்று நம்புகிறோம். நாடாளுமன்றத்தில் இருந்தவர்கள் இங்கே இருக்கிறார்கள். இங்கே இருப்பவர்களில் பி.ஏ.பி.எல்., படித்தவர்கள் இருக்கிறார்கள். ஆங்கிலம் தெரிந்தவர்கள், என்னைவிட அதிகமாகப் புத்தகங்களைப் படிக்கின்ற வாய்ப்பு உள்ளவர்கள் இருக்கிறார்கள். இன்னும் உருது, இந்தி போன்ற வேறு மொழிகளில் சிறந்தவர்களும் இருக்கிறார்கள். சமஸ்கிரு தத்திலே ஸ்காலராகக்கூட இருக்கலாம்.

பாகிஸ்தான் இந்தியாவிற்கு எதிராகப் போர் அறிவிப்பு செய்தது 4-12-71. அதாவது 3-12-71 ஆம் தேதி அவசர நிலைப் பிரகடனம்; இடையில் ஒரே நாள்தான். பாராளு மன்றத்தில் இரு அவைகளிலும் புதிய பங்களாதேஷ் அரசை அங்கீகரித்து பாரதப் பிரதமர் அறிவிப்பு செய்தது 6-12-1971.

இவைகளையெல்லாம் மறந்துவிட்டு பங்களாதேஷுக்கு உதவி செய்தார்கள் என்று இந்திராகாந்தி அம்மையார் அவர்களைப் பற்றிச் சொல்கிறார்கள். அதைச் சொல்லவே எனக்குக் கஷ்டமாக இருக்கிறது இலங்கைக்கும் அதற்கும் இது எப்படிப் பொருந்தும் என்று எனக்குத் தெரியவில்லை; பாகிஸ்தான் படை எடுக்கிறது. பாகிஸ்தானிலிருந்து ஒரு பகுதி அவர்கள் குடியரசாக அறிவித்துவிட்டார்கள். அதை ஏற்றுக் கொண்டு விட்டோம். நம் மீது படையெடுத்த பிறகு நாம் படையெடுத்தோம். பங்களாதேஷுக்கு உதவி செய்தோம் இதுதானே தவிர, வேண்டுமென்றே இந்தியா படையெடுக்கவும் இல்லை.

உருது பேசாத மக்களுக்கு எதிராக வங்க தேச மக்கள். ஏதோ செய்துவிட்டார்கள் என்று அந்த மொழி உணர்வில், இன உணர்வில் அவர்கள் போனார்கள் என்று சொல்லி பெரிய குற்றச்சாட்டை, இல்லாத ஒன்றை இந்தச் சட்ட மன்றத்திலே சொல்லி ஒருவரை குறை சொல்வது அவ்வளவு பொருத்தம் அல்ல.

உடனே கேட்பார்கள், நீ ஏன் பயப்படுகிறாய், இந்திரா காந்திக்கு என்று. திரு. நெடுமாறன் அவர்கள் இங்கே பேசி யிருக்கிறார்கள். அதற்கு நான் பின்னால் பதில் சொல்கிறேன்.

சுதந்திரம் கிடைத்த சிலகாலத்தில் இங்கே மகாத்மா காந்தியைக் கொன்றுவிட்டார்கள். அங்கேயும் அவரைக் கொன்றுவிட்டார்கள் 7 மாதங்களிலே. அதற்குள் நான் போகவில்லை.

ஆகவே, திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் நடவடிக்கை எடுத்ததில், அந்த நடவடிக்கைக்கு என்ன அடிப்படைக் காரணம்; இப்பொழுது இந்த முறையில் நடவடிக்கை எடுப்பதற்கு என்ன அடிப்படைக் காரணம் என்பதை தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இலங்கைத் தமிழர்களுக்குச் சாதகமாக இந்தியாவிலுள்ள தமிழ்நாட்டிலுள்ள அத்தனைபேரும் ஆதரவாக இருக்கின்றோமா என்று கணக்கிட்டுப் பார்த்தால் முழுக்க முழுக்கத் தமிழர்களில் யாரும் அதற்கு எதிராக இல்லை; ஒருவர்கூட இல்லை. இலங்கைத் தமிழர்களில், அது ஈழத் தமிழர்களாக இருந்தாலும் சரி, இலங்கையில் தமிழர்கள் பரம்பரைத் தமிழர்களாக இருந்தாலும் சரி, அல்லது பிழைக்கப்போன தமிழர்களாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும், 3,000 பேர்கள் அல்ல, மூன்று பேர்கள் இறந்தாலும் அல்லது ஒருவர் இறந்தாலும் நமக்கு நஷ்டம் நஷ்டம்தான். ஆகவே, எண்ணிக்கையை வைத்து மரணத்தைப் பற்றி நாம் சிந்திக்கக் கூடாது. அவர்களுடைய மரணத்திற்குக் காரணம் என்ன என்பதைப் பற்றி பார்த்து அந்தக் காரணத்தை விலக்குவதற்கு நாம் என்ன செய்ய முடியும், என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றித் தீர்மானிப்பதற்கு நமக்குள்ள வாய்ப்புகளையெல்லாம் நாம் பயன்படுத்தியிருக்கிறோம்.

இதைத்தான் நேற்றே நான் சொன்னேன். இன்றையதினம் நான் அதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய தேவை இல்லை என்றாலும் கூட ஒன்றைச் சொல்கிறேன். இரண்டாம் தேதி நடந்தபொழுது அதில் அனைத்துக் கட்சியினரும் பங்கு கொண்டார்கள். டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களும் அதை ஏற்றுக்கொண்டார்கள்.

(முற்பகல் 11-00)

ஆனால் மறுபடியும் ஐந்தாம் தேதி வேண்டுமா என்று கேட்டதற்கு நாங்கள் நடத்தியே தீருவோம் என்று சொல்லாமல் அன்றையதினம் அவர்கள் பேசிய பேச்சில் இந்தப் போராட்டம், வேலை நிறுத்தம் நடத்திப் பிரயோசனம் இல்லை என்று அந்தக் கூட்டத்தில் பேசினார்கள். அவர்கள் மாநாட்டுக்குச் சென்று தீர்மானித்தது ஐந்தாம் தேதி இரயில் நிறுத்தப் போராட்டம். 2 ஆம் தேதி இரயில் நிறுத்தப் போராட்டம் என்று நாங்கள் சொல்லவில்லை. இந்த அரசு பொது வேலை நிறுத்தம் செய்தது. திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் அதற்கு ஒத்துக்கொண்டார்கள். விமானம்கூடப் பறக்காது என்று அறிவித்தார்கள். இப்படிப்பட்ட நிலைமை எங்குமே இல்லை. அதையும் நடத்திக்காட்டி ஒத்துழைத்த பிறகு 5 ஆம் தேதி ஒரே ஒரு கட்சி மட்டும் அத்தனை கட்சிகளையும் உதறித்தள்ளிவிட்டு நாங்கள் நடத்துவோம் என்றார்கள் அதிலே சிலர் கேட்கிறார்கள். நீங்களே கேட்டீர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்களை எல்லாம் கைது செய்து விட்டார்கள் என்று. மன்னிக்கவும், கைது செய்யப்பட்டவர்கள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் என்றால் நான் நிச்சயமாக அதை ஏற்றுக்கொள்ள மாட்டேன்.



வன்முறையாளர்களை ரௌடி லிஸ்டிலே இருப்பவர்களைத் தான் கைது செய்திருக்கிறார்களே தவிர, இந்தப் பணியை நடத்துவார்கள், தலைமை தாங்குவார்கள் என்று சந்தேகப்பட்டவர்களை, பாதுகாப்பு என்ற வகையில் முன் எச்சரிக்கையாகக் கைது செய்திருக்கிறார்களே தவிர முன்னால் இருந்த ஆட்சியினர் எம்.பி-க்களை எல்லாம் ரௌடி லிஸ்டிலே போட்டார்களே அதுபோல் நாங்கள் செய்யவில்லை என்பதை இந்த நேரத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்ல வேண்டும். எப்போதுமே எந்த அரசாங்கமும் இதுபோல் ஒரு போராட்டம் நடக்கும் என்றால் முன்னெச்சரிக்கையாகக் கைது செய்வது என்பது இயற்கை. அது ஒரு வழக்கம். தேவை. அது நிர்ப்பந்தமான நிலைமையை அரசுக்கு உண்டாக்குவது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். ஆனால் எங்கேயாவது அநியாயமாக ஒரு விஷயத்திற்கும் சம்பந்தம் இல்லாதவர்களைக் கைது செய்தால்தான் குறை கூறவேண்டும். நான் பொருத்தத்தோடு கேட்கிறேன். நான் அவர்களிடம் கேட்டேன், எந்த இரயிலை நிறுத்தப் போகிறீர்கள் என்று. எந்தெந்தப் பகுதியிலே போகின்ற இரயிலை நிறுத்தப் போகிறீர்கள் என்று கேட்டதற்கு அதற்கு முன்னே நாங்கள் கைது செய்து விட்டோம் அதாவது ஒரு அரசு முன்னெச்சரிக்கையாக மூன்றாம் தேதி, நான்காம் தேதியில் கைது செய்து விட்டது என்பதற்காக நீங்கள் எங்கள் ஆட்களைக் கைது செய்து விட்டீர்கள், எனவே உங்களுக்கு நாங்கள் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று ஒரு தலைவர் சொன்னார். இது நியாயம்தானா என்பதை அவரைப் பின்பற்றுகின்றவர்கள் அவர்கள் வழித்தோன்றல்கள் என்பவர்கள் தான் தீர்மானிக்க வேண்டும் என்பதை அவர்களுடைய மனச்சாட்சிக்கே விட்டு விடுகிறேன்..(குறுக்கீடு).... தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சு முடிந்ததற்குப் பிறகு அவர்கள் பேசலாம், என்னுடைய பேச்சுத்தான் அவைக் குறிப்பிலே இருக்கும் என்று நான் நம்புகிறேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுக்கீடுகள் எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது.

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சை நான் தொடருகிறேன். தலைமைச் செயலாளர் அவர்கள் கடிதம் மூலம் கேட்டார்கள். கடிதம் மூலம் கேட்டதற்கு வந்த பதில் இது. நான்காம் தேதி அந்தக் கடிதத்திற்குப் பதில் வந்தது இப்படித்தான். அதற்குப் பிறகு நாங்கள் வேறு வழியின்றி மத்திய அரசோடு தொடர்பு கொண்டோம். மத்திய அரசு எந்த வகையில் ஒத்துழைக்க வேண்டுமோ அந்த வகையில் ஒத்துழைத்து அந்த இரயில் நிறுத்தப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு அவர்கள் மறுபடியும் ஒத்துழைத்தார்கள். அதற்காக நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன், மத்திய அரசுக்கும் பிரதம அமைச்சர் அவர்களுக்கும், யோசித்துப் பார்க்க

வேண்டும். பிரதமரை ஏன் பாராட்டுகிறீர்கள், மத்திய அரசை பாராட்டுகிறீர்களே, என்ன செய்தது என்கிறீர்களே, அன்று இரயில் நிறுத்தம் நடந்து விபரீதம் நடந்திருந்தால் ஈழத்திலே கொடுமை செய்த வன்முறையாளர்களாகிய சிங்கள இராணுவத்தினர் இங்கே இறந்திருக்க மாட்டார்கள், விவரம் தெரியாத தமிழக மக்கள் பயணம் செய்த இரயில் கவிழ்ந்திருந்தால், இடையிலே நிறுத்தப்பட்டிருந்தால், அவர்கள் எங்கே போக வேண்டுமோ அங்கே குழந்தை, குட்டிகளோடு போக முடியாமல் அவல நிலையில் தவித்திருப்பார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதற்கு இடம் இல்லாமல் ஆபத்துக்கள் வராமல் இருக்க வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக அவர்கள் நடத்திக் கொள்ளட்டும் என்ற நிலையில் அவர்கள் ரயிலை நிறுத்தினார்கள். ஆனால் நடந்தது என்ன? 5 ஆம் தேதி ரயில் நிறுத்தம் என்று சொன்னால் 4 ஆம் தேதி அன்று மாலையிலேயே அதுவும் பகலிலேயே, பரமக்குடி அருகில் கைகாட்டி மரத்தின் தொடர்பு அறுக்கப்பட்டு விட்டது. அது இரவில் நடைபெற்று இருந்தால், எந்தவிதமான ஆபத்து ஏற்பட்டு இருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதனால் ஏற்படும் சூழ்நிலைகளை விவரம் தெரியாமல் செய்து விட்டு இருக்கிறார்கள். அது தி.மு.க. காரர்களாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு வன்முறைக்காரர்கள், கலகக்காரர்கள், கயவர்கள் அந்தப் பணியைச் செய்கிறார்கள் என்று வைத்துக்கொண்டாலும், நிலைமை என்னவாகும் என்பதை நாம் சிந்திக்க வேண்டாமா? எத்தனை உயிர்கள், எத்தனை தமிழ் மக்களின் உயிர்கள் உடைமைகள் பாதிக்கப்பட்டு இருக்கும் என்பதைச் சிந்தித்துப்பார்க்க வேண்டாமா?

கண்டனக் குரல் எழுப்புகிறோம். தமிழ்நாடு முழுவதிலும் உள்ள 5 கோடி மக்களும் சேர்ந்து எழுச்சி பெற்று, ரயிலை நிறுத்தினோம். மத்திய அரசும் நம்முடைய கோரிக்கையைப் புறக்கணிக்காமல் ரயிலை நிறுத்தியது இப்படி நாம் எல்லாம் சேர்ந்து உணர்ச்சிபூர்வமாக 2 ஆம் தேதி காரியங்களைச் செய்த பிறகு நாங்கள் ஏற்கனவே முடிவு எடுத்துவிட்டோம், 5 ஆம் தேதி நாங்கள் முடிவு எடுத்தபடி ரயிலை நிறுத்துவோம் என்றால் அந்த முடிவு ஒரு தனிப்பட்ட கட்சியின் முடிவாகப் போய்விடுகிறது. அதற்கும் மைய அரசு ஒத்துழைத்தது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

நாங்கள் என்ன கடமையைச் செய்யவில்லை? ஈழத்திலே உள்ள தமிழர்கள் உயிர்களையும், உடைமைகளையும் இழந்து தவிக்கிறார்களே என்பதற்காக ஆத்திரப்படுகிற நாம், இங்கே நாம் செய்கிற காரியத்தால் தமிழகத்திலே இருக்கிற லட்சக்கணக்கான மக்களின் உயிரையும், உடைமையையும் பற்றி எண்ணிப் பார்க்க வேண்டாமா, அப்படி எண்ணியிருந்தால் இந்த நினைப்பு வருமா, நினைக்கத்தான் முடியுமா, அவர்கள் எடுத்த முடிவை நாம் ஏற்க முடியாது என்று சொல்லி, ரயில் ஓடும் என்று ஓட விட்டு இருந்தால் என்ன நிலைமையேற்பட்டு இருக்கும் என்பதையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். கைகாட்டி மரத்தின்



தொடர்பு அறுக்கப்பட்டது. தண்டவாளம் பெயர்க்கப்பட்டது' அவற்றின் மீது கருங்கற்கள் வைக்கப்பட்டது, எல்லாம் 4 ஆம் தேதியே ஆரம்பித்துவிட்டது. ஆனால் விளம்பரம் செய்யப்பட்டது 5 ஆம் தேதி. ஆனால் இப்படிப்பட்ட நிலைமைகள் 4 ஆம் தேதியே தொடங்கப்பட்டுவிட்டன. அந்த மக்களுக்கு என்ன தெரியும், எல்லோரும் படித்தவர்கள் அல்ல, எல்லோரும் அரசியல் தெரிந்தவர்கள் அல்ல. நாட்டில் எப்படி அரசியல் நடத்த வேண்டும், எப்படி நடத்தினால் பொருத்தமாக இருக்கும் என்று எல்லோரும் தெரிந்து இருப்பார்கள் என்று சொல்லமுடியாது. மக்கள் அத்தனை பேரும் விவரம் தெரிந்தவர்கள் என்று சொல்ல முடியாது, ஆனால் அந்த மக்களையும் சேர்த்துத்தான் நாம் யோசித்து போராட்டம் நடத்த திட்டமிட வேண்டும். அப்படிப்பட்ட நிலைமையில் நாம் தேர்ந்து எடுக்கும் முறை எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதையும் எண்ணிப் பார்த்துத்தான் முடிவு எடுப்பது முறையாக இருக்கும்,

இதைப் பற்றிக் கேட்டால் அண்ணா அவர்கள் செய்யவில்லையா என்று சொல்கிறார்கள். எத்தனை நாட்களுக்கு அது சொல்லப்பட்டது. எத்தனை நாட்கள் அதைப் பற்றி பேசப்பட்டது, என்பதையெல்லாம் நாம மறந்துவிடக்கூடாது. ரயில் நிறுத்தம் செய்வோம் என்று எத்தனை நாட்கள் மக்களிடத்திலே நாம் பேசினோம். அதையெல்லாம் மக்கள் புரிந்துகொள்ளும் வகையிலும், யாரும் அன்றைக்குப் பயணம் செய்யாதீர்கள் என்று சொல்லியும் தான் அதைச் செய்தார்கள். இப்போது அப்படி அல்ல. அதற்கான நேரம் இல்லை. அப்படியிருந்தும் ரயில் நிறுத்தப்பட்டுவிட்டது. ரயில் ஓடாது என்று சொல்லிவிட்ட பிறகும் மறியல் நடந்தது. சென்னை ரயில் நிலையம் முன்னால் ஆட்கள் மறியல் நடத்தினார்கள். விழுப்புரத்தில் 6—மணிக்கு ரயில்கள் நின்றுவிட்டன. இந்த அரசு யாரையும் அதற்காகக் குறை கூறவில்லை.

அந்தந்த இடங்களுக்குப் பேருந்துகளை அனுப்பி, எங்கெங்கே அவர்கள் போகவேண்டுமோ, அந்தந்த இடங்களுக்கு அவர்களை இனாமாகவே, இன்னும் சொல்லப்போனால் சில இடங்களில் காலை உணவு கொடுத்து, அவர்களைக் கொண்டு போய் சேர்க்கவும் செய்து இருக்கிறோம். இதையெல்லாம் நாங்கள் செய்தோம் என்றாலும், செய்யாமல் விட்டு விட்டால் கெட்ட பெயர் யாருக்கு வந்து இருக்கும்? தி.மு. கழகத்திற்கு வந்து இருக்கும். அவர்கள் நிறுத்தி விட்டார்கள், நாம் எங்கே போவது என்று மக்கள் சங்கடப்பட்டு இருப்பார்கள். அதனால் அவர்களுக்குத்தான் கெட்ட பெயர் வந்து இருக்கும். ஆனால் நாங்கள் அந்த நிலையைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. தமிழ் மக்களுக்கு, இங்கேயிருக்கும் மக்களுக்கு, எந்தவிதமான ஆபத்தும் வரக்கூடாது என்பதற்காக இலங்கைப் பிரச்னைக்காக நடத்தப்படும் போராட்டத்தின் காரணமாக இப்படி நடக்கிறது என்று மக்களுக்கு அருவருப்பு வரக்கூடாது என்பதற்காக நாங்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக்

கொண்டு, அவர்கள் எல்லாம் எந்தெந்தப் பகுதிக்குச் செல்ல வேண்டுமோ அந்தப் பகுதிக்கு பஸ்களை வைத்து அனுப்பி வைத்தோம் என்று மனநிறைவோடு சொல்கிறோம். இதற்காகத் தான் எங்கள் மீது கண்டனக் குரலா? எங்களுக்கு கண்டனமா? என்று கேட்பதற்கு எங்களுக்கு உரிமையிருக்கிறது என்று நான் எண்ணுகிறேன்.

(முற்பகல் 11–10)

இப்படிப்பட்ட நிலைமையில் மிக நிறைந்த காரணங்களைச் சொல்லலாம். அவற்றையெல்லாம் நாங்கள் பொருட்படுத்த வில்லை. ஆனால் இங்கே நேற்றையதினம் சொன்னவர்கள் ஒரு அழகான உவமானத்தைச் சொல்லியிருக்கிறார்கள். தலை யாட்டிப் பொம்மை என்று சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) சொன்னது நேற்றைக்கு, பதில் இன்றைக்கு, எப்போது சொன்னால் என்ன? அதை சரியாகச் சொல்லியிருக்க வேண்டும், தஞ்சாவூர் தலையாட்டி பொம்மை என்று சொல்லியிருக்க வேண்டும். (குறுக்கீடு) தஞ்சாவூர்தான் ஆரம்பித்தது. நீ சின்னப்பிள்ளை, உனக்குத் தெரியாது (மேசையை தட்டும் ஒலி) அங்கேதான் அந்த உருட்டுப் பொம்மை கண்டுபிடிக்கப்பட்டது அது தலையை மட்டும் ஆட்டாது, உடலையே ஆட்டும் கமத்திப் படுக்க வைத்தால் மறுபடியும் தூக்கிக்கொள்ளும், மலத்திப் படுக்க வைத்தால் நிற்கும். சரிவில் படுக்க வைத்தாலும் நேரே நிற்கும், இந்த சைடிலும் நிற்கும், அந்த சைடிலும் நிற்கும். அது தி.மு.க.வே தவிர அண்ணா தி.மு.க. அல்ல (மேசையை தட்டும் ஒலி).

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: அதற்கு வீரம் இருக்கிறது, எழுந்து நிற்கிறது.

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்:** அது வீரம் அல்ல. சந்தர்ப்ப யோசனை. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கிற சாதுரிய பொம்மை அப்படித்தான் வைத்துக்கொள்ள வேண்டும். அதனுடைய அமைப்பு அப்படி. அடியிலே கனமான அமைப்பு, அது எழுந்து நிற்கும். எங்கேயும் தலை வணங்கும், எங்கேயும் எழுந்து நிற்கும். நாங்கள் தலை சாய்ப்போம், எது நியாயமோ அந்தப் பக்கம். இப்படித் தலையாட்டினோம். இப்போது தலையாட்டுகிறீர்களே. சரி இல்லை என்றால் சரியில்லை என் மனசாட்சிக்கு திருப்தியில்லை என்று சொல்லலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: எமர்ஜன்சியைக் கண்டித்த எங்களையா கண்டிக்கவில்லை என்கிறீர்கள்?

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்:** அந்த எமர்ஜன்சியை வைத்து எங்களை பழிவாங்கினீர்களே. அதைக் குறிப்பிட வேண்டாம், நினைவுபடுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். எத்தனை பேர்களை நீங்கள் எமர்ஜன்சியை வைத்துக் கொண்டு பயமுறுத்தினீர்கள்? சிறையில் தள்ளவில்லையா? தண்டனை வழங்கவில்லையா? கைது செய்யவில்லையா? வழக்கு போடவில்லையா?





கண்டனம் நீங்கள் செய்தீர்கள். நான் மறுக்கவில்லை. உங்களுடைய செயல் எப்படி இருந்தது? உங்கள் கட்சிக்காக, உங்கள் நலத்திற்காக மற்றவர்கள்மீது அதைப் பாய்ச்சினீர்கள். அதைப் பயன்படுத்திக்கொண்டவர்கள் பேசினால் மட்டும் போதுமா? பேச்சுக்கும் செயலுக்கும் ஒரு தொடர்பு இருக்க வேண்டாமா? அதற்காகச் சொல்கிறேன். நாங்கள் தலை யாட்டுவது என்பது, 1977–ல் தலையாட்டினோம். 1980–ல் நாங்கள் எதிர்த்தோம். அது தலையாட்டிப் பொம்மைக்குப் பொருத்தம் ஆகாது. நீங்களும் அப்படி இருக்கிறீர்கள்.

ஆனால் நேற்றையதினம் கேட்கும்போது ஒன்றைச் சொன் னீர்கள். நாங்கள் இந்திரா காந்திக்கு துணை இருந்தோம், அவர்கள் பாராட்டினார்கள் என்று சொன்னீர்கள். இந்தப் பாராட்டை நீங்களும் செய்ய வேண்டாமா? 2 லிருந்து 15 இடமாக மாற்றும் போது அதற்கு நீங்கள் நன்றி சொல்ல வேண்டாமா? (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் பாராட்டினார்கள்: இவர்களால் எனக்கு பதவி கிடைத்தது என்று சொன்னார்கள் என் றே வைத்துக்கொள்ளுங்கள். ஆனால் அவர்களால் எனக்கு பதவி கிடைத்தது என்று சொல்ல வேண்டாமா? யார், யார் விட்டதையும் தொடரவேண்டியது தான் என்னுடைய வேலை. என்னைப்பற்றி குறை இருந்தால் நீங்கள் சொல்லுங்கள். அதைக் கேட்டுக்கொள்ளத்தான் வேண்டும். அதை மறுக்க முடியாது. இங்கே அதை மறைத்து சாமர்த்தியமாகப் பேசி வெற்றிபெற்றுவிட முடியாது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு திறமை நிச்சயமாக உண்டு. அந்தத் திறமைக்கு முன் இன்னொருவர் வணங்கித்தான் தீரவேண்டும், அடங்கித்தான் தீரவேண்டும். அந்தத் திறமை முழுவதும் எனக்கு இல்லையே என்பதுதான் எனக்கு வருத்தம். என்னைவிட திறமை வாய்ந்த வர்கள் இருப்பதால்தான் இப்படிப்பட்ட நிலைமை வருகிறது.

இங்கே மதிப்பிற்குரிய மாண்புமிகு வழக்குரைஞர் ரகுமான் கான் அவர்கள் ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றி எல்லாம் பின்னால் சொல்வதாக இருந்தாலும், எதை எதை சேர்த்திருக்கிறோம், எந்த எந்த கட்சிக்காரர்கள் கொடுத்த எந்த எந்த திருத்தங்களை எல்லாம் சேர்த்திருக் கிறோம் என்று சொல்லி அவர்கள் முடித்து வைப்பார்கள். இருந்தாலும் என்னையும் உட்படுத்தித்தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

அவர் ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார். ''ஐக்கியநாடுகள் பாதுகாப்புச் சபையில் இந்தப் பிரச்சினையை எழுப்பவேண்டும் என்று மகஜரில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் பிரதம இந்திராகாந்தி இதுபற்றி எழுப்பவில்லையே. பாலஸ்தீனத்தைப் பற்றிப் பேசினார். தென்னாப்பிரிக்கா நிறவெறியைக் கண்டித்து பிரதமர் இந்திராகாந்தி ஐ. நா. சபையிலே பேசினார்'' என்று கேட்கிறார். காமன் வெல்த்தில் உள்ள ஒரு நாடு—நான் யாருக் கோ பரிந்து பேசுவதாக நினைக்கவேண்டாம்—நடுநிலை

நாடுகளிலே ஒன்றான இலங்கையும் சேர்த்து ஒரு அமைப்பின் தலைவர். அவர் எங்கே பேசவேண்டுமோ அங்கே பேசவேண்டுமே தவிர, அங்கு போய் அதைப் புகாராகச் சொல்வது அவரது தலைமைக்கு ஏற்றதாக இல்லை. அதற்குத்தான் ஆட்களை வைத்து இருக்கிறார், நம்மவர்களையும் சேர்த்து என்பதை இங்கே சொல்லவிரும்புகிறேன். (குறுக்கீடு) அவர் இதைக் கண்டித்த அதே சமயத்தில் இன்னொன்றையும் பேசுகிறார். 'ரே கமிஷன் திரும்பப் பெறுவதற்கு அல்லது நேர்தலை ஒட்டியா நீங்கள் இந்திரா காந்தியை பாராட்டியிருக்கிறீர்கள்' என்று கேட்கிறார். நான் சொல்லுகிற பதில் வேதனையைத் தந்தால் சிந்திக்கவேண்டுமே தவிர, ஆத்திரப்படக்கூடாது என்பதை அந்த நண்பருக்குச் சொல்லிக் கொள்கிறேன். நான் என்னைப் பற்றிச் சொல்லிவிட்டுத்தான் மற்றவர்களைப் பற்றி சொல்வேன்

'ரே கமிஷன்' வந்தபோது அது வழக்கு மன்றத்திற்குப் போனது. வழக்காடினார்கள். அது உச்ச நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறது. அதுதான் நிலைமை. நான் 1977 லும் சரி, வெற்றி பெற்று ஜனதா ஆட்சிக்கு வந்த பின்னால் சரி, பிறகு இந்திராகாந்தி அம்மையார் இப்போது பிரதமராக இருக்கிறாரே, அவர் பதவிக்கு வந்த பிறகும் சரி, எங்களை டிஸ்மிஸ் செய்த பிறகும் சரி, நாங்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு, வந்த பிறகு நாங்கள் பேசிகொண்டிருக்கிறோமே, தமிழ்நாட்டுக்கு இன்னின்ன வேண்டுமென்று கேட்கிறோமே, இதையெல்லாம் பேசியிருக்கிற நேரத்திலேயும் கூட, இதுவரையில் இந்தியாவிலே ஆட்சி செய்த எந்த அமைச்சரவையிலும், எந்த அமைச்சரிடமும், எந்தப் பிரதமரிடமும், என்னுடைய இன்காம்டாக்ஸ் கணக்குக்கு தயவுகூர்ந்து விதிவிலக்குத் தாருங்கள் என்று கேட்காத இராமச்சந்திரன் நான் இப்போது பேசுகிறேன். (கைத்தட்டும் ஒலி) நீதிமன்றத்திற்குப் போய்தான் நான் என்னுடையவழக்கைத் தீர்த்துக் கொள்கிறேனே தவிர, பிரதம அமைச்சரிடமோ, வேறு நிதியமைச்சரிடமோ அல்லது சட்ட அமைச்சரிடமோ சென்று எனக்குக் கொஞ்சம் ஆதரவு காட்டுங்கள் என்று கேட்காத இராமச்சந்திரன் பேசுகிறேன்.

அதுமட்டுமல்ல இந்த 'ரே கமிஷன்' என்று சொன்ன விஷயம் கூட, நான் இதுவரையில் எந்த அமைச்சரிடமும் நான் பேசியதில்லை. இங்கே அறைகூவல் விடுகிறேன். நிரூபியுங்கள். இந்த நிமிடமே நான் என் பதவியை ராஜிநாமா செய்கிறேன். பிரதம அமைச்சரிடத்திலோ, மத்திய அமைச்சரிடமோ, சட்ட அமைச்சரிடமோ, எந்த நபரிடமோ, அல்லது செல்வாக்கு உள்ளவர்கள் என்று அப்படி நீங்கள் யாரையாவது கருதினால், அவர்களிடமோ இந்த 'ரே கமிஷன்' பற்றி, நீங்கள் விட்டு வைக்கவேண்டும் ன்று நான் கேட்டிருக்கிறேன். கேட்டேன் என்று நிரூபிப்பீர்களேயானால், நான் நிச்சயமாக கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவேன். நாங்கள் வழக்குமன்றத்திற்குத் தான் போகிறோமே தவிர, வழக்கை வாபஸ் வாங்குங்கள்



என்று கேட்கின்ற பழக்கம் எங்களுக்கு இல்லை. சர்க்காரியா கமிஷன் என்னவாயிற்று? பழைய முதலமைச்சர் மீது போட்ட சர்க்காரியா கமிஷன் விசாரணையை பிரதமர் மொரார்ஜியிடம் கேட்டார்கள், டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் வழக்கை வாபஸ் வாங்கவேண்டும் என்று (குறுக்கீடு).. பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்களே சொல்லி இருக்கிறார்கள். பத்திரிகையிலே வந்திருக்கிறது. வேண்டுமானால் கொண்டு வந்து காண்பிக்கிறேன். (குறுக்கீடு) (கூச்சல், குழப்பம்).

அதற்குப் பிறகு..(குறுக்கீடு) நான் பேசிய பிறகு பேசுங்கள். இன்னொன்றையும் சொல்கிறேன். ஜெயப்பிரகாஷ்நாராயணனிடமிருந்து கடிதம் பெற்று, மொரார்ஜி தேசாயிடம் சென்று, கேட்டு அவர்கள் மறுத்துவிட்டார்கள் என்பது இங்கே மக்களின் முன் வைக்கப்பட்ட செய்தி என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன், (குறுக்கீடுகள், கூச்சல், குழப்பம்).

(முற்பகல் 11·20)

மாண்புமிகு பேரவைத் தலைவர். எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடு) முதல் அமைச்சர் பேசிய பிறகு நீங்கள் விளக்கம் கேட்கலாம்(குறுக்கீடு). (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன். இதை மாண்புமிகு பிரதமராக இருந்த மொரார்ஜி தேசாய் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் இது எல்லோராலும் பேசப்பட்டது. பத்திரிகையிலும் வெளிவந்திருக்கிறது என்பதை (குறுக்கீடு) 'ரே கமிஷனுக்கும் இதற்கும் சம்பந்தம் உண்டா? (குறுக்கீடுகள்) 'ரே கமிஷன்' எப்படி வந்தது? (குறுக்கீடுகள்) (கூச்சல், குழப்பம்).

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

ஒரு உண்மையை நான் மீண்டும் இங்கே வற்புறுத்த விரும்புகிறேன். இந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சட்டசபையில் இருக்கின்ற அதன் தலைவர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் இந்த இலங்கைத் தீர்மானத்திற்கும் இந்த சர்க்காரியா கமிஷனுக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டார்கள். அவர்களுடைய உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் ரே கமிஷனைப் பற்றிப்பேசும்போது, அவர் ஏன் அதைப்பற்றி குறுக்கிட்டு, ஏன் பேசவில்லை என்பதை என்னால் புரிந்துக்கொள்ள முடியவில்லை. ரே கமிஷனைப் பற்றி பேசலாம் சர்க்காரியா கமிஷனைப் பற்றிப் பேசக்கூடாது என்றால், இது ஒருதலைப்பட்சமான நிலைமை என்பதை நான் இங்கே குறிப்பிட கடமைப்பட்டிருகிறேன். ஆட்கள் இங்கே

இல்லை. இருந்தாலும் அவர்கள் பேச வேண்டியதை அவர்கள் இருக்கும்போது பேச வேண்டியதை, பத்திரிகையின் மூலமாகத் தான் அவர்கள் படிக்கவேண்டி வருகிறது என்று கருதுகிறேன். ஆனாலும் அங்கே இருந்து கேட்டாலும் சரி, இங்கேயிருந்து கேட்டாலும் சரி, உண்மையை நான் சொல்லியாகவேண்டும். ஆகவே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கொடுக்கப் பட்ட தீர்மானங்கள் உண்மையிலே மைய அரசையும் ஒத்துழைத்த மாநில அரசையும் கண்டிக்கிற தீர்மானமாக இருக்கிறதே தவிர, இந்தியப் பேரரசு இந்த அளவிற்கு முன் வந்து. அமைதிப் பேச்சு நடத்தி, மத்தியஸ்தரை அனுப்பி, தங்களுடைய அதிகாரத்தை எந்த அளவிற்கு எங்கே காட்ட முடியுமோ, அந்த அளவிற்கு, ஜெயவர்த்தனேயுடன் பேசி, நிலைமையை கொஞ்சம் கொஞ்சமாக அபிவிருத்தி செய்துக் கொண்டு வருகிற நேரத்திலே அதைக் குலைக்கப் பார்க்கும் நிலைமை ஈழத் தமிழர்களுக்கோ, இலங்கை வாழ் தமிழர்களுக் கோ, இலங்கையிலே பிழைக்கச் சென்றவர்களுக்கோ உதவி செய்வதாக ஆகாது என்பதை நான் இங்கே வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் குறிப்பிடவேண்டியது என்னுடைய மாபெரும் கடமையாகும். ஒன்றை மட்டும் நான் இப்போது பேசவேண்டிய அவசியம் இல்லை என்ற நிலைமை ஏற்பட்டு விட்டதால், இறுதியாகச் சொல்கிறேன். இந்தத் தமிழக அரசு இதுவரையில் யாருக்கும் பாதுகாப்பு கொடுக்கவும் இல்லை, படைப் பயிற்சி தரவும் இல்லை. இனியும் அதிலே அக்கறையும் இல்லை. எங்களுக்கு அதிலே நம்பிக்கையும் இல்லை. ஆனால் ஈழத் தமிழ் மக்கள் அடைக்கலம் என்று வந்தார்களானால், இந்த தமிழக அரசு முழு முயற்சியோடு அவர்களுக்கு பாது காப்பு அளிக்கும் என்பதையும் நான் இங்கே அறுதி இட்டுச் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதைச் சொல்கிற நேரத்தில் இன்னொன்றையும் சொல் கிறேன். அவர்கள் தன்மானத்தோடு அங்கே வாழ, மக்களு டைய ஆதரவைப்பெற்று தங்களுடைய கொள்கையை நிறை வேற்றிக் கொள்ள அவர்கள் முயலும்போது அவர்களுடைய உரிமைகளுக்கு குறுக்கே நிற்காமல், ஜனநாயக வழியில், எந்தெந்த உதவிகளைச் செய்ய முடியுமோ, எந்தெந்த அதிகாரம் எங்களுக்கு உண்டோ அதற்கு உட்பட்டு அவைகளை நாங்கள் செய்வோம். அதற்கு இந்தச் சட்டமன்றத்திலே இருக்கிற அத்தனை பேர்களும் ஒத்துழைப்பார்கள் என்பதிலே எனக்கு சந்தேகம் இல்லை. அந்த உறுதிமொழியை இங்கே தர நான் கடமைப்பட்டிருக்கிறேன் யாரையோ கைது செய்து வைத்திருக்கிறார்கள் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் பத்திரிகையிலே ஏதோ அறிக்கை தந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஈழத் தமிழர்களை நாங்கள் கைது செய்யவில்லை. அங்கே படம் எடுக்கிறார்கள் அதை கவனிக்க வேண்டும் என்று சொன்னார்கள். (குறுக்கீடு)



திரு. ப. நெடுமாறன். நான் பத்திரிகையிலே அறிக்கை தரவில்லை. தங்களுக்குக் கடிதம் எழுதியிருந்தேன்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் ஆமாம் எனக்கு கடிதம் எழுதியிருந்தார்கள். அதை நான் படித்தேன். அதற்கு பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஈழத் தமிழர்கள் என்று சொல்லி சில வன்முறையாளர்கள்
ஏதோ ஒரு அரசியல் கட்சியினுடைய துணை கொண்டு
இங்கே பல தவறான காரியங்களில் ஈடுபட முனைகிறார்கள்
என்ற செய்தி இந்த அரசுக்கு உண்டு. ஆகவேதான் ஈழத்
தமிழர்கள் யார்? அவர்கள் அல்லாத அந்தக் கயவர்கள் யார்
என்பதைக் கண்டு பிடிக்கத்தான் அதை எடுக்கிறோமே தவிர,
ஈழத் தமிழர்களுக்கு எந்த ஆபத்தும் வருவதற்காக அல்ல.
ஆபத்து வருமானால் இந்த அரசு இருக்கும்போது வராது
என்பதை மட்டும் நிச்சயமாக மாண்புமிகு நெடுமாறன்
அவர்களுக்கு உறுதி கூறுகிறேன். தமிழகத்திற்கும் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன். இதை நான் முதலமைச்சர் என்கிற
முழு பொறுப்போடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

ஒரு கடிதத்தை நான் இங்கே படிக்க வேண்டிய அவசியம்
இருக்கிறது, இலங்கையிலே இருக்கின்றவர்கள் எனக்கு எதிராக
இருக்கிறார்கள் என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால்
அதற்கு முன்னாலே, இமேஜ் என்ற சுயேச்சையான ஆராய்ச்சி
நிறுவனம் ஒன்றை, இலங்கைப் பிரச்சினை குறித்து ஆய்வு
செய்யுமாறு இந்தியா டுடே என்னும் புகழ் பெற்ற ஆங்கில ஏடு
கேட்டுக் கொண்டது. அதைப்பற்றி சொல்ல விரும்புகிறேன்.

ஆகிய 4 நகரங்
பம்பாய், டெல்லி, கல்கத்தா, சென்னை
களிலும், சமூகத்தின் பல பகுதி மக்களோடும் நடத்திய கருத்து
கணிப்பின் விவரம் இலங்கையில் இந்தியா ராணுவ தலையீட்டை
செய்திருக்க வேண்டுமா என்ற கேள்விக்கு சென்னை நகர
மக்கள் தெரிவித்த கருத்து—ராணுவ தலையீட்டை ஆதரித்த
வர்கள் 32 சதவீதம். ராணுவ தலையீடு கூடாது என்று
கூறியவர்கள் 62 சதவீதம். எந்தக் கருத்தும் தெரிவிக்
காதவர்கள் 6 சதவீதம், இதை எதற்காக கூறுகிறேன் என்றால்,
சென்னை நகரத்திலே படித்த மக்கள், நடுத்தர மக்கள,
உழைக்கும் மக்கள் என்று அத்தனை பேர்களும் இருக்கிறார்கள்.
இவ்வளவு நாம் செய்தும் கூட, சொல்லியும் கூட, அவர்கள்
எல்லாம் போராட்டம் நடத்தியும் கூட, இந்த முடிவைத்தான்
அவர்கள் எடுக்கிறார்கள். இதுதான் அவர்களுக்கு முடிவாக
கிடைத்திருக்கிறது என்றால் இந்திய அரசின் பிரதம அமைச்சர்
அவர்களும், அதைப் பின்பற்றுவது மட்டும் அல்ல; நம்முடைய
அறிஞர் அண்ணாவின் கொள்கைப்படி— அண்ணா அவர்களே
அவருடைய பதவி ஏற்றபின் இலங்கைக்கு செல்லும்போது,

பிரதமர் அவர்களிடம் வெளியிட்டிருக்கிறார்கள். இலங்கையினுடைய நன்மைக்காக நீங்கள் எடுக்கிற முடிவுகளுக்கு நாங்கள் ஒத்துழைப்போம் என்று அவர்கள் சொன்ன அந்தக் கருத்தை வைத்து, நாங்கள் அந்த முறையிலே பணியாற்றுகிறோம் என்பதைச் சொல்லி, இன்னொன்றையும் மாண்புமிகு திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள்,

அண்ணா அவர்கள் என்ன என்ன எழுதியிருக்கிறார்கள் என்று திரு. எஸ். டி. எஸ். நடத்துகின்ற, அவர் சிறப்பாகத் தயாரிக்கின்ற பத்திரிக்கையில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதிலே ஒரு பக்கத்தைப் படித்துவிட்டு இன்னொரு பக்கத்தைப் படிக்காமல் விட்டுவிட்டார். நான் அப்போதே கேட்டேன். அதில் அண்ணா அவர்கள் எழுதியிருக்கிறார்கள், எழுச்சிக் கனல் அதாவது போராட்டத்தால் அடக்க முடியாத கொந்தளிப்பு அல்லது உள்நாட்டுப் போர் உருவாகலாம் என்பதையும் எடுத்துக்காட்டி தமிழக மக்களின் அனைவருடைய ஆதரவுடன் ஒரு கொடியின்கீழ் கூடியிருக்கிற இந்தப் பேரணி இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டார நாயகா அவர்களும் அவர்களுடைய அமைச்சரவையும் உடனடியாகக் கீழ்க்கண்டவற்றைச் செய்யவேண்டுமென்று கோருகிறது என்று அவர் சொல்லி, தமிழ் இனத் தலைவர்கள் அனைவரையும் நிபந்தனையின்றி விடுதலை செய்யுங்கள், ஊரடங்குச் சட்டங்கள், அடக்குமுறைச் சட்டங்கள் அனைத்தையும் நீக்கிவிடுங்கள் இலங்கை வாழ் தமிழ் மக்களின் ஐயத்தைப் போக்க ஒரு வட்டமேஜை மாநாடு நடத்தி அமைதியையும் ஒற்றுமையையும் மீண்டும் நிலைநிறுத்த இப்பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள், என்று சொன்னார்கள். அதைத்தான் இந்தியப் பேரரசு செய்கிறது. இங்கிருந்து திரு. ஜி. பார்த்தசாரதி அவர்களை அனுப்புகிறார்கள். அவர்கள் எங்களையும் சந்தித்தார்கள், அங்கே போனபொழுது. கலைஞர் கருணாநிதி அவர்களையும் சந்தித்தார்கள். எதிர்க்கட்சித் தலைவர் ஆயிற்றே அவர்கள் எதிர்க்கிறார்களே என்று அவர்களை விட்டுவைக்கவில்லை. கலைஞருடைய எண்ணத்தையும் அவர்கள் தெரிந்துகொண்டு அங்கே சென்றார்கள்.

(முற்பகல் 11-30)

அப்போது முடியாது என்று சொல்கிற ஜெயவர்த்தனே இப்போது மீண்டும் அழைத்திருக்கிறார்கள் என்றால் நாம் பிரச்சினையை நினைத்துப் பார்க்க வேண்டும். ஒரு சமாதானப் பேச்சு நடந்து கொண்டிருக்கும்போது இராணுவத்தை ஒரு நாடு எப்படி அனுப்பமுடியும்? உலகப் பிரச்சினையாகிவிடக்கூடிய ஒரு பயங்கர நிலைமையை உருவாக்கக் கூடாது என்ற ஒரே எண்ணத்தோடு இன்னும் பல உயிர்கள் அழியக்கூடாது என்பதற்காகவும் அண்டையிலே இருக்கக்கூடிய ஒரு நாடு



நம்மோடு விசுவத்தோடு மட்டுமல்லாமல் அன்புடனும், பக்தியுடனும், பாசத்துடனும் பொறுமையுடனும் இருக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று எடுக்கிறபோது அதை நாம் எவ்வளவு தூரம் பாராட்டவேண்டும் என்று இல்லாமல் இப்படிச் செய்கிறார்கள், அவர்களுக்கு ஏன் பாராட்டு என்கிறார்கள்.

பேசாமல் ஒருவர் கருத்தை ஒருவர் எப்படித் தெரிந்துக் கொள்ளமுடியும். அவர்கள் பேசினார்கள். அவர்கள் கருத்தை நான் புரிந்துகொண்டேன். நான் பேசினேன், அவர்கள் புரிந்து கொண்டார்கள், வெளிநடப்புச் செய்தார்கள். புரிந்து கொள்ளும்போது சில பிரச்சினைகள் எழும். சரியான தீர்வு காண்பதற்கு பதில் சொல்லவேண்டும. அதற்குத்தான போகிறார்கள். அது வெற்றிகாண்பதற்கு இந்தத் தீர்மானம் உதவியாக இருக்கவேண்டும், என்றும் இன்னொரு வார்த்தையை நாவலர் அவர்கள் சேர்க்கமுடியுமானால் சேர்ப்பார்கள் என்று கருதுகிறேன். அது என்னவென்றால் இந்தமுறை திரு. ஜி. பார்த்தசாரதி ஜெயவர்த்தனேயுடன் பேசுகின்ற பேச்சு மற்ற அமிர்தலிங்கம் போன்றவர்களையும் உள்ளடக்கி பேசவேண்டிய ஒரு வட்டமேஜை மாநாட்டுக்கு அடித்தளமாக அமைத்து, ஈழத் தமிழர்களையும் அழைத்துப் பேசி தீர்க்கவேண்டுமென்ற ஒரு கோரிக்கையை இதிலே வைக்கலாம் என்று கருதுகிறேன். அதை எல்லோரும் ஏற்றுக்கொண்டால் அதையும் இணைக்கலாம் என்று நான் கருதுகிறேன். அப்படிப்பட்ட நிலைமை ஏற்படும் என்றால் ஈழத் தமிழர்களை அவர்கள் மதித்தாகவேண்டும். அது ஈழத்தமிழர்களின் விடுதலைப் புலிகள் இருக்கிறார்களே அவர்களின் பிரதிநிதிகளிலே யாராவது ஒருவரை அவர்கள் அழைத்து பேசவேண்டும். போராடினார்கள் என்றால் அவர்களை எதிர்த்து அழிப்பதற்கு யாராவது எண்ணமிடுவார்களேயானால் அவர்கள் தோற்றுப்போவார்கள். ஜனநாயகத்தில் உலகத்தில் எதிர்ப்பவர்களையெல்லாம் அழிப்பது என்ற கொள்கை வெற்றிபெற்றது கிடையாது. ஒரு முறை வெற்றி பெற்றாலும் இன்னொருமுறை இன்னொரு சக்தி அதை அழித்துவிடும் என்பதுதான் நாம் உலகத்திலே இயல்பாக பார்த்துக்கொண்டிருப்பது. ஆகவே ஜெயவர்த்தனே அவர்கள் நல்ல ஜனநாயகவாதியாகச் செயல்படவேண்டுமென்று நான் இந்த அவையின் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, இந்த முறை மீண்டும் நீண்டு நிற்க அவருக்கு அதிகார நீட்டிப்புக் கொடுப்பதற்கு இலங்கையிலே உள்ள இந்தியப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள், இலங்கையிலே உள்ள தமிழ்ப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் அளித்த வாக்குகள் அவர்களுக்கு உதவி செய்தது என்பதை அவர்கள் மறந்துவிடக் கூடாது. அன்னமிட்ட கையை கடித்துக் குதறி அதை வெட்டிவிடக்கூடிய காரியத்தை ஜனாதிபதி ஜெயவர்த்தனே செய்யக் கூடாது அது ஆபத்தாக முடியும் என்பதை நான் இங்கே எடுத்து சொல்லி அந்த வார்த்தை தவறாக இருந்தாலும் ஆபத்து

என்றால் அவர் உயிருக்கு அல்ல அவருடைய பதவிக்கு என்று நான் சொல்லி ஜனநாயகம் அவரை மதிக்காது, அவர்களை ஏற்காது, போற்றாது, புகழாது. எப்போதுமே இந்த முயற்சியில் நாம் வெற்றி பெறாவிட்டால் அவருடைய வரலாறு கருப்புப் புள்ளியில் இருக்கும் வரலாறு என்பதை நான் இந்த அவையின் சார்பாக சொல்லி இந்திய பேரரசு நம்மோடு ஒத்துழைத்தற்கு அவர்களுக்கு மீண்டும் நன்றி கூறி இந்த முறை திரு. ஜி. பார்த்த சாரதி அவர்கள் வெற்றிப் பெற்று வரவேண்டும் என்றும், அவர் போய் வந்த பிறகு தான் நாங்கள் கருப்புச் சட்டையை கழற்றுவ தாக இருக்கிறோம் என்பதையும் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொண்டு, அதுவரை இந்த கருப்புச் சின்னம் இருக்கட்டும் அவர் வந்த பிறகு நாங்கள் கழற்றி விடுகிறோம், வேறு என்ன வேலை இருக்கிறதோ பார்ப்போம் என்று நான் இங்கே எடுத்துச் சொல்லி, இந்த தீர்மானத்தில் பல கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் திருத்தங்கள் கொடுத்து இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் நான் நன்றியைக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்கள் பெருமளவுக்கு ஆதரவு தந்து இருக் கிறார்கள், அவர்களுக்கும் நான் நன்றி கூறுகின்றேன். இங்கே இருக்கின்ற ஒவ்வொரு கட்சியினருக்கும் இந்த அரசின் சார்பாக நன்றியை கூறுகின்றேன்.

எங்களை நாங்களே போற்றிகொள்கிறோம் என்கிறார்கள் எங்களுக்கு அந்த தீர்மானம் தேவையில்லை, நீங்கள் வேண்டாம் என்றால் எடுத்துவிடுங்கள். அரசு செய்வது நியாயம் என்று வெளியே பேசுகிறவர்கள் இங்கே இருக்கிறீர்கள். அப்படியானால் அதற்கு அனுமதி தாருங்கள், நாங்கள் செய்தது சரி என்பதற்கு ஒரு அத்தாட்சிப் பத்திரமே தவிர எங்கள் புகழை ஏற்றிச் கொள்ள நாங்கள் எங்கள் புகழை மக்களிடம் சொல்லிக்கொள்ள இந்த தீர்மானம் அல்ல. அதற்கு உத்திரவாதம் என்பதை நீங்கள் ஏற்றுக்கொண்டு, அந்த வகையில் ஆதரிக்க வேண்டும் என்றால் ஆதரியுங்கள், எடுக்கச் சொன்னால் எடுத்துவிடு கிறோம். ஆனால் இந்தியப்பேரரசை நாம் பாராட்டித்தான் தீரவேண்டும் என்பதையும் எடுத்துச் சொல்லி ஒத்துழைத்த அத்தனைப் பேருக்கும் நன்றி சொல்லிக் கொள்கிறேன். நேற்று பதில் சொல்ல வேண்டும் என்று கருதினேன். அவர்கள் கையெழுத்து போடும்போது சொன்னார்கள், நாங்கள் வந்து விட்டோம், கையெழுத்துப் போடுகிறோம், ஆனால் முழுமையாக எங்களுக்கு உடன்பாடு இல்லை என்று சி. பி. ஐ. அவர்கள் கருத்துக்களை நானே இங்கே சொல்லி அந்த வகையில் மாறு பட்டவர்கள் ஒத்துழைக்கிறார்கள்; யோசனைக் கூறுகிறார்கள், அவர்களுக்கு எல்லாம் நன்றி கூறி என்னுடைய பேச்சை முடிக்கிறேன். இதற்கு பிறகு நாவலர் அவர்கள் தீர்மானத்தை பற்றிப் பேசுவார்கள்.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பாக விரிவாகவும் விளக்கமாகவும் ஒரு தீர்மானம் இங்கே கொடுக்கப்பட்டு, அந்த தீர்மானத்தின் மீது இந்த மன்றத்தில் இருக்கின்ற அனைத்துக் கட்சித் தலைவர்களும் தங்களுடைய உணர்ச்சிப்பூர்வமான நல்ல கருத்துக்களை மிக சிறப்பாகவும், செம்மையாகவும் எடுத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரசு எடுத்து இருக்கின்ற நடவடிக்கைகள் பற்றியும் அரசு எடுத்துக்கொள்ள முனைந்து இருக்கின்ற தன்மைகள் பற்றியும் தன்னுடைய பதிலுரையில் மிக விரிவாகவும், விளக்கமாகவும் சொல்லியிருப்பதன் காரணமாக மேற்கொண்டு அதுபற்றி நான் கூற வேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன். இங்கே பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் எல்லாம் அதற்கு திருத்தங்கள் தந்து இருக்கிறார்கள். அந்த அந்த திருத்தங்களை எவற்றை தீர்மானங்களில் இணைத்துக்கொள்ள இயலுமோ அவற்றை நாம் இணைத்துக்கொண்டு இருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

முக்கியமாக அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் தம்முடைய பேச்சில் மிக சிறந்த முறையில் உணர்ச்சிகளை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இந்திய அரசு ஏற்றுக்கொண்டு இருக்கிற நடவடிக்கைகளை எல்லாம் அவர்கள் ஆதரித்து இருக்கிறார்கள். அது மட்டும் அல்லாமல் சிலபல தடைகள் விதிக்கவேண்டும் என்று கூறுகின்ற திருத்தங்களை கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் இப்போது இருக்கின்ற சூழ்நிலைகளிலே அப்படிப்பட்ட பகைமையான அடிப்படையில் போக்குவரத்துத் தடை மற்ற தடைகள் ஏற்படுத்துவது பொருத்தமாக இருக்காது என்ற காரணத்தினால்தான், அவர்கள் அதை அழுத்தம் திருத்தமாக கூறினார்கள். அது பலருக்கும் புரியும்படியாக இருக்கும் காரணத்தினாலும் அந்த தீர்மானத்தை அவர்கள் வற்புறுத்தவேண்டாம் என்று அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

மற்றைய திருத்தங்களைப் பொறுத்தவரை எதை எதை இணைத்துக் கொள்ளலாமோ அந்த வகையில் இணைத்துக் கொண்டு ஆக ஒருமித்த உணர்வோடு நிறைவேற்றுகின்ற அளவுக்கு அரசின் சார்பாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் களும், உறுப்பினர்களும் கொடுத்து இருக்கிறார்கள் நிறைவேற்று கின்ற தீர்மானங்களிலே அந்த திருத்தங்களையும் நாங்கள் கொண்டு வந்து சேர்த்து இருக்கிறோம். மற்ற வகையில் ஒரு குறிப்பிட்ட கட்சியினுடைய அடிப்படையில் நாங்கள் எந்த பாராட்டும் தெரிவிக்கவில்லை. அதைதான் எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களும் எடுத்து தெரிவித்து இருக்கிறார்கள். என்றாலும்கூட நாங்கள் இந்த தீர்மானத்தில் எல்லா அரசியல் கட்சிக்காரர்களும் ஒருமைப் பாட்டோடு இருந்து இந்தப் பணிகளை நிறைவேற்றி இருப்ப தற்கு பொதுமக்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்

கிறேன். அனைத்து துறையினருக்கும் நான் நன்றியை தெரிவித்துக் கொண்டு, அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் நான் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக தெரிவித்து இருப்பதன் காரணமாக, எந்த தனிப்பட்ட கட்சிக்கும் தனியாக பிரித்து சொல்லாததன் காரணமாகஅவர்களுடையதிருத்தங்களை அந்த வகையில் வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள் கிறேன்.

(முற்பகல் 11-40)

பொதுவாகவே, அவர்கள் தங்களுடைய உணர்வுகளை, இருக்கிற தன்மைகளை, வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் எந்த அளவுக்கு அந்தத் தன்மைகளை எல்லாம் எடுத்துச்சொல்ல முடியுமோ, அந்த அளவுக்கு ஈடுபாடு கொண்டு சொல்லியிருக் கிறார்கள். இந்த அவையிலே இருக்கிற அத்தனை கட்சிகளின் சார்பாக, மாண்புமிகு முதலமைச்சர் எடுத்துத் தெரிவித்ததற் கிணங்க, அப்பழுக்கற்ற முறையில், தங்கள், தங்களுடைய உணர்வு களை, அந்தந்தக் கட்சிகள் சார்பாக ஒன்றுசேர்ந்த முறையில் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். தனிப்பட்ட முறையிலும் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அவை அத்தனையும் பாராட்டுக்குரியதுதான். அவற்றை, ஒவ்வொன்றாக தனித்தனி யாக எடுத்து பாராட்ட இயலாது என்ற காரணத்தால்தான் ஒட்டுமொத்தமாகவே, பொதுவாகவே நாம் பாராட்டியிருக் கிறோம். ஆனாலும், எதிர்க்கட்சி வரிசையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்தியிருக் கிறார்கள்; வேறு பல வகைகளிலும் வெளிப்படுத்தியிருக் கிறார்கள், எனவே, இந்தத் தீர்மானத்தினுடைய கருத்துக் களுக்கு அவையும் நாடும் மதிப்பளிக்கும் என்ற முறையில் திருத்த வடிவிலே கொண்டு வந்துள்ளவற்றில் எவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டுமோ, அந்த அளவுக்கு நாங்கள் ஏற்றுக்கொண்டிருக் கிறோம். ஆகவே, அரசுத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு அதை ஒரு மனதாக நிறைவேற்றித் தரும்படியாக எல்லா உறுப்பினர்களையும் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்று விவாதிக்கப்பட்ட தீர்மானத்தின் கடைசி பத்திக்கு முந்தைய பத்தியில்-(ங)வில் நிலையான வாழ்வுரிமை களுக்கும், நிலைத்த பாதுகாப்புக்கும் அறவழியில் அறப்போர் நடத்திடும் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு இப்பேரவை தன் முழு ஆதரவை அளிப்பதோடு, அவர்களின் நியாயமான கோரிக்கைகள் அனைத்தும் வெற்றிபெற வேண்டும் என்ற விருப்பத்தையும் தெரிவித்துக்கொள்கிறது என்று குறிப்பிட்டுள் ளீர்கள். அவர்களின் நியாயமான கோரிக்கைகள் என்று எதைக் கருதுகிறீர்கள்? அங்கே, தமிழ் யுனைட்டட் லிபரேஷன் பிரண்டைச் சேர்ந்த 17, 18 பேர்கள், தனி ஈழம் அமைய வேண்டுமென்ற கோரிக்கை வைத்து, வெற்றி பெற்று, இன்றைய தினம்



உறுப்பினர் பதவியை இழந்திருக்கிறார்கள். அது நியாயமான கோரிக்கைதானா? அதை நீங்கள் ஆதரிக்கின்றீர்களா? அல்லது நியாயமான கோரிக்கை அல்ல என்று சொல்கிறீர்களா? இந்தத் தீர்மானத்தை ஓட்டெடுப்பிற்கு விடுவதற்கு முன்னதாக, அரசாங்கம் அந்த நியாயமான கோரிக்கைகள் என்ன என்று கருதுகிறது என்று சொன்னால் தமிழ் ஈழம் வேண்டுமென்று கேட்டு, வெற்றிபெற்று இன்றையதினம் பதவி பறிபோய் இருக்கிறார்களே, அவர்களுடைய கோரிக்கை நியாயமான கோரிக்கை என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறதா என்ற விளக்கத்தைச் சொன்னால், அது எங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முன்மொழியும்போதும் தெளிவுபடுத்தி இருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர் களும் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். ஈழத் தமிழர்கள் ஆகட்டும், அல்லது அங்கே வாழ்கிற இந்திய வழி வந்த தமிழர் களாகட்டும், அல்லது தோட்டத் தொழிலாளர்களாகட்டும், அவர்கள் தங்களுடைய கோரிக்கையை வைப்பதற்கு முழு உரிமைகள் பெற்றவர்கள். அவரவர்கள் உழல்கின்ற தன்மைகள் அவரவர்களுடைய கொள்கைகளைப் பொறுத்ததை, அவர் களுடைய கருத்துக்கள். அவைகள் நியாயமானவைதான் என்று தீர்ப்பளிக்கின்ற நிலைமையில் நாம் இல்லையென்பதையும், அதைக் கேட்க வேண்டுமென்று வற்புறுத்தவும் கேட்கக்கூடாது என்று வற்புறுத்தவும் நாம் இல்லை. நாம் சொல்வது, அந்த நியாயமான கோரிக்கைகளை வட்டமேஜை மகாநாட்டில்வைத்துப் பேசுவதன் மூலமாக, தீர்த்துக்கொள்ளலாம். அங்கேயிருக்கிற தமிழர்களே தனித்தனியாக கருத்து வேறுபாடு கொண்டிருப்பதன் காரணமாக, இந்தக் கருத்தைக் கேட்கக் கூடாது என்று சொல் வதற்கு நமக்கு உரிமையில்லை. அதைப்பெற வேண்டிய முழுப் பொறுப்பும் அவர்களுக்கு இருக்கிறது. ஆகவே, அவர்களைப் பொறுத்தது அது. அவர்கள் வகிக்கின்ற தன்மைகளைப் பொறுத்தது அது. அவர்கள் பேசுவது நியாயமா, அநியாயமா என்பது அல்ல. அவரவர்கள் கோரிக்கைகள் இருக்கின்றன. இம்பிளிமென்டேஷன் எப்போது வரும் என்பது, அவரவர்களிடத் திலே ஒருமித்த கருத்து இல்லாதபொழுது, வட்டமேஜை மாநாட்டிலே உட்கார்ந்து பேசும்பொழுது, பேசி முடிவுக்கு வர வேண்டும். நாம் டிக்டேட் பண்ண முடியாது, அவர்களுடைய உணர்வுகளை நாம் மதிக்கின்றோம். அதற்காக, போராட அவர்களுக்கு முழு உரிமையும் உண்டு. அவர்கள் கேட்கக்கூடாது என்று சொல்வதற்கு உரிமை நமக்கு இல்லை. கேட்க வேண்டு மென்று சொல்லவும் நமக்கு உரிமை இல்லை. ஆனாலும் அந்த உணர்வை நாம் மதிக்கின்றோம், பாராட்டுகிறோம். வட்ட மேஜை மாநாட்டிலே ஒரு முடிவுக்கு வர வேண்டுமென்ற நம்முடைய விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவர்கள் தங்களுடைய முழு சுதந்திரத் தன்மையுடன், தங்களுடைய

கருத்துக்களின் அடிப்படையில் வற்புறுத்தும்போது அதற்கு நாம் ஆதரவு தருவோம். அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படுகின்ற பொழுது நாம் ஆதரவு தருவோம். வங்காள தேசம் தனி நாடாக உருவானபொழுது முதன் முதலாக இந்தியா எப்படி முழு ஆதரவைத் தந்து ஏற்றுக்கொண்டதோ, அப்படி ஒரு தமிழ் ஈழம் பேச்சு வார்த்தையின் மூலமாக, ஏற்படுகின்ற சூழ்நிலை வருமானால், அப்பொழுது நாம் அதிகாரபூர்வமாக முழு ஆதரவைத் தருவோம். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவுபட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது இதுதான் தேவை இது கூடாது என்று சொல்வதற்கு உரிமை இல்லை என்ற முறையிலே பொதுவாக, நியாயமான கோரிக்கைகள் என்று அவரவர்களுடைய உணர்ச்சிக்குத் தகுந்தாற்போல நாம் விட்டிருக்கிறோமே தவிர, வங்க தேசம் தனி நாடு ஆனதைப் போல், பேச்சு வார்த்தைக்குப் பிறகு வந்து விடுமேயானால் நாம் ஆதரிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம், அந்த வகையிலேதான் பொதுவாகப் போடப்பட்டிருக்கிறது. இதைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்,

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தீர்மானத்தின் கடைசியிலே இதை இம்ப்ளி மென்ட் செய்வதற்கு மத்திய அரசாங்கத்தைஇந்தத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். இந்தத் தீர்மானத்திலே அதுபோல ஒரு வரி இருக்கிறது. ஆனால் என்ன ரெக்கமென்டேஷன் என்று சொல்லாவிட்டால் எப்படி இம்ப்ளி மென்ட் செய்வது? What is the recommendation of the Ruling Party on this issue? அது எங்களுக்குத் தெரியாது. நீங்கள் இம்ளி மென்ட் செய்யுங்கள் என்றால் செய்ய முடியுமா? இந்தஇஷ்யூவிலே உங்களுடைய கருத்து என்ன? I know the difficulty of the Ruling Party on the tight rope walking. இந்த விஷயத்திலே உங்களுடைய கருத்து என்ன என்பதை நீங்கள் சொல்லவேண்டும். இந்தக் கருத்தை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். இல்லையென்பதை நீங்கள் ஏன் கூறக்கூடாது? முன்னேற்றக் கழகத்திற்கு இதிலே திடமான கொள்கை இருக்கிறது. நீங்கள் உங்கள் கருத்தை ஏன் சொல்லக் கூடாது என்றுதான் கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஈழத் தமிழர்கள் தனி ஈழம் வேண்டுமென்று கேட்கிறார்கள். அங்கேயிருக்கிற 12 லட்சம் தமிழர்களுடைய தலைவராக இருக்கிற தொண்டமான் வேண்டாம் என்று சொல்கிறார். வேண்டுமென்பதையும் ஆதரித்து வேண்டாம் என்பதையும் ஆதரித்து, இந்தத் தீர்மானத்திலே நாம் இரண்டையும் ஆதரிக்க முடியாது. அதுவும் நியாயத்தோடு பேசி முடிக்க வேண்டும். (குறுக்கீடு) அது ஜெயவர்தனே சொல்ல வேண்டியது. (குறுக்கீடு) நாம் ஒரு முடிவிற்கு வரமுடியாது, இந்தத் தீர்மானத்திலே ஈழத் தமிழர்களுக்கு மட்டும் நாம் ஆதர



வாக இருந்தால், இன்னொரு தமிழர்களுக்கு ஆதரவாக இல்லை என்று தீர்மானத்தில் கொண்டுவருவதும் சரியாக இருக்காது. ஆகவேதான் அவர்களுடைய நியாயம் எதுவோ அதை அவர்கள் தீர்த்துக்கொள்ள வேண்டுமே தவிர, நாம் அதை வற்புறுத்த முடியாது. அந்த வகையிலே இந்தத் தீர்மானம் சரியானது என்பதை நான் மீண்டும் வற்புறுத்துகிறேன். அடுத்து ஒரு செய்தியை அறிவிக்க விரும்புகிறேன். இன்றைக்கு இந்தியாவி னுடைய தூதுக் குழுவிலே உறுப்பினராகச் சென்றிருக்கிற மாண்பு மிகு மின் துறை அமைச்சரவர்களுக்கு அக்டோபர் 31ஆம் தேதி திங்கட்கிழமையன்று உலக நாடுகளுடைய பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசுவதற்காகஒருஅழைப்பு அனுப்பியிருக்கிறார்கள். உலக நாடுகளுடைய பல பிரதிநிதிகள் அந்தக் கூட்டத்திற்கு வர ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். அப்போது உலக நாடுகளுடைய பல பிரதிநிதிகளுடன் இலங்கைத் தமிழர்கள் பிரச்னைப் பற்றிப் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த வகையிலே கலந்து பேசுவார்கள் என்ற செய்தியை மட்டும் அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அரசின் தீர்மானத் திற்கு மாற்றாக திரு ரகுமான்கான் ஒரு தீர்மானமாகக் கொடுத் துள்ள திருத்தம் எடுத்துக்கொள்ளப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் தம் திருத்தங்களைவலியுறுத்துகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என் பெயரால் கொடுக்கப்பட்டிருக்கிற திருத்தங்களை நான் வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள திருத்தங்களில் சிலபல கருத்துக்களை ஏற்று அரசே கொண்டு வரவிருக்கிற திருத்தங்கள் நேற்றே சர்க்குலேஷன் ஆகியிருக்கிறது. அது எல்லா உறுப்பினர்களுக்கும் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதை எல்லோரும் படித்திருப்பார்கள் என்றாலும், உறுப்பினர்கள் கொடுத்துள்ள திருத்தங்களில், எந்தெந்தப் பகுதியை அரசு ஏற்று, அரசின் திருத்தங்களாகக் கொண்டுவர இருக்கிறோம் என்பதை நான் இப்போது சுருக்க மாகச் சொல்லிவிடுகிறேன்.

பத்தி 'உ' வில் ''உடனடியாகத் தீவிரமான செயல்முறை களை மேற்கொள்ளவேண்டும்'' என்ற சொற்றொடருக்குப் பின்னர் ''உலக மக்களின் ஆதரவு, இந்திய மக்கள் அனைவரின் ஆதரவு இலங்கையிலுள்ள நேர்மையான சனநாயகச் சக்திகளின் ஆதரவு ஆகியவற்றைத் திரட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்றும் கோருவதோடு'' என்ற சொற்றொடரையும் சேர்த்துக் கொள்ளும்படியாக கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் திருத்தம் கொடுத்தார்கள் அதை நாம் சேர்த்துக்கொள்ள அரசு திருத்த மாகக் கொடுத்துள்ளது.

பத்தி ''ஊ'' வில், ''இந்திய அரசு, இலங்கையில் ஏற்பட்டிருக்கும்'' என்ற சொற்றொடருக்குப் பின்னர் உள்ள, ''பிரச்சினையைத் தீர்த்து வைக்கும்'' என்ற சொற்றொடரை நீக்கிவிட்டு அந்த இடத்தில், ''தமிழர்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும்'' என்ற சொற்றொடரை இணைத்துக் கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அந்த சொற்றொடரையும் சேர்த்துக்கொள்ள அரசு திருத்தம் கொடுத்துள்ளது.

பத்தி ''ஒ''வில் ''குடியுரிமை-வாக்குரிமை -தொழிலுரிமை வாழ்வுரிமை'' என்ற சொற்களுக்குப் பின்னர் ''மொழியுரிமை'' என்ற சொல்லை இணைத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். அதை ஏற்று திருத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

''அதனைப் பின்பெறச் செய்ய''என்ற சொற்றொடருக்குப் பின்னர் உள்ள ''வேண்டும் என்று வற்புறுத்துகிறது'' என்ற சொற்றொடருக்கு மாற்றாக, ''இலங்கைஅரசை வற்புறுத்துமாறு இந்திய அரசை இப்பேரவை கேட்டுக்கொள்கிறது.'' நாம் இலங்கை அரசை கேட்டுக்கொள்ள முடியாது என்றகாரணத்தால் இலங்கை அரசை வற்புறுத்தும்படி இந்திய அரசைக் கேட்டுக் கொள்ளும் அளவிற்கு திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது.

பத்தி ''ஓ''வில், ''இலங்கை வாழ் தமிழர்கள் அனைவரும் மன அமைதியும், நம்பிக்கையும் கொள்ளத் தக்க'' என்ற சொற்றொடருக்குப் பின்னர் உள்ள, ''முறையில்'', என்ற சொல்லை நீக்கிவிட்டு, அந்த இடத்தில் ''முறையிலும், இலங்கை வாழ் தமிழர்களுக்கும், சிங்கள மக்களுக்கும் இடையில் நல்ல எண்ணமும், நல்லுறவும், நம்பிக்கையும், ஏற்படும் வகையிலும்'' என்ற சொற்றொடரை இணைத்துக்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அக்கருத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-50)

இறுதியில் உள்ள ''இலங்கை அரசு சனநாயகப் பண்புடன் முயலவேண்டும் என்று''என்றசொற்றொடருக்குப் பின்னர்உள்ள ''இப்பேரவை இலங்கை அரசை வற்புறுத்துகிறது'' என்ற சொற்றொடருக்கு மாற்றாக, ''இலங்கை அரசை வற்புறுத்துமாறு இந்திய அரசை இப்பேரவை கேட்டுக்கொள்கிறது'' என்ற சொற்றொடரை இணைத்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுவும் சேரும்.

பத்தி''ஔவை''ப்பொறுத்தவரையில்,''இலங்கை அரசு உரிய முறையில் நட்ட ஈட்டினை உடனடியாக அளிக்க வேண்டும்'' என்ற சொற்றொடருக்குப் பின்னர் உள்ள, ''என்று'' என்ற சொல்லை நீக்கிவிட்டு,அந்த இடத்தில், ''என்றும் அகதிகளாகத் தமிழகம் திரும்பியுள்ள இலங்கைவாழ் தமிழர்கள் மீண்டும் இலங்கைக்குச் சென்று குடியேற வழிவகைசெய்ய வேண்டும் என்,றும் அவர்கள் இழந்த சொத்துக்களையும், வீடுகளையும்



திரும்ப மீட்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்
என்றும், இலங்கை மலைத்தோட்டத் தமிழ் தொழிலாளர்கள்
முழுக் குடியுரிமையும், வாக்குரிமையும், வாழ்வுரிமையும் பெற
வழிவகை காணவேண்டும் என்றும்'' என்ற சொற்றொடரை
இணைத்துக்கொள்ள வேண்டும் என்று கொடுத்திருக்கிறார்கள்.
அதையும் சேர்த்துக்கொள்ளலாம் என்று இருக்கிறோம்.

திரு. அன்பில் தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே, நம்முடைய முதலமைச்சரவர்களால், இலங்கை
அரசைக் கண்டித்து இங்கே கொண்டு வரப்பட்டிருக்கும் இந்தத்
தீர்மானத்தில் ஜெயவர்த்தனே அரசைக் கண்டிக்கிறோம் என்ற
பெயரில், மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் மாண்புமிகு
மின் துறை அமைச்சருக்கும் பாராட்டு தெரிவிக்கின்ற தீர்மான
மாக இருப்பதாலும், எங்கள் கட்சியின் சார்பில் ரகுமான்கான்
அவர்கள் கொடுத்த தீர்மானங்களில் ஒன்றைக்கூட ஏற்றுக்
கொள்ளாததாலும், குறிப்பாகத் தமிழ்நாட்டின் சரித்திரத்
திலேயே இல்லாத அளவிற்கு இலங்கைத் தமிழர்களுக்கு
ஆதரவு காட்டி தங்களுடைய பதவிகளைத் துச்சமாக மதித்து
இராஜினாமா செய்த எங்கள் கட்சியின் தலைவர், பொதுச்
செயலாளர் ஆகியவர்களுக்கு ஒரு பாராட்டைக் கூடத் தெரிவிக்
காத காரணத்தாலும், இந்தத் தீர்மானம் ஒரு பாராட்டுத்
தீர்மானமாக இருக்கிறது என்ற வகையில் கண்டித்து
திராவிட முன்னேற்றக் கழகம் வெளிநடப்புசெய்கிறது.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச்
செய்தனர்.)

திரு. என். சங்கரய்யா: பேரவைத் துணைத் தலைவரவர்களே,
என்னுடைய பெயராலும், திருவாளர்கள் ஆர். உமாநாத்,
கே. ரமணி, என். வரதராஜன் ஆகியவர்களின் பெயர்களாலும்
கொடுக்கப்பட்ட பாரா ''உ''மற்றும்''ஊ''ஆகியபாராக்களுக்குக்
கொடுக்கப்பட்ட திருத்தங்களை அரசு ஏற்றதால் இதில் பிரச்னை
இல்லை. அதைப்போல, பாரா ''ஒ''வுக்கான திருத்தத்தையும்
அரசு ஏற்றிருக்கிறது. இந்த மூன்று திருத்தங்களையும் அரசு
ஏற்றுக்கொண்டதற்காக நாங்கள் நன்றி செலுத்துகிறோம்.

அடுத்தபடியாக இந்த திருத்தங்களில் எதை வற்புறுத்திச்
சொல்கிறோம் என்றால், பாராக்கள் ''எ, ''ஏ'''' மற்றும் ''ஐ''
ஆகியவை ஐக்கிய நாடுகள் அவை சம்பந்தப்பட்டவை. அவை
களையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறேன்.
பாராக்கள் ''எ'', ''ஏ'' ''ஐ'' மற்றும் ''க'' ஆகிய நான்கு
பாராக்கள் ஐக்கிய நாடுகள் சம்பந்தப்பட்டவை. அதில்
அரசுக்கும்எங்களுக்கும்வித்தியாசம் இருக்கிறது. We agree to diffet.
இந்தத் தீர்மானத்தில் இதர அம்சங்களைப் பொறுத்தவரையில்
எங்களுக்குப் பூரண உடன்பாடு இருப்பதால், இது சம்பந்தமாக
யாருடைய நிலை சரியானது என்பதற்குச் சரித்திரம்தான் பதில்
சொல்ல முடியும் என்பதால் அந்தத் திருத்தங்களை ரெக்கார்ட்
செய்கின்ற பர்ப்பசுக்காக நாங்கள் வற்புறுத்துகிறோம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
திரு. சங்கரய்யா அவர்கள் சொல்லியிருப்பது அவர்களது உறுதி
யான கூற்று. தொடர்ந்து ஆரம்பத்திலேயிருந்து அவர்கள்
நிலையை விளக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

நாம் என்ன கருதுகிறோம் என்றால், இதை ஐக்கிய நாடுகள்
அவை தீர்த்து விடும் என்பது அல்ல. ஆனால் ஐக்கிய நாடுகள்
அவை தலையிட வேண்டுமென்று கேட்பதில் தவறு இல்லை.
கெடுதல் இல்லை என்பதுதான். தப்பித் தவறி இதைத்
தீர்ப்பதற்கு முன் வந்துவிட்டால் நல்லது என்பதுதான். ஐக்கிய
நாடுகள் இதில் ஏதேனும் ஒன்றைச் செய்ய முடியுமா என்பது
தான். இரஷ்யா, சைனா, பிரிட்டன், ஜெர்மன் போன்ற
நாடுகள் இதில் இடம் பெற்றிருக்கின்றன. அங்கே பேசினால்
ஏதாவது நடைபெறக் கூடும் என்றுதான் இந்தியப் பிரதமர்
திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களும் பேசிவிட்டு
வந்திருக்கிறார்கள். எனவே, முடிந்தவரையில் பேசிப் பார்ப்
போம், நடந்தால் நடக்கட்டும், பேசுவதால் கேடு இல்லை என்பது
தான் நிலைமை. கட்டாயம் வந்து விடும் என்பது அல்ல,
ஆனால் கேட்பது முறை என்பதால்தான் சொல்லியிருக்கிறோம்.
தங்களுடைய கொள்கையைக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள்
சொல்லியிருக்கிறார்கள்.

திரு. ரகுமான்கான் அவர்கள், இரஜினாமா செய்தவர்களை
ஏன் பாராட்டவில்லை என்று கேட்டிருக்கிறார்கள். நாம்
அத்தனை பேர்களும் இராஜினாமா செய்துவிட்டு வெளியேறி
னால்தான் அவர்களைப் பாராட்ட முடியுமே தவிர, அவர்களைப்
பாராட்டிவிட்டு நாம் மட்டும் இங்கே உட்கார்ந்து கொண்டிருந்
தால் நம்மைப்பற்றி நாடு என்ன நினைக்கும் என்பதைப்பற்றி
நாம் நினைத்துப்பார்க்க வேண்டும். ஆகவேதான் முதலமைச்ச
ரவர்களும் சொன்னார்கள். நானும் குறிப்பிட்டேன், அவர்கள்
இரண்டு பேர்களும் இராஜினாமாச்செய்திருக்கக் கூடாது என்று.
அவர்கள் இங்கே இருக்க வேண்டும், இங்கே இருந்துபணியாற்றி
யிருக்க வேண்டும். எப்படி ரகுமான்கான் அவர்களும், கிருஷ்ண
மூர்த்தி அவர்களும் இங்கேயிருந்து பாடுபட வேண்டுமென்ற
நோக்கத்தோடு இருக்கிறார்களோ, அதைப்போல அவர்களும்
இங்கேஇருந்திருக்க வேண்டுமென்பதுதான் நம்முடைய விருப்பம்.

அவர்களைப் பாராட்டிவிட்டால் இவர்கள் எல்லாம் என்ன
செய்தார்கள் என்று கேட்பார்கள். ஆகவே இது அவர்களுக்கும்
நல்லதல்ல, நமக்கும் நல்லதல்ல என்ற காரணத்தால் தான்
சொன்னோம். பாராட்டு என்பது ஒரு பக்கம் இருக்கின்றது.
நான் சொன்னேன், எல்லாக் கட்சித் தலைவர்களும் எடுத்துக்
கொண்ட முயற்சிகளுக்குப் பாராட்டுக்கள் என்று. பாராட்டப்
பட வேண்டியவர்கள் எல்லாம் நாம் பாராட்டுவதற்குக் கடமைப்
பட்டிருக்கிறோம்.





இன்னமும் சொல்ல விரும்புகிறேன். இந்தத் தீர்மனத்திற்கு
இதுபோன்ற திருத்தங்களை கொடுத்தார்கள் என்கிற நிலை கூட
நல்லதில்லை. அவற்றைப் பின் வாங்குவதுதான் நல்லது என்று
கூறினோம். இந்த அவை அதனை மறுத்தது. பாராட்ட
வேண்டாம் என்று சொல்லிவிட்டது என்ற ஒரு முடிவுக்கு
வருவது அவர்களுககும் நல்லதல்ல நமக்கும் நல்லதல்ல என்று
கூறினோம். இப்போது அவர்கள் இல்லாததால் அந்தத்
திருத்தங்கள் வராது என்று கருதுகிறேன். மற்ற திருத்தங்களைப்
பொறுத்தவரை சிலவற்றை மாண்புமிகு முதலமைசசர் அவர்கள்
கடைசியில் சேர்த்துக்கொள்ளலாம் என்று சொன்னதன் காரணத்
தால் அவர்களும் மற்றவற்றை வற்புறுத்த வேண்டாம் எனக்
கேட்டுக்கொள்கிறேன். அரசின் தீர்மானத்தின் கடைசியில் கீழ்க்
கண்ட அரசு திருத்தத்தையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்ற
வகையில் இதனை முன்மொழிய இருக்கிறேன். இதை கடைசி
பாராவுக்கு முன் பாராவாகச் சேர்த்துக் கொள்ளலாம்.

''இலங்கை அதிபர் ஜெயவர்த்தனே அவர்கள் மீண்டும்
சமரசப் பேச்சு நடத்த இந்தியப் பிரதிநிதி திரு ஜி. பார்த்தசாரதி
அவர்களை மீண்டும் அனுப்பி வைக்குமாறு இந்திய அரசைக்
கேட்டுக் கொண்டிருப்பது இப்பேரவை வரவேற்பதோடு
இலங்கைத் தமிழர்களின் அனைத்துத் தரப்பு அமைப்புகளின்
தலைவர்களும் நிபந்தனையற்ற முறையில் கலந்து கொள்ளத்
தக்க முறையில் வட்டமேசை மாநாட்டை விரைவாகக் கூட்டு
வதற்கானஏற்பாடு செய்யப்படவேண்டும் என்றும் இப்பேரவை
வற்புறுத்துகிறது.''

திரு. இரா. கருப்பையா மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர்
அவர்களே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கொடுக்கப்
பட்டுள்ள திருத்தங்களில் சில திருத்தங்களை மாண்புமிகு அவை
முன்னவர் அவர்கள் சார்பிலே ஏற்றுக்கொண்டதற்காக நன்றி
யினைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக இலங்கையிலே
வசிக்கின்ற மலைத்தோட்ட தமிழ் தொழிலாளர்களுடைய
பிரச்சினைகளையும் அவர்களுக்கு அடிப்படையான குடியுரிமை
வாழும் உரிமை பெற்றுத் தருவதற்கு நடவடிக்கைககளை மேற்
கொள்ள வேண்டும் என்பதற்கான திருத்தம் கம்யூனிஸ்ட் கட்சியின்
சார்பிலே கொடுக்கப்பட்டிருந்தது. அந்தத் திருத்தம் ஏற்றுக்
கொள்ளப்பட்டிருக்கின்றது. அதற்காக நான் நன்றியைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே மாதிரி இலங்கையில் இருக்கின்ற ஜனநாயக சக்தி
களுடைய ஆதரவைப் பெறவேண்டும் என்ற முறையிலே
அதற்கான திருத்தங்களையும ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் டெல்லியிலே
பிரதம அமைச்சரைப் பார்க்கச் சென்ற நேரத்தில் ஐக்கிய நாடுகள்
சபையில் இந்தப் பிரச்சினையைக் கொண்டு செல்ல வேண்டும்
என்பது சம்பந்தமாக பிரச்சினை வந்தபோது அதற்கு கம்யூனிஸ்ட்
கட்சி உடன்பாடு இல்லை என்கிற விஷயத்தையும் அவையிலே
தெளிவுபடுத்தியதற்காகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்

கிறேன். ஐக்கிய நாடுகள் சபைக்கு இந்தப் பிரச்சினையைக் கொண்டு சென்றால் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பது அடிப்படையான நிலை. ஆகவே அந்தத்திருத்தத்தை கம்யூனிஸ்ட் கட்சி வற்புறுத்துகின்றது. அதைத் தொடர்ந்து நிவாரணங் கள் கொடுப்பதைப் பொறுத்தவரையில் ஐக்கிய நாட்டுச் சபை மூலமாகக் கொடுத்தால் அது போய்ச் சேருவதில்லை. எனவே அதனைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமாகக் கொடுக்க வேண்டும் என்று திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. எனவே ஐக்கிய நாடுகள் சபை பற்றி கொடுக்கப்பட்ட திருத்தங்களை நாங்கள் வற்புறுத்துகிறோம்.

(நண்பகல் 12-00)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அரசினர் தனித் தீர்மானத்தின் மீதான விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

பத்தி அ.

திரு. அ. ரகுமான்கான்: இருக்கையில் இல்லததால் அவருடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப் பெற்றது.

டாக்டர் கே. சௌரிராஜன் அவர்களின் திருத்தம் பேரவை யின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக்கொள்ளப்பெற்றது.

பத்தி அ பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பத்தி ஆ.

திரு. இரா. கருப்பையா அவர்களின் திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

பத்தி ஆ பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்ற பெற்றது.

பத்தி இ.

பத்தி "இ" பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பத்தி ஈ.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் கொடுத்துள்ள தீர்மானத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதால், என்னுடைய திருத்தத்தை நான் வலியுறுத்தவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் அவர்களின் திருத்தம் பேரவை யின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

பத்தி 'ஈ' பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்ற பெற்றது.



பத்தி உ.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி "பத்தி 'உ' தீர்மானத்தின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** துணைத்தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

"உடனடியாகத் தீவிரமான செயல் முறைகளை மேற் கொள்ள வேண்டும் என்று இப்பேரவை கேட்டு கொள்வதோடு' என்ற சொற்றொடருக்குப் பின், 'உலக மக்களின் ஆதரவு, இந்திய மக்கள் அனைவரின் ஆதரவு, இலங்கையிலுள்ள நேர்மையான சனநாயகச் சக்திகளின் ஆதரவு ஆகியவற்றைத் திரட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்றும் கோருவதோடு, என்ற சொற்றொடரையும் இணைத்துக் கொள்ள வேண்டும்."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

திரு. என். சங்கரய்யா அவர்களின் திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

பத்தி உ, திருத்தப் பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பத்தி ஊ.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி "பத்தி 'ஊ' தீர்மானத்தின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

'இந்திய அரசு, இலங்கையில் ஏற்பட்டிருக்கும்' என்ற சொற்றொடருக்குப் பின்னர் உள்ள, 'பிரச்சினையைத் தீர்த்து வைக்கும்' என்ற சொற்றொடரை நீக்கி விட்டு, அந்த இடத்தில் "தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்" என்ற சொற்றொடரை இணைத்துக் கொள்ள வேண்டும். திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

**திரு. என். சங்கரய்யா:** என்னுடைய திருத்தத்தை அரசு ஏற்றுக்கொண்டுள்ளதால் நாங்கள் அதை வற்புறுத்தவில்லை.

**திரு. இரா. கருப்பையா:** எங்களுடைய திருத்தத்தை அரசு ஏற்றுக் கொண்டுள்ளதால் நாங்கள் அதை வற்புறுத்தவில்லை.

திருவாளர்கள் என். சங்கரய்யா, இரா. கருப்பையா ஆகியோருடைய திருத்தங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

பத்தி "ஊ" திருத்தப் பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பத்தி எ.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை விதி 100, உள் விதி (2)–ன் கீழ் திரு. சங்கரய்யா மற்றும் திரு. இரா. கருப்பையா ஆகியோரின் திருத்தம் ஏற்கப் பெறவில்லை. அவர்கள் விரும்பினால் பத்தியை எதிர்த்து வாக்களிக்கலாம்.

பத்தி எ பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பத்தி—ஏ:

திருவாளர்கள் மு. அம்பிகாபதி, திரு. என். சங்கரய்யா ஆகியோர்களின் திருத்தங்கள் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, தோல்வியுற்றன.

பத்தி—ஏ பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பத்தி–ஐ

திரு. என். சங்கரய்யா அவர்கள் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று தோல்வியுற்றது.

பத்தி–ஐ பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பத்தி-ஒ

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி பத்தி–ஒ தீர்மானத்தின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

"குடியுரிமை–வாக்குரிமை–தொழிலுரிமை–வாழ்வுரிமை" என்ற சொற்களுக்குப் பின்னர் "மொழியுரிமை" என்ற சொல்லை இணைத்துக் கொள்ள வேண்டும். இறுதியில் "அதனைப் பின்பெறச் செய்ய" என்ற சொற்றொடருக்குப் பின்னர் உள்ள "வேண்டும் என்றும் வற்புறுத்துகிறது.' என்ற சொற்றொடருக்கு மாற்றலாக "இலங்கை அரசை வற்புறுத்துமாறு இந்திய அரசை இப்பேரவை கேட்டுக் கொள்கிறது" என்ற சொற்றொடரை இணைத்துக் கொள்ள வேண்டும்."





திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

திரு. என். எஸ். வி. சித்தன் : துணைத் தலைவரவர்களே நாங்கள் கொடுத்திருக்கிற திருத்தத்தை அரசு ஏற்றுக் கொண்டிருப்பதால் நாங்கள் அதை வற்புறுத்தவில்லை.

டாக்டர் கே. சௌரிராஜன்: துணைத் தலைவரவர்களே, நாங்கள் கொடுத்துள்ள திருத்தத்தை அரசு ஏற்றுக் கொண்டுள்ளதால், நாங்கள் அதை வற்புறுத்தவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன், டாக்டர் கே. சௌரிராஜன் ஆகியோருடைய திருத்தங்கள் பேரவையில் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

பத்தி—ஒ திருத்தப் பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பத்தி—ஓ

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி "பத்தி–ஓ தீர்மானத்தின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவரவர்களே, நான்கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

"இலங்கை வாழ் தமிழர்கள் அனைவரும் மன அமைதியும், நம்பிக்கையும் கொள்ளத்தக்க" என்ற சொற்றொடருக்குப் பின்னர் உள்ள, "முறையில்" என்ற சொல்லை நீக்கி விட்டு அந்த இடத்தில், "முறையிலும், இலங்கை வாழ் தமிழர்க்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் நல்ல எண்ணமும், நல்லுறவும், நம்பிக்கையும் ஏற்படும் வகையிலும்" என்ற சொற்றொடரை இணைத்துக் கொள்ள வேண்டும். இறுதியில் உள்ள இலங்கை அரசு சனநாயகப் பண்புடன் முயல வேண்டும் என்று" என்ற சொற்றொடருக்குப் பின்னர் உள்ள இப்பேரவை இலங்கை அரசை வற்புறுத்துகிறது என்ற சொற்றொடருக்கு மாற்றாக, "இலங்கை அரசை வற்புறுத்துமாறு இந்திய அரசை இப்பேரவை கேட்டுக் கொள்கிறது" என்ற சொற்றொடரை இணைத்துக் கொள்ள வேண்டும்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

திரு. என். எஸ். வி. சித்தன்: என்னுடைய திருத்தத்தை நான் வற்புறுத்தவில்லை.

திரு. என். சங்கரய்யா: நாங்கள் கொடுத்துள்ள திருத்தங்களை அரசு ஏற்றுக்கொண்டுள்ளதால் நாங்கள் அதை வற்புறுத்தவில்லை.

[1983 அக்டோபர் 28

டாக்டர் கே. சௌரிராஜன்: என்னுடைய திருத்தத்தை நான் வற்புறுத்தவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன், திரு. என். சங்கரய்யா, டாக்டர் கே. சௌரிராஜன் ஆகியோருடைய திருத்தங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

பத்தி-ஒ திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பத்தி—ஔ

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி 'பத்தி-ஔ தீர்மானத்தின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.,

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

''இலங்கை அரசு உரிய முறையில் நட்ட ஈட்டினை உடனடியாக அளிக்க வேண்டும்'' என்ற சொற்றொடருக்குப் பின்னர் உள்ள, ''என்று'' என்ற சொல்லை நீக்கிவிட்டு, அந்த இடத்தில், ''என்றும், அகதிகளாகத் தமிழகம் திரும்பியுள்ள இலங்கை வாழ் தமிழர்கள் மீண்டும் இலங்கைக்குசென்று குடியேற வழிவகை செய்ய வேண்டும் என்றும், அவர்கள் இழந்த சொத்துக்களையும் வீடுகளையும் திரும்ப மீட்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். என்றும், இலங்கை மலைத்தோட்டத் தமிழ்த் தொழிலாளர்கள் முழுக்குடியுரிமையும் வாக்குரிமையும் வாழ்வுரிமையும் பெற வழிவகை காண வேண்டும் என்றும்'' என்ற சொற்றொடரை இணைத்துக் கொள்ள வேண்டும்.

பத்தி-ஔ திருத்தப் பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

(பிற்பகல் 12—10)

பத்தி—க

திரு. என். சங்கரய்யாவின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

பத்தி 'க' பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றது.



1983 அக்டோபர் 28]

பத்தி—(ங).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே' அரசு முன்மொழிந்துள்ள தீர்மானத்தில் 'க' என்ற பத்திக்கும் 'ங' என்ற பத்திக்கும் இடையே, அரசு புதிதாகக் கொடுத்துள்ள பத்தி 'ங'

(ங) ''இலங்கை அதிபர் ஜெயவர்த்தனே அவர்கள் மீண்டும் சமரசப் பேச்சு நடத்த இந்தியப் பிரதிநிதி திரு. ஜி. பார்த்தசாரதி அவர்களை மீண்டும் அனுப்பி வைக்குமாறு இந்திய அரசைக் கேட்டுக் கொண்டிருப்பதை இப்பேரவை வரவேற்பதோடு, இலங்கைத் தமிழர்களின் அனைத்துத் தரப்பு அமைப்புகளின் தலைவர்களும் நிபந்தனையற்ற முறையில் கலந்து கொள்ளத்தக்க முறையில் வட்டமேசை மாநாட்டை விரைவாகக் கூட்டுவதற்கான ஏற்பாடு செய்யப்படவேண்டும் என்றும் இப்பேரவை கேட்டுக் கொள்கிறது.'' என்பதை இணைத்துக்கொள்ள வேண்டும் என்றும், தற்போதுள்ள 'ங' என்ற பத்தி, பத்தி 'ச' என்று மாற்றப்படவேண்டும் என்றும் திருத்தத்தை மொழிகிறேன்.

புதிய பத்தி 'ங' பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஏற்கப்பெற்றது.

பழைய பத்தி 'ங' 'ச' என்று திருத்தப் பெற்றது.

பத்தி—ச.

பத்தி 'ச' பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றது.

பத்தி—ஞ.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு முன்மொழிந்துள்ள தீர்மானத்தில் ''பத்தி ச'' என்பதை ''பத்தி ஞ'' என்று மாற்றப்பட வேண்டும் என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஏற்கப் பெற்றது. பத்தி 'ச' என்பது பத்தி 'ஞ' என்று திருத்தப் பெற்றது.

பத்தி 'ஞ' பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை ஏற்றுக் கொண்டுள்ள திருத்தங்களுடன் தீர்மானம் முழுவதையும் இப்போது நான் பேரவை முன் வைக்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்திருப்பதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டதால் அப்போது என்னுடைய திருத்தத்தை வற்புறுத்தவில்லை. அரசு தீர்மானத்தை வரவேற்கிறேன். நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே தீண்டாமைக் கொடுமை இருப்பதை நாம் உணர்கிறோம். ஆகவே முதலில் உண்மையிலேயே அவர்களுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்தால் அந்தத் தீண்டாமைக் கொடுமையிலிருந்து ....

மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர்: நீங்கள் உங்களுடைய திருத்தத்தை வற்புறுத்தவில்லை இப்போது பேச முடியாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

(அ) கடந்த ஜூலைத் திங்கள் முதல் தொடர்ந்து இலங்கை வாழ்த் தமிழர்களான ஈழத்தமிழர்கள், இந்தியப் பரம்பரை வழிவந்த தமிழர்கள், இந்தியத் தமிழர்கள் ஆகியோர்க்கு எதிராக நடத்தப்பட்டு வரும் கொலை, கொள்ளை, தீவைப்பு, கற்பழிப்பு, சூறையாடுதல், துயரிழைத்தல் போன்ற கொடுஞ்செயல்களை அறிந்து இப்பேரவை மிக்க அதிர்ச்சியும் வேதனையும் அடைகிறது.

(ஆ) மேற்கண்ட கொடுஞ்செயல்களைத் தொடர்ந்து செய்துவரும் சிங்கள இனவெறியர்களையும், அவர்களுக்கு உடந்தையாக நின்று அட்டூழியங்கள் பலவற்றையும் நடத்தி வரும் இலங்கை இராணுவத்தினர்—காவல் துறையினர் ஆகியோரையும், அவர்களுக்கு ஆதரவு அளித்துவரும் அதிபர் ஜெயவர்த்தனே தலைமையிலுள்ள அரசையும் இப்பேரவை வன்மையாகக் கண்டிக்கிறது.

(இ) இலங்கையில் நடைபெற்றுவரும் நாகரிகமற்ற காட்டுமிராண்டித்தனமான, சனநாயகப்பண்பற்ற, மனிதாபிமானமற்ற முறையில் நடைபெற்றுவரும் கொடுமைகளை எதிர்த்து எதிர்ப்புக் குரல் கொடுக்கும் வகையில், சட்ட ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்டுக் கண்டன ஊர்வலங்கள் நடத்தியும், பொது வேலை நிறுத்தம் கதவடைப்புச் செய்தும், அனுமதி ஆர்ப்பாட்டங்கள் மேற்கொண்டும், கோரிக்கைகள் எழுப்பியும் தங்கள் உள்ள உணர்வை ஒருமித்த முறையில் எழுப்பிய பொது மக்களுக்கும், பல்வேறு துறையினர்க்கும், அனைத்து அரசியல் கட்சியினர்க்கும், எல்லா அமைப்பினர்க்கு ம் இப்பேரவை தனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.





(ஈ) பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகியுள்ள இலங்கை வாழ் தமிழர்களின் துயர்களை எல்லா வகைகளிலும் துடைக்கவும், தமிழக மக்களின் ஒருமித்த உணர்வுகளுக்குச் செயல் வடிவம் கொடுக்கவும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், அனைத்து அரசியல்கட்சித் தலைவர்களின் ஆதரவோடு எடுத்த நடவடிக்கைகளை இப்பேரவை பாராட்டி வரவேற்பதோடு, தமிழக மக்களின் உணர்வை ஏற்று, இலங்கை வாழ் தமிழரின் ஆதரவையும் மதிப்பையும் பெற்று, ஆக்க நிறைவான இயன்ற நடவடிக்கைகளையெல்லாம் எடுக்க முன்வந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்குத் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

(உ) இலங்கை வாழ் தமிழர்கள் அனைவரும், இப்பொழுது ஏற்பட்டுள்ள இக்கட்டான கட்டத்தில், தங்களுக்கு நிலையான வாழ்வுரிமையையும், பாதுகாப்பையும் இந்திய அரசின்முயற்சியாலும், செல்வாக்காலும் நியாயவுணர்வாலும், நடவடிக்கையாலும் மட்டுமே பெற முடியும் என்று தெளிவாகவும், திண்மையாகவும் கருதுவதால், மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் காலத் தாழ்வுக்கு இடமேற்படாமல், உடனடியாகத் தீவிரமான, செயல் முறைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இப்பேரவை கேட்டுக் கொள்வதோடு, உலக மக்களின் ஆதரவு, இந்திய மக்கள் அனைவரின் ஆதரவு, இலங்கையிலுள்ள நேர்மையான சனநாயகச் சக்திகளின் ஆதரவு ஆகியவற்றைத் திரட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்றும் கோருவதோடு, இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு தொடர்ந்து இன்னல் ஏற்படாதவாறு பேச்சு வார்த்தையை விரைவுபடுத்தி இந்தப் பிரச்சினையைத் தீர்க்குமாறும் இப்பேரவை வற்புறுத்துகிறது.

(ஊ) இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இனம்—மொழி வரலாறு-நாகரிகம்-பண்பாடு-உறவு-தொடர்பு போன்றவற்றில் நீண்ட நெடுங்காலமாகவே பிணைப்பு இருந்து வருவதாலும், அண்டை நாட்டினரும், அகில உலக நாட்டினரும் கவலைப்படுவதற்குரிய தன்மையில் இலங்கையில் சிறுபான்மையோரின் அடிப்படை மனிதவுரிமைகளுக்கு அழிவு ஏற்படுத்தப்பட்டு வருவதாலும், இந்திய மக்கள்—இந்தியத் தூதுவரகம்—இந்தியவங்கிகள்-இந்தியச் சுற்றுலாப் பயணிகள் கடுமையாகத் தாக்கப் பட்டிருப்பதாலும், இந்திய அரசு, இலங்கையில் ஏற்பட்டிருக்கும் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபடவேண்டியது நியாயமான செயலாகும் என்பதை இப்பேரவை இந்திய அரசுக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

(எ) உலக நாடுகளில் வாழும் சிறுபான்மையோரின் நலங் காக்கும் பொறுப்பையும், அவர்களுக்கு நிலையானவாழ்வளிக்கும் பொறுப்பையும், அடிப்படையுரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருக்கின்ற ஐக்கியநாடுகள் அவை, இலங்கை வாழ் தமிழர்களின் பிரச்சினையை நிலையாக தீர்க்கும் பொருட்டு, உடனடியாகத் தன் முழுச்செல்வாக்கையும்

அதிகாரத்தையும் பயன்படுத்தி, நியாயத்தை நிலைநாட்ட முன்வரவேண்டும் என்று இப்பேரவை வற்புறுத்துகிறது. ஐக்கிய நாடுகள் அவையில் முக்கியமான வகையில் அங்கம் பெற்றுள்ள இந்திய அரசு இதனை வலியுறுத்துமாறு இப்பேரவை கேட்டுக் கொள்கிறது.

(ஏ) இலங்கையில் ஆயுதவலிமையாலும், அடக்குமுறைகளாலும், வன்முறைச் செயல்களாலும், தமிழர் இனத்தையே அழிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் இலங்கை அரசுக்கு, ஆயுதங்கள் வழங்க அமெரிக்க அரசு ஆயத்தம் செய்து வருவதை திருகோணமலைப் பகுதியை நிலையான கப்பற்படைத் தளமாக ஆக்கிக் கொள்ள முயல்வதையும், அமெரிக்க அரசின் பாதுகாப்புத்துறைச் செயலாளர் திரு வென்பெர்ஜெர் இலங்கை அரசுடன் இரகசிய பேச்சு வார்த்தை நடத்தியிருப்பதையும் கண்டு இப்பேரவை அதிர்ச்சியும், கவலையும் அடைந்திருப்பதோடு இலங்கைவாழ்த் தமிழர்க்கு வாழ்வளிக்க வேண்டிய வல்லரசான அமெரிக்கா, வாழ்வளிக்க முன்வராமல் தமிழினத்தின் அழிவுக்குக் காரணமாக அமையும் ஆயுதங்களை வழங்க முன்வந்திருக்கும் போக்கை வன்மையாகக் கண்டிப்பதோடு, ஆயுதம் வழங்குவது—கடற்படைத்தளம் அமைப்பது போன்ற அநியாயச் செயல்களை அமெரிக்கா அறவே கைவிட வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது.

(ஐ) இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களின் நலங்கருதித் தமிழக அரசாலும், இந்திய அரசாலும் அனுப்பி வைக்கப் பெறும் உணவுப்பொருள், உடைகள், உடைமைகள், மருந்துகள் போன்றவைகள் உரியவர்க்குப் போய்ச் சேர வைப்பதற்கு இந்திய அரசு ஐக்கிய நாடுகள் அவையின் மூலமோ அல்லது உலகச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமோ அல்லது இந்திய தூதுவரகத்தின் மூலமோ தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று இப்பேரவை இந்திய அரசைக் கேட்டுக் கொள்கிறது.

(ஒ) உரிமை வேட்கையோடு அறப்போர் நடத்தும் இலங்கை வாழ் தமிழர்களின் குடியுரிமை-வாக்குரிமை தொழிலுரிமை—வாழ்வுரிமை மொழியுரிமை போன்றவற்றை அடியோடு பறிக்கும் வகையில் இலங்கை அரசால் கொண்டு வந்து சட்டமாக்கப்பட்டுள்ள காட்டுமிராண்டி சட்டத்தை இப்பேரவை வன்மையாகக் கண்டிப்பதோடு, அதனைப் பின்பெறச் செய்ய இலங்கை அரசை வற்புறுத்துமாறு இந்திய அரசை இப்பேரவை கேட்டுக் கொள்கிறது.

(ஓ) இலங்கையிலுள்ள தமிழர் தலைவர்கள் நிபந்தனையற்ற முறையில் வட்டமேஜை மாநாட்டில் கலந்துகொண்டு, தங்கள் எண்ணங்களையும், திட்டங்களையும் ஒளிவு மறைவில்லாமல் வெளியிட வாய்ப்பளித்து, நல்லுறவு அடிப்படையில் பேச்சு வார்த்தை நடத்தி, இலங்கைவாழ் தமிழர்கள் அனைவரும் மன அமைதியும், நம்பிக்கையும் கொள்ளத் தக்க முறையிலும், இலங்கை வாழ் தமிழர்க்கும் சிங்கள



மக்களுக்கும் இடையில் நல்லெண்ணமும், நல்லுறவும், நம்பிக்கையும் ஏற்படும் வகையிலும் தீர்வுக்கான, இலங்கை அரசு சனநாயகப் பண்புடன் முயல வேண்டும் என்று இலங்கை அரசை வற்புறுத்துமாறு இந்திய அரசை இப்பேரவைக் கேட்டுக் கொள்கிறது.

(ஔ) இலங்கை வன்முறைக் கொடுமைகளுக்கு ஆளாகி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும், படுகாயமுற்று அவதிப்படுவோர்க்கும், சொத்துக்களை இழந்து தவிப்போர்க்கும் இலங்கை அரசு உரிய முறையில் நட்ட ஈட்டினை உடனடியாக அளிக்க வேண்டும் என்றும், அகதிகளாகத் தமிழகம் திரும்பியுள்ள இலங்கை வாழ் தமிழர்கள் மீண்டும் இலங்கைக்குச் சென்று குடியேற வழிவகை செய்ய வேண்டும் என்றும் அவர்கள் இழந்த சொத்துக்களையும், வீடுகளையும் திரும்ப மீட்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், இலங்கை மலைத்தோட்டத் தமிழ் தொழிலாளர்கள் முழுக்குடியுரிமையும், வாக்குரிமையும் வாழ்வுரிமையும் பெற வழிவகை காணவேண்டும் என்றும் இப்பேரவை வற்புறுத்துவதோடு, இதற்கான உரிய நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறது.

(க) தமிழ் மக்கள் உள்ளக்குமுறலையும், எண்ணங்களையும் கோரிக்கைகளையும் ஐக்கிய நாடுகள் அவையில் எடுத்து வைக்கும் வாய்ப்பை அளிக்கும் வகையில், தமிழக மக்களின் நம்பிக்கையைப் பெற்றுத் தமிழக ஆட்சியில் அமர்ந்துள்ள அமைச்சரவையின் உறுப்பினரான மாண்புமிகு மின்துறை அமைச்சரை இந்தியக் குழுவில் உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து அனைத்து நாடுகளும் அறியும் வண்ணம், ஐந்து கோடித் தமிழ் மக்களின் உணர்வை, ஐக்கிய நாடுகள் அவையில் வெளிப்படுத்திய மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களையும் இப்பேரவை பாராட்டுகிறது.

(ங) இலங்கை அதிபர் ஜெயவர்த்தனே அவர்கள் மீண்டும் சமரசப் பேச்சு நடத்த இந்தியப் பிரதிநிதி திரு. ஜி. பார்த்தசாரதி அவர்களை மீண்டும் அனுப்பி வைக்குமாறு இந்திய அரசைக் கேட்டுக் கொண்டிருப்பதை இப்பேரவை வரவேற்பதோடு, இலங்கைத் தமிழர்களின் அனைத்துத் தரப்பு அமைப்புகளின் தலைவர்களும் நிபந்தனையற்ற முறையில் வட்டமேஜை மாநாட்டை விரைவாக கூட்டுவதற்கான ஏற்பாடு செய்யப்படவேண்டும் என்றும் இப்பேரவை கேட்டுக் கொள்கிறது."

(ச) நிலையான வாழ்வுரிமைகளுக்கும், நிலைத்த பாதுகாப்புக்கும் அறவழியில் அறப்போர் நடத்திடும் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு இப்பேரவை தன் முழு ஆதரவை அளிப்பதோடு, அவர்களின் நியாயமான கோரிக்கைகள் அனைத்தும் வெற்றிபெற வேண்டும் என்ற விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

(ஞ) இந்தத் தீர்மானத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள கோரிக்கைகளை இந்தியப் பேரரசின் மூலம் நடைமுறைப்படுத்து வதற்கான எல்லாவித முயற்சிகளையும், முறைப்படி மேற் கொள்ளுமாறு, இப்பேரவை தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறது.

அரசினர் தனித் தீர்மானம் திருத்தப் பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) எதிர்பாராச் செலவு நிதி
(திருத்த) சட்டமுன் வடிவு 1983

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 37/1983, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, இன்றி 1975-76, 1976-77, 1977-78 ஆகிய ஆண்டுகளுக்கு சுமார் 13 கோடிக்கு மேல் எடுக்கப்பட்டு, வறட்சி காரணமாகவும், பாசனம் ஓய்வு ஊதியம்' மருத்துவம் போன்ற தலைப்புகளில் நாம் அதிகமாக செலவழித்து இருப்பதால், இப்போது நாம் இதைப்பற்றி விவாதிக்க வேண்டி இருக்கிறது. இதை நான் எதிர்க்கவில்லை. ஆனால் சில இடங்களி தவறான முறையில் பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் நான் சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இந்த எதிர்பாராச் செலவு என்ற முறையில் 1984-ஆம் வருடம் மார்ச் மாதம் 31 ஆம் தேதி வரையில் ரூபாய் 150 கோடி கேட்கிறார்கள். சுமார் 150 கோடி. கேட்டிருந்தும், இவைகள் வறட்சி காரணமாக, ஓய்வு ஊதியம் காரணமாக கேட்டிருந்தும், இவைகள் எதற்காகக் கேட்கிறார்களோ; அந்தக் காரியங்கள் ஒழுங்காக நடைபெற வில்லை. காரணம் இந்த தண்ணிறைவுத் திட்டம் மூலமாக செலவழித்த வகையில் அதிகமாக கண்மாய்கள், ஊரணிகள், ஏரிகள் போன்ற வகைகளுக்காக செலவழிக்கப்பட்டிருக்கிறது' ஆக, இது வறட்சி தண்ணிறைவுத் திட்டம் ஆகிய இரண்டு வகைகளில் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இது முழுமையாக செயல்படுத்தப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. இது முழுமையாக சயல்படுத்தப்பட்டிருக்கிறதா என்பதைக் கண்காணிக்க அங்கே அதிகாரிகள் இல்லை.

கிராமங்களை எடுத்துக் கொண்டால் அங்கே பஞ்சாயத்து போர்டுகள் இல்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் இல்லை. அதே போல் பஞ்சாயத்து யூனியனை எடுத்துக்கொண்டால், அங்கேயும் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகள் இல்லை எந்தக் கமிஷனர் இந்த திட்டங்கள் செயல்பட வேண்டும் என்று உத்தரவு போடுகிறார்களோ, அவரே பணத்தையும் சாங்க்சன் செய்ய வேண்டிய அதிகாரியாக இருக்கிறார்கள். அதுமட்டுமில்லாமல் அவருக்குக் கீழே இருக்கக்





கூடிய எஞ்சினியர்கள்' அவர்களே, எஸ்டிமேட் தயாரித்துப் போட்டுக் கொள்கிறார்கள், அவர்களே, ஃபைனல் பில்லையும் பாஸ் பண்ணுகிறார்கள். அதுமட்டுமில்லாமல், பஞ்சாயத்து எக்ஸ்டன்சன் ஆபிசர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பணம் இருக்கிறதா இல்லையா என்பதைக் கவனிப்பதேயில்லை. அந்தப் பணத்தை செலவழிக்கத்தான் இருக்கிறார்கள். ஆகவே இந்த மூன்று பேர்களும் சேர்ந்து கொண்டு செய்வதுதான் செயலாக இருக்கிறது. ஆகவே இங்கே ஒதுக்குகின்ற நிதி எந்தக் காரியத்திற்காக ஒதுக்கப்படுகிதோ, அந்தக் காரியங்கள் நடைபெறவில்லை. அப்படி நடைபெறாமல் இருப்பதை நீங்கள் கண்காணிக்க வேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்து வாரியாக எவ்வளவு பணம் செலவழிக்கப் படுகிறது, அவைகள் உண்மையாக செலவழிக்கப்பட்டனவா போன்ற விஷயங்களை நீங்கள் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கிராமப் புறங்களில், மற்றும் நகர்ப்புறங்களில் கூட ரோடு வசதிகள் சரியானதாக இல்லை. அந்த ரோடுகளைக் கூட போட முடியாத ஒரு அவல நிலை இருக்கிறது. பணம் வாங்குவது பெரிதல்ல. பணம் ஒழுங்காக செலவாகிறதா, அதிகாரிகள் சரியாகச் செய்கிறார்களாக என்பதைத்தான் நாம் பார்க்க வேண்டும். இவைகள் ஒழுங்காக நடைபெறுகின்றனவா என்பதைக் கண்காணிக்க அங்கங்கே மக்கள் குழு, அடுத்த பஞ்சாயத்து தேர்தல் வருகின்ற வரையிலாவது அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

ஒரு உதாரணத்தைச் சொல்லவேண்டும் என்றால், புதுக் கோட்டை மாவட்டத்தில், புதுக்கோட்டை நகரில் காந்தி நகர் என்ற இடத்தில், ஒரு தீ விபத்து ஏற்பட்டது. 13-7-83-இல் அந்த தீ விபத்து ஏற்பட்டது. அதற்குப் பிறகு 10-8-1983-ல் சர்வ கட்சி கூட்டம் ஒன்று இலங்கைத் தமிழர்களின் அவல நிலைமை குறித்து விவாதிப்பதற்காக நடத்தப்பட்டது. அந்தக் கூட்டத்திற்கு நானும் சென்றிருந்தேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திருநாவுக்கரசு அவர்கள் அந்த ஜில்லாவைச் சேர்ந்தவர். அவரும் அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தார். எவ்வளவோ பேர்கள் அந்த இடத்தை வந்துபார்த்தார்கள். ஆனால் அவர்களுக்காக இதுவரையில் எதுவும் செய்யப்பட வில்லை.

நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இங்கே அடிக்கடி சொல்கிறபோது, நாங்கள் தீ விபத்து ஏற்பட்டால் ஒவ்வொருவருக்கும் 200 ரூபாய் கொடுக்கிறோம், வேட்டி கொடுக்கிறோம், சேலை கொடுக்கிறோம். கெரோசின் கொடுக்கிறோம் என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால் 13-7-3 முதல் 10-8-83 வரையில் எத்தனையோ அதிகாரிகள் வந்து பார்வையிட்டும் எந்தவிதமான உதவியும் அவர்களுக்குச் செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு என்ன காரணம்? அரசியல் காரணமா? அல்லது அதிகாரி களுடைய அலட்சியப் போக்கு காரணமா? ஏன் இந்த நிலைமை?

[திரு. எல். இளையபெருமாள்] [1983 அக்டோபர் 28

அது மட்டுமல்ல, ஒரு உதாரணத்தைச்சொல்லவேண்டுமானால் இராமநாதபுரம் மாவட்டத்திலே திருபுவனம் பகுதியிலே பூவந்தி என்ற கிராமத்திலே இராமகிருஷ்ணன் என்ற பி.எஸ்சி. படித்த மாணவன் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு சத்துணவு மையத்திலே பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுத்தான் என்ற ஒரே காரணத்திற்காக சாதி காரணமாக, தீண்டாத காரணமாக அவனை அடித்து இம்சைப்படுத்தினார்கள். அவன் திருப்புவனம் போலீஸ் ஸ்டேஷனிலே கம்ப்ளெய்ன்ட் கொடுத்தான். ஆனால் என்ன நடந்தது? ஒரு உண்மையான இளைஞர், இன்ஸ்பெக்டர் கேட்கப்போனதற்கு எல்லாகட்சி நண்பர்களும் ஒன்று சேர்ந்து அந்த சப்இன்ஸ்பெக்டரை அந்த ஸ்டேஷனைவிட்டு மாற்றிவிட்டார்கள். அந்த மாணவனை வேலையிலிருந்து சஸ்பெண்ட் செய்து இருக்கிறார்கள், இராமநாதபுரம் மாவட்ட கலெக்டர். நீங்கள் பணம் கேட்கிறீர்கள், கலெக்டர் சம்பளி மானாலும் சரி, சமுதாய வேலையாக இருந்தாலும் சரி, தன்னிறைவுத் திட்டமாக இருந்தாலும் சரி, திட்டமாக இருந்தாலும் சரி, சத்துணவுத் திட்டமாக இருந்தாலும் சரி, ஊட்டச் சத்துணவு திட்டமாக இருந்தாலும் சரி, எதுவாக இருந்தாலும் பணத்தை வாங்கிக் கொடுக்கிறோம், என்ற எண்ணத்தோடு இல்லாமல் கொடுக்கிற பணம் நியாயமாக ஒழுங்காக செலவழிக்கப்படுகிறதா என்று பார்ப்பதிலே நாம் பின் தங்கியிருக்கிறோமா என்ற ஐயப்பாடு வருகிறது. எப்படி அந்த கலெக்டர் அந்த சத்துணவு திட்ட பயனை—அவன் அடிபட்டது மட்டுமல்லாமல் அவன் கம்ப்ளெயின்ட் கொடுத்து இருந்தும்—அவனை சஸ்பெண்ட் செய்து கடந்த மாதம் 17 ஆம் தேதி வேலையை விட்டு நீக்கம் செய்திருக்கிறார்கள்? இது என்ன தடி எடுத்தவர்கள் எல்லாம் தண்டல்காரன் என்று நினைக்கிறார்களா? இது கேட்பாரற்ற நாடு என்று நினைக்கிறார்களா?

ஒரு தீர்மானத்திற்காக நாமெல்லாம், மாண்புமிகு முதலமைச்சர், முன்னவர் எல்லாம் கருணையோடு பேசி இலங்கை வாழ் தமிழர்கள் அவதிப்படுகிறார்கள், அவமானப்படுத்தப்படு கிறார்கள் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்று இரக்கத்தோடு பேசினோம், முடிவு செய்தோம். நாம் எல்லோரும் ஏகோபித்த ஆதரவு கொடுத்தோம். ஆனால் தமிழ்நாட்டிலே பிறந்தானே தமிழன், அவன் கதி என்ன? அவன் நிலைமை என்ன? அவனுக்காக போட்ட சட்டங்கள் என்ன? என்ன செய்கிறார் கலெக்டர்? இதைப்பற்றி முதலமைச்சருக்கும், ஆதி திராவிட நலத்துறை அமைச்சருக்கும், டிஸ்டிரிக்ட் கலெக்டருக்கும், வெல்பேர் ஆபீசருக்கும், டைரக்டர் ஆப் ஹரிஜன் நலத்துறைக்கும், மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இத்தனைக்கும் மேலாக உண்ணா விரதம் இருந்தார்கள். ஆனால் இன்னும் அந்த பி.எஸ்சி. படித்த மாணவனுக்கு வேலை கிடைக்கவில்லை. நான் என் இதைச் சொல்கிறேன் என்றால், நாம் சட்டங்கள் போடுவதும் பணம் கொடுப்பதும் ஏதோ ஒன்றிற்காகக் கேட்டு எதோ ஒன்றிற்காக செலவழிப்பது என்பது சரியல்ல, நியாயமல்ல, நீதியல்ல என்பதைச் சொல்வதற்குத்தான்.



1983 அக்டோபர் 28] [திரு. எல். இளையபெருமாள்]

திரு. துரைமுருகன் : மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. இளைய பெருமாள் அவர்கள் ஒரு குற்றச்சாட்டை இந்த மாமன்றத்திலே தெரிவித்திருக்கிறார்கள். அது உண்மையாக இருக்குமானால் எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் கவலைப்பட வேண்டிய ஒன்றாகும். சாதி அடிப்படையில் இவ்வளவு பெரிய கொடுமை நடந்திருந்தால் அதைக் கண்டித்து யார் யார் அதற்குக் காரணமோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்தக் குறிப்பிட்ட செய்தியைப்பற்றி, வழக்கைப்பற்றி மாமன்றத்திலே ஒரு அறிக்கையை வைக்கவேண்டுமென்று தங்கள் மூலமாக நான் அமைச்சரவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: நண்பர் திரு. துரைமுருகன் அவர்கள் நல்ல இளைஞர், வழக்கறிஞர். வழக்கிற்கு வாதாடி யதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏன் இதை கஷ்டப்பட்டுச் சொல்கிறேன் என்றால் இலங்கையிலே கண்டி, கதிர்காமம், ஈழத்திலே, தோட்டத் தொழிலிலே ஈடுபட்டிருக் கிறவர்கள் இன்றைக்கும் தமிழன் என்ற பெயரோடு தமிழன் என்ற அன்போடு டீ குடிக்க முடியவில்லை, கதிர்காமம் கோயிலுக்குப் போகமுடியவில்லை. 1969 ஆம் ஆண்டு தீண்டாமை ஒழிப்புக் குழு உறுப்பினராக நான் இருந்தபோது இலங்கை யிலிருந்து எனக்கு பல மனுக்கள் வந்தன. நான் இந்திய அரசிடம் அவற்றை கொடுத்தேன் இந்திய அரசிடம் தானே கொடுக்கவேண்டும் இளையபெருமாள், தமிழ்நாடு அரசாங்கம் என்ன செய்யமுடியும் என்று கேட்கலாம். இந்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில்தான் தமிழ்நாடு அரசாங்கமும் இருக்கிறது. தமிழ்நாடு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிற முறையிலே சொந்த மாநிலத்திலே பிறந்த தமிழனுக்கு உணவு இல்லை, உடையில்லை என்று சொன்னால் நாம் எவ்வளவு அவதிப்படுகிறோமோ அதைப்போல அவன் சுயமரியாதையற்று வாழ்கிறான். மிருகத்திற்கும் கேவலமாக நடத்தப்படுகிறான் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

(பிற்பகல் 12-30)

இன்று மது விற்பனை செய்யப்படுவதாலே நன்மையில்லை யென்று முதலமைச்சர் அறிந்திருந்தும் இந்தத் திட்டத்தின் மூலமாக கள்ளச் சாராயமும் காய்ச்சப்படுவது மாத்திரமல்ல, அரசாங்கம் கொடுக்கிற சாராயமும் கள்ளச் சாராயமும் கலந்து கொடுக்கப்படுகிறது. அதைக் கலந்து கொடுத்ததால் மக்கள் அதை சாப்பிட்டுவிட்டு சில பேர்களுக்கு நரம்புகள் இயங்கவில்லை, சில பேர்களுக்கு கண் தெரியவில்லை, சில பேர்களுக்கு காது செவிடாகிவிட்டன. அரசாங்கத்திற்கு இதன்மூலம் வரும் 600 கோடி ரூபாய் பெரிய பணம் அல்ல. மக்கள் கண் அற்று போகிறார்கள், செவிடர்கள் ஆகிறார்கள் நரம்புகள் வேலை செய்ய மறுகின்றன இப்படிப்பட்ட அபாயகரமான நிலைமை இருக்கிறது. ஆகவே இந்த மது விலக்கு சட்டத்தை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று தமிழக அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே வறட்சி பணிகளிலும் நாம் பின்னால் இருக்கிறோம். இங்கே தண்ணீர் இல்லை என்று கூட சொன்னார்கள். இப்போது தஞ்சையில் கொள்ளிடத்தின் பக்கம் திருச்சி மாவட்டம், தஞ்சை

மாவட்டம், தென்னாற்காடு மாவட்டம் ஆகிய 3-க்கும் லோயர் அணைக்கட்டு என்ற இடம் இருக்கிறது. நாம் தண்ணீர் இல்லை என்று சொல்லிக்கொண்டு இருக்கிறோம். ஆனால் கிடைக்கின்ற தண்ணீரை கடலுக்கு வீணாக்கிகொண்டு இருக்கிறோம். கடந்த 3 வருடத்திற்கு முன் நான் அரசாங்கத்திற்கு கடிதம் எழுதினேன். நான் பேசும்போது பேசினேன். அங்கே கோடாளி கருப்பு என்று ஊர் இருக்கிறது. ஜெயம்கொண்டான் பக்கத்தில், திருச்சி ஜில்லாவில் உடையார் பாளையம் தாலுக்காவில் பொன்னேரி என்ற பெரிய ஏரி இருக்கிறது. எப்போது எல்லாம் அதிகமாக தண்ணீர் வருகிறதோ அந்த தண்ணீரை தேக்கி அந்த ஏரிக்கு விட்டோமானால் திருச்சி ஜில்லாவுக்கும் உயர்ந்து மேடாக உள்ள டிரை லெண்டுஸ் அதாவது மழை உள்ள காலத்தில் விளைகின்ற நிலங்களுக்கு அது உதவியாக இருக்கும் என்று சொன்னேன். அரசு ஏன் இதுவரையில் அதை கவனிக்கவில்லை என்று தெரியவில்லை. தென்னாற்காடு மாவட்டம், திருச்சி மாவட்டம், தஞ்சை மாவட்டம் ஆகிய மூன்று மாவட்ட இன்ஜினியர்களையும் அழைப்பிட்டு இதற்கு தனியாக குழு அமைத்து நீங்கள் விசாரணை செய்தால் உங்களுக்கு மழை காலத்தில் கிடைக்கின்ற அதிகப்படியான தண்ணீர் கடலுக்கு வீண கிச் செல்கிறது அதைப் பெறமுடியும். இதை எல்லாம் கண்காணிப்பது தான் இன்ஜினியர்கள் வேலை. இதையெல்லாம் இன்ஜினியர்கள் செய்கிறார்களா என்பதை கேட்பது தான் அமைச்சர்கள் வேலை. ஆனால் பணம் கேட்பதும், செலவுகள் செய்வதும் ஏதோ ஒரு விளையாட்டுத் தனமாக செய்கிறீர்களே என்ற ஒரு அவல நிலைமையை இந்த அரசு செய்யக்கூடாது என்று நல்ல எண்ணத்தில் சொல்கிறேன் இதை உடனடியாக கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வெளிநாட்டு சாராயம், உள்நாட்டு சாராயம் அல்லாமல் திருட்டு சாராயம் கலந்து விற்கிறார்கள். இதற்கு அரசியல்வாதிகள் கூட உடந்தையாக இருந்தால் அது பெரும் பாவம். அப்படிப்பட்ட அரசியல்வாதிகள் யார் வந்தாலும் அவர்களுக்கு அதிகாரிகள் இடம் கொடுக்காத நிலையில் அமைச்சரகம் அவர்களுக்கு ஒரு தாக்கீது கொடுத்து இதுபோன்ற கள்ளச்சாராயம் கலப்பவர்களுக்கு எந்த அனுதாபமும் காட்டக் கூடாது எந்த அரசியல்வாதி சொல்வதையும் கேட்கக்கூடாது என்றும் அது ஆளும் கட்சியாக இருந்தாலும் எதிர்கட்சியாக இருந்தாலும் ஏன் இளையபெருமாளே சென்று சொன்னாலும் கூட இந்த அவல நிலைமையை தடுப்பதற்கு அரசு முன்மாதிரி யாக நாணயமாக நடக்கிறது என்ற நல்ல எண்ணத்தை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு நான் என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு சட்டப் பேரவை தற்காலிகத் தலைவர் அவர்களே, எதிர்பாராத செலவு நிதி சட்டத்தை மேலும் திருத்துகின்ற வகையில் கொண்டு வந்திருக்கிற இந்த தலைப்பில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்தை தெரிவிக்க விழைகிறேன்.



இப்போது எதிர்பாராத செலவுக்காக வறட்சி நிவாரண திட்டத்திற்கு ஆகின்ற செலவுக்காகவும் அதைப்போல சாராயம் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது வகை மொத்த விற்பனையை அரசு மேற்கொண்ட வகையில் ஏற்பட்டு இருக்கக் கூடிய அதிக செலவுக்காக தொகையை எடுத்துக்கொள்கின்ற இந்த தலைப்பில் நான் சில முக்கியமான கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன்.

வறட்சி நிவாரணத்திற்கு என்று தமிழ்நாட்டிலே செலவழிக்கப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும் ஒவ்வொரு அமைச்சரும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரும் இத்தனை கோடி ரூபாய்களை செலவு செய்து தமிழ்நாட்டில் வறட்சி பணிகளை மேற்கொண்டிருக்கிறோம் என்று நாள்தோறும் சொல்வதை நாளேட்டில் பார்க்கிறோம். ஆனால் செலவழிக்கப் பட்ட மொத்தத் தொகை வறட்சி நிவாரணப் பணிகளுக்கு அப்படியே பயன்படுத்தப்பட்டதா என்பதில் தான் நாங்கள் முழுமையாக கருத்து வேறுபாட்டை அடைய விரும்புகிறோம். பணம் செலவழிக்கப்பட்டு குழந்தைக்கு மருந்து கொடுக்கிறோம். ஆனால் நோய் தீர்ந்ததா என்றால் முழு அளவுக்கு மருந்து செலவழிந்ததே தவிர குழந்தை பிழைத்தபாடு இல்லை என்ற அளவுக்கு இன்றைக்கு வறட்சி நிவாரண பணிகள் செய்யப் பட்டிருக்கின்றன, என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பலயிடங்களில் வறட்சி நிவாரணப் பணிகளைப் பார்க்கும் போது நமக்கே கூட ஒரு மாயை தோன்றும். பாதை போட்டிருக் கிறார்கள். பைப் போட்டிருக்கிறார்கள், ஆழ் குழாய் கிணறுகள் தோண்டியிருக்கிறார்கள், கரையை செம்மைப்படுத்தியிருக் கிறார்கள் என்பதையெல்லாம் நாம் போகும்போது பார்க்கலாம். அதை மட்டும் பார்த்துவிட்டால் உண்மையான வறட்சி நிவாரணப் பணியினுடைய அருகதை தெரியாது. எத்தனை இலட்சம் செலவழிக்கப்பட்டது? எந்த ஏரியைச் செப்பனிட்டிருக் கிறார்கள்? எத்தனை பாதை போட்டிருக்கிறார்கள்? ஒரு குறிப்பிட்ட பாதைக்கு மட்டும் எவ்வளவு செலவழித்திருக் கிறார்கள் என்பதை எல்லாம் பார்த்தால்தான், செலவழித்த பணம் எவ்வளவு, செய்த சாதனை எவ்வளவு என்பதை நாம் கண்டு பிடிக்கமுடியும்.

இந்த மன்றத்தில், ஏற்கனவே, வறட்சி நிவாரணப் பணிகளில் தன்னிறைவுப் பணிகளில், அவற்றை நிறைவேற்றும்போது, எத்தனை தவறுகள் நடைபெற்றன, எத்தனை ஊழல்கள் நடைபெற்றன என்பதை நாங்கள் தெளிவாக, சான்றுகளோடு சொல்லியிருக்கிறோம். அப்படி சொல்லியிருந்தும் கூட, இப்பொழுது நடைபெறுகிற வறட்சி நிவாரணப் பணிகளில், தவறுகள் களையப் படவில்லையென்பதை நான் மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன் ஆனால், அதே நேரத் தில், ஆதாரத்தோடு சிலவற்றைப் பற்றித் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியில் பிரம்மதேசம் என்ற ஊர் இருக்கிறது. அங்கே ஒரு சின்ன குட்டை இருக்கிறது. அந்தக்

தங்களுடைய தலையாயப் பணி என்று சொல்லிக்கொண்டிருக்கிற என்ஜினியர்களில் அவரும் ஒருவர்; அந்த டி. ஈ.,—ஹீ இஸ் தி ஹையஸ்ட் அத்தாரிட்டி இன் தி டிஸ்ட்ரிக்ட் லெவல்''. அவர் வந்து பார்க்கிறார். கரையிலே நின்று கீழே இருக்கிற ஏ.டி.இ., ஜே.இ.,—யை பார்த்து சொல்கிறார். 'மாட்டி விட்டுவிட்டீர் களே அப்பா' என்று சொல்கிறார். அவருக்கே பொறுக்கவில்லை. டி.இ. நல்லவரா என்றால் இல்லை. அவரும் தவறு செய்கிறவர் தான். தவறு செய்கிற அதிகாரிக்கே பொறுக்காத அளவிற்கு ஏ.டி.இ., ஜே.இ., தவறு செய்திருக்கிறார்கள். இதெல்லாம் விமர்சனத்திற்கு வராது. மீறிப்போய் கேட்டால் இந்த அக்கிரமங் களை, அநியாயங்களை மறைப்பதற்கு இந்த அரசு கருதியிருக்கு மானால் அது நல்ல அணுகுமுறை அல்ல.

சத்துணவுத் திட்டத்தை நாங்கள் ஏற்கெனவே சொல்லியபடி அதை வரவேற்கிறோம். இல்லாத நாட்டிலே ஏழை மக்கள் வசிக்கிற நாட்டிலே, ஊழைப்பாளிகள் மிகுந்த நாட்டிலே அவர்களுடைய குழந்தைகளுக்கு ஒரு வேளை சோறு போடுவதை யாரும் தவறு என்று சொல்ல முடியாது. நாங்கள் சொன்னபடி இது ஒரு நல்ல திட்டம்தான். அந்தத் திட்டத்தின் பெயரால் நடக்கும் தவறுகள் நாள் ஏடுகளில் வருபவை மிகவும் குறைவு. அரிசி கடத்தல், எண்ணெய் கடத்தல் போன்று வருபவை மிகவும் குறைவு. சில பத்திரிகைகளிலே தான் வருகின்றன. இவ்வளவு பெரிய திட்டத்திலே அன்றாடம் ஆயிரக்கணக்கான தவறுகள் நடைபெறுகின்றதே அவற்றை அரசாங்கம் மறு பரிசீலனை செய்ய வேண்டாமா? 150 கோடி, 200 கோடி என்று போடுகிறோமே. இவ்வளவு தூரம் பேப்பரிலே வருகின்றதே, அதைப் படிக்கின்ற மாண்புமிகு முதலமைச்சரும், மற்றவர்களும் எண்ணிப் பார்க்க வேண்டாமா? ஒரு ஸ்கீம் போடுகிறோம்; நல்லது; செய்திகள் வருவது ஒரு நாள் பாக்கி இருக்கிறதா? எந்த இடத்திலாவது இதுபற்றி வராத நாள் இருக்கிறதா! சாம்பார் வாளியிலே குழந்தை விழுந்து இறந்து விட்டது என்று செய்தி வருகிறதே; அதைப் பற்றியெல்லாம் சிரியசாக கவர்ன்மென்ட் சைடிலே எண்ணிப்பார்க்க வேண்டாமா? நான் ஏற்கெனவே சொன்னேன். என்னுடைய வீட்டிற்குப் பக்கத்திலே ஒரு பால்வாடி இருக்கிறது. அதில் அனுமதிக்கப்பட்ட குழந்தை களுடைய எண்ணிக்கை 125. ஆனால் சாப்பிடுவது 10 அல்லது 15 தான். கணக்கு சமைக்கிறபோது எழுதுவதில்லை. குழந்தைகள் எல்லாம் போன பிறகு 125 குழந்தைகளுக்கு சாப்பாடு போட்ட தாக கணக்கு எழுதி அக்கவுண்ட்டை குளோஸ் செய்து விடுகிறார்கள், என்று சொன்னேன். அதுபற்றி அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்றால் தெரியாது. ஆனால் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தார்கள். எடுத்து பத்து நாட்கள் சஸ்பென்ட் செய்தார்கள். எனக்கு ஊரிலிருந்து செய்தி வந்தது. நீங்கள் சட்ட மன்றத்திலே பேசினீர்கள். அதிலே பலன் கிடைத்தது. அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது என்று சொன்னார்கள். ஆனால் விந்தை என்னவென்றால் மீண்டும் 10 நாட்களுக்கு பிறகு யாரை அரசாங்கம் சஸ்பென்ட் செய்தார்களோ அவர்கள் மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.





அண்ணா அவர்கள் சொன்னார், நாவலருக்குத் தெரியும். 'உப்பு மண்டியிலே திருடினால், பருப்பு மண்டியிலே வேலை கொடுப்பானா' என்று சொன்னார். ஆனால் நீங்கள் உப்பு மண்டியிலே திருடினால், பரவாயில்லை, பருப்பு மண்டிக்கு நீதான் இன்–சார்ஜ் என்று செய்திருக்கிறீர்கள். அவர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்கிறீர்கள். தவறு கண்டுபிடித்தாகி விட்டது. அதற்கு பிறகு என்ன இருக்கிறது? அந்த ஆயாக்களுக்கும் சமையல் காரர்களுக்கும் என்ன ரெக்கமண்டேஷன்? அவர்கள் நிமிர்ந்து நடக்கிறார்கள். பாரதியார் பாடியபடி 'நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட நெஞ்சு' அங்கேதான் பார்க்க முடிகிறதே தவிர, அவர்கள் வேலை செய்கிற இடத்தில் பார்க்க முடியவில்லை. இப்போது ஒரு மாதத்திற்கு முன்னாலே அதே பணியிலே அவர்களைப் போட்டதாலே' குழந்தைகளுக்கு சமைக்கிற எண்ணெய்யை அந்த ஆயா திருடி வைத்தார்கள். அதை கொண்டு போவதற்கு பாத்திரம் இல்லாத காரணத்தால் பக்கத்து வீட்டி ல ஒரு பெரிய செம்பை கேட்டிருக்கிறார்கள். அவர்களும் எதற்கோ கேட்கிறார்கள் என்று நினைத்து கொடுத்திருக்கிறார்கள். அந்த எண்ணெய்யை அந்த செம்பிலே ஊற்றி பக்கத்திலிருந்த ஒரு புதரில் வைத்து விட்டார்கள். போகும்பொழுது எடுத்துச் செல்லலாம் என்று வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார். அதை யாரோ பார்த்துக்கொண்டிருந்துவிட்டு அந்தச் சொம்பைக் கடத்தி விட்டான். பள்ளியிலிருந்து வீட்டுக்குத் திரும்பும் சமயத்தில் அந்தச் சொம்பைத் தேடியிருக்கிறார். சொம்பையும் காணோம், எண்ணெய்யும் காணோம். அதைப்பற்றி வெளியிலேயும் சொல்ல முடியவில்லை. உப்புக் கண்டம் பறி கொடுத்தவன் போன்ற நிலைமை ஏற்பட்டு விட்டது. என்னுடைய வீட்டுக்கு வெகு அருகாமையில் நடந்த விஷயம் இது. நேரம் ஆக ஆக, சொம்பைக் கொடுத்த அம்மையார் சொம்பைக் கேட்க ஆரம்பித்துவிட்டார். உடனே சமையல்கார அம்மையார் சொன்னார், நான் சொம்பை வைத்த இடத்தை நீ தான் பார்த்துக்காண்டிருந்தாய், ஆகவே, நீ தான் சொம்பை எடுத்திருக்க வேண்டும் என்று திருப்பி விட்டார். அந்த விஷயத்தில் நான் தலையிடவில்லை. ஏனென்றால் நான் கண்டறிந்து அரசுக்குத் தெரிவித்த விஷயத்தில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்காமல் மீண்டும் அவரை வேலைக்கு வைத்த காரணத்தால் நான் தலையிட விரும்பவில்லை. அப்படித் தலையிட்டால் எனக்கு என்ன மரியாதை கொடுக்கப்படுகிறது? நான் தலையிடாததற்குக் காரணம் சொம்பையும், எண்ணெய்யும் நீ தான் கடத்திவிட்டாய் என்று என்னையே சொல்லக்கூடிய நிலைமைகூட ஏற்பட்டுவிடும். அந்த அளவிற்கு ஆதிக்கவாதிகளாக மாறுகிறார்கள். தனிப்பட்ட ஒரு பெண்ணைப் பற்றி எனக்குக் கவலையில்லை, அவர் பிழைப்பதைப்பற்றி எனக்குக் கவலையில்லை, நான் அவர்களைப் பார்த்து இரக்கம்தான் கொள்வேன். ஆனால் அரசாங்கத்தின் பணம் போகிறதே என்பதற்காகத்தான் சொல்கிறேன். இப்படி நூற்றுக்கு ஒன்று நடக்கிறது, ஆயிரத்திற்கு ஒன்று என்று கருதாதீர்கள். நல்ல வேளையாக ஆசிரியர்கள் இதிலிருந்து தப்பித்து விட்டார்கள்.

சத்துணவுத் திட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் இம்மாதிரி நிகழ்ச்சிகளை எங்களால் பார்த்துக் கொண்டிருக்க

முடியவில்லை. சிவில் சப்ளைஸ் டிப்பார்ட்மெண்ட்டில் எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் பணியாற்றுகிறார். நேற்றுமாலை ஒரு கர்ரியமாக என்னிடத்தில் வந்திருந்தார். அவர் சொன்னார், இந்தச் சத்துணவுக் கூடங்களுக்கு லாரிகளிலே அரிசியைக் கொண்டு போவார்கள், இப்பொழுது ஏற்பட்ட மழை வெள்ளத்தின் காரணமாக ஒரு லாரியானது ஒரு இடத்தில் சிக்கிக்கொண்டது, அதைத் தள்ளுவதற்கு வேண்டிய ஆட்கள் அந்த லாரியில் இல்லை, எனவே அந்தப் பக்கமாகச் சென்று கொண்டிருந்த பத்து இருபது பொதுமக்களைப் பார்த்து லாரியைக் கொஞ்சம் தள்ளிவிட்டால் மெயின் ரோட்டின் மேலே ஏற்றிக்கொள்கிறோம் என்று சத்துணவு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கேட்டுக்கொண்டார்கள். அதற்கு அந்த பொதுமக்கள் சொன்னார்களாம். நாங்கள் ஏன் ஐயா தள்ள வேண்டும், ஆயாக்களை அழைத்து வந்து தள்ளச் சொல்லுங்கள், சமையல்கார அம்மாவை அழைத்து வந்து தள்ளச் சொல்லுங்கள், சத்துணவு யாருக்குப் போகிறதோ அவர்களை அழைத்து வந்து தள்ளச் சொல்லுங்கள், நாங்கள் ஏன் தள்ள வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள்.

முதலமைச்சரவர்கள் முதல் முதலில் ஆரம்பித்தபொழுது நெய், பாயசம் ஆகியவையெல்லாம் இருந்ததே அதைப்போல இப்பொழுதும் இருக்கிறது என்று நினைத்துக்கெண்டிருக்காதீர்சள் என்பதற்காகத்தான் இவைகளையெல்லாம் நான் சொல்கிறேன். இப்பொது அப்படி நடக்கவில்லை. நான் எந்த அதிகாரியைப் பற்றியும் குறை சொல்லவோ அல்லது யாரையும் காட்டிக் கொடுக்கவோ இதைச் சொல்லவில்லை.

இதை நிறைவேற்றக் கூடிய அந்தஸ்திலே இருக்கக்கூடிய அதிகாரிகள், ஆரம்பத்திலே இதை வரவேற்ற அதிகாரிகள் இப்பொழுது மனமுடைந்து போய், இந்த நடவடிக்கைகளை நாம் கண்ட்ரோல் செய்ய முடியவில்லையே என்று வருத்தப் படக்கூடிய அளவில் இருக்கிறார்கள். இதனால் மாநில அரசின் நிர்வாகமும், மாவட்ட நிர்வாகமும் பாதிக்கப்படுகிறது. திடீரென்று ஒரு குழந்தை சாம்பாரில் விழுந்து இறந்து விட்டது என்றால் உடனே அந்த இடத்திற்குக் கலெக்டர் போகிறார். இதுதான் கலெக்டரின் வேலையா? எந்த அடுப்பை யார் பற்ற வைக்கிறார்கள், யார் எண்ணெய் திருடுகிறார்கள் என்பதைக் கவனிப்பதுதான் கலெக்டரின் வேலையா? கலெக்டர் வேலை என்பது எவ்வளவு பெரிய வேலை? அவர்கள் இதற்காகத் தங்களுடைய நேரத்தைச் செலவழிக்கலாமா?

சீஃப் எஜுகேஷனல் ஆபீசர் இருக்கிறார். அவருக்கு எவ்வளவு வேலைகள் இருக்கின்றன? ஜீப்பை போட்டுக்கொண்டு சத்துணவுக் கூடத்தைப் பார்வையிடுவது மட்டும்தான் அவரது வேலையா? அவருக்கு எவ்வளவோ பணிகள் இருக்கின்றனவே, கல்வித் துறை சம்பந்தமாக என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும், எங்கெங்கு ஆசிரியர்கள் பணியிடம் காலியாக இருக்கின்றன, பென்ஷன் சம்பந்தமான பிரச்னைகள், எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சில் தொடர்பு கொண்டு ஆசிரியர் களை நியமிப்பது போன்ற வேலைகளெல்லாம் இருக்கின்றன,



ஏ. ஈ. ஓ. இருக்கிறார், முக்கிய சேவிகாக்கள் இருக்கிறார்கள். கிராம சேவக்குகள் இருக்கிறார்கள், கமிஷனர் இருக்கிறார், இதுபோன்றவர்கள் அத்தனைபேர்களும் சத்துணவு சம்பந்தமாக சூப்பர் வைஸ் செய்து இந்தக் கதி என்றால் இந்தச் சத்துணவுத் திட்டத்தால் நன்மை என்று எப்படி கருதிக் கொண்டிருக்கிறீர்கள்?

எனக்குக்கூட ஒரு ஐயப்பாடு உண்டு. பெற்ற தாயை விட உற்ற தாய் நல்லவளாக இருக்க மாட்டாள் என்று கலைஞர் அவர்கள்கூட சொல்லியிருக்கிறார்கள். இபபடிப் பெற்ற தாயிடம் மாதத்திற்கு 15 ரூபாயைக் கொடுத்துவிட்டால் கூட அவர்கள் ஏதாவது செய்வார்கள். அல்லது ஆந்திர மாநிலத்திலே அந்த முதல்வர் என். டி. ஆர். அவர்கள் முட்டை, பால் கொடுக்க வேண்டுமென்று சொன்னதைப்போல இங்கே கொடுத்திருந்தாலும் நல்ல பயன் ஏற்பட்டிருக்கும். அப்படியெல்லாம் செய்யாமல் இதைக் கட்டியிழுத்துக் கொண்டு செல்வது என்றால் கெட்ட பெயர்தான் ஏற்படும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜகத்ரட்சகன்). வறட்சியைப் பற்றிய சட்ட முன்வடிவில் சத்துணவுத் திட்டம் பற்றியெல்லாம் பேசுவதில் பொருள் இல்லை. வறட்சியைப் பற்றி மட்டும் பேசிவிட்டு விரைவில் பேச்சை முடிக்க வேண்டும்.

திரு. ஜே. எஸ். இராசு: காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மதிப்பிற்குரிய திரு. இளையபெருமாள் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் இதைக் குறிப்பிட்டிருந்தால் பொருத்தமாக அமைந்திருக்கும். அவர்கள் பேசும்போது அனுமதித்து விட்டு எனக்கு அனுமதி மறுத்தால் பாரபட்சமாகத் தலைமை இருக்கிறது என்றுதான் கருத வேண்டியிருக்கும்.

(முற்பகல் 12–50)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜகத்ரட்சகன்) அவர்கள் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை.

திரு. ஜே. எஸ். இராசு: நான் பேசுவது மாதிரி அவர் பேச முடியாது; அவர் பேசுவது மாதிரி நான் பேச முடியாது,

மாண்புமிகு டாக்டர் இர. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் குறை சொல்வதற்கும் குற்றம் சொல்வதற்கும் உரிமை உண்டு. இரண்டும் இல்லாமல் சொல்வதற்கும் உரிமை உண்டு.

ஆனாலும் கூட இந்தப் பிரச்சினை என்னவென்றால் எதிர் பாராத செலவினத்திற்கு ஏற்கனவே சட்டப்படி 50 கோடி ஒதுக்கப்பட்டது. அதன் பின்னர் 150 கோடி ஒதுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அது அவசியமா இல்லையா என்பதைத் தான் பேசவேண்டும். மற்றைய விஷயங்களைப் பற்றி பேச வேண்டாம் என்றுகூட இல்லை, பேசினால் அந்தக் கருத்துக் களுக்கும் சேர்த்து நிதியமைச்சர் பதில் சொல்லவேண்டும்

என்று எதிர்பார்த்தால் அது நடைபெறாத ஒன்று. எனவே அந்தந்தப் பிரச்சினையை அவ்வப்போது அப்பிரச்சினைகள் பற்றி வருகின்றபோது சொல்வதுதான். நல்லது மற்ற பிரச்சினைகளையும் கவனிக்க வேண்டியதுதான் ஆனால் இப்போது எடுத்துக்கொண்ட பிரச்சினைக்கான கருத்துக்களை மட்டும் இப்போது எடுத்துச் சொல்வார்களேயானால் அது பயன் உள்ளதாக இருக்கும். எனவே அந்த அளவுக்கு பயன் உள்ளதாக இருப்பது நல்லது. மற்றவற்றை இப்போது சொல்லத் தேவையில்லை என்று நான் சொல்ல வரவில்லை. அவற்றுக்கான நேரமும், இடமும், வாய்ப்பும் வேறு வேறு வகைகளில் வருகின்றன என்பதை மட்டும் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்ததற்குக் காரணம் என்னவென்றால் ஏற்கெனவே சுட்டிக்காட்டிய தவறுகள் மறுபடியும், மறுபடியும் அந்தத் துறையில் வந்துகொண்டே இருக்கின்றன என்பதை அரசாங்கத்திற்கும், மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் அவர்களுக்கும் நினைவுபடுத்துவது என்னுடைய கடமை என்பதற்காகத்தான் சொன்னேன். எனவே குற்றச்சாட்டு சொல்லி குற்றம் சாட்டித்தான் தீரவேண்டும் என்பது என்னுடைய நோக்கம் இல்லை. அதிகமான தொகையைக் கேட்டு கொண்டு வருகிறோம் என்பதற்காகச் சொன்னேன்.

அடுத்து கள், சாராயத்தைப் பற்றி திரு. இளை பெருமாள் அவர்கள் சொன்னார்கள். அதுபற்றிப் பேசுவதற்கு வழி வகுத்துக் கொடுத்தற்காக அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரே ஒரு விஷயத்தை மட்டும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கள், சாராயம் குடிப்பதற்கு அனுமதி கொடுக்கின்ற சட்ட முன்வடிவிலே பேசுகின்றபோது ஒரு கருத்தைச் சொன்னேன். ஏற்கனவே தமிழ்நாட்டிலே ஏகப்பட்ட ஜாதிகள் இருக்கின்றன. இதிலே பெர்மிட் வாங்கிக் குடிக்கின்ற ஜாதி, பெர்மிட் வாங்காமல் குடிக்கின்ற ஜாதி என்று புதிதாக இரண்டு ஜாதிகளைச் சேர்க்காதீர்கள் என்று சொல்லி இருக்கிறேன். இப்போது யாராவது பெர்மிட் வாங்கிக் கொண்டு குடிக்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன். அரசாங்கத்தால் கணக்குச் சொல்ல முடியுமா எவ்வளவு பேர் பெர்மிட் வாங்கிக் கொண்டு குடிக்கிறார்கள் என்று எவ்வளவு பேர் பெர்மிட் இல்லாமல் குடிக்கிறார்கள் தெரியுமா? குடிப்பதை எதிர்ப்பவன் நான். அது வேறு விஷயம் எத்தனை ஆயிரம் பேர் பெர்மிட் வாங்கிக்கொண்டு குடிக்கிறார்கள்? எனவே அரசாங்கம் ஒரு உண்மையைப் பொதுமக்களுக்குத் தர மறுக்கின்றதல்லவா? வேண்டும் என்றே மறுக்கிறார்கள் அல்லவா? எனவே நான் கேட்டுக்கொள்கிறேன், இந்தக் குடியினைத் தயவுசெய்து எடுத்துவிடுங்கள் என்று. அதை எடுத்துவிடுவது நல்லது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம் சத்துணவு மாதிரிதான் குடியும் போய்க்கொண்டிருக்கின்றது.



நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சப் இன்ஸ்பெக்டர் கூட குடித்துவிட்டு வீதியிலே கிடக்கிறார். இப்படிப்பட்டவர் குடிக்கின்ற மக்களை எப்படிப் பிடிக்க முடியும். திரு. எம். ஆர். ராதா அவர்கள் ரத்தக் கண்ணீர் நாடகத்தில் சொன்ன ஒன்றை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். குடிக்கின்றவன் வாயும் நாறுகின்றது, பிடிக்கின்றவன் வாயும் நாறுகின்றது என்று அவர் நாடகத்திலே சொல்லி இருக்கிறார். அது இப்போது உண்மையாகின்றது. எனவே தயவு செய்து....

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, காவல் துறை அதிகாரி ஒருவர் குடித்துவிட்டு ரோட்டிலே கிடந்தார் என்ற ஒரு குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அப்படி அரசாங்க அதிகாரி ஒருவர் இருப்பாரேயானால் அவர் யார் என்பதைக் குறிப்பிட்டுச் சொன்னால் அரசு நடவடிக்கை எடுப்பதற்கு உதவியாக இருக்கும். எனவே முழு விவரமும் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு : மாற்றுத் தலைவர் அவர்களே, நான் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. அதுபற்றிய விவரங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. எனவே பிறகு அவற்றை எப்போது வேண்டுமானாலும் தருகிறேன். (மணியடிக்கப் பெற்றது).

சத்துணவு என்பது விளம்பரத்தில்தான் நல்ல முறையில் இருக்கின்றது. வேறு ஒன்றும் இல்லை. இந்த 1983–ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதியினைப் பொறுத்தவரையில் அதிகமான தொகையினைக் கேட்பதற்கு இந்த அரசுக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்று கூறி என்னுடைய கருத்துக்களை முடித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நடமாடும் பல்கலைக் கழகம் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இந்த நாட்டு மக்களின் உணர்வுகளை நான் இந்த மன்றத்திலே பகிர்ந்துகொள்ள முன் வருகிறேன்.

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்"

என்றான் வள்ளுவன். தனி ஒருவனுக்கு உணவு இல்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்றார் பாரதியார். 'கூழுக்கு ஒருவன் அழுவானேயானால் அக்கோவை முறித்திடும்' என்றார் பாரதிதாசன். இந்தியாவின் ஜீவநாடி கிராமத்தில்தான்

இருக்கிறது என்றார் காந்தியடிகள். இந்தியா ஒரு தரித்திர நாராயணன் நாடு என்றார் ஜெயப்பிரகாஷ் நாராயணன். இராம ராஜ்யம் தேவை என்றார் மகாத்மா காந்தி. ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம் என்றார் அண்ணா. ஏழை மேலும் ஏழையானான், பணக்காரன் மேலும் பணக்காரன் ஆனான் 30 ஆண்டுகால ஆட்சியிலே என்றார் காமராஜர்.

இத்தனை பெரியவர்களுடைய மொத்தக் கருத்துக்களை தமிழக அரசு உத்தேசித்துப் பார்த்துத்தான் வணக்கத்திற்குரிய தமிழக முதலமைச்சர் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் தேர்தல் காலத்தில் சொல்லாத வாக்குறுதிகளையெல்லாம் கூட, எதிர்பாராத செலவினத்தின் மூலம் இந்த நாட்டு மக்களுக்கு மிக மிகத் தேவையான திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று கொண்டு வரப்பட்ட திட்டம்தான் தன்னிறைவுத் திட்டம், சத்துணவுத் திட்டம், கிராமிய வீட்டு வசதித் திட்டம், முதியோர் உதவித் தொகை தரும் திட்டம், அவர்களுக்கு வேஷ்டி சேலை வழங்கும் திட்டம் ; நிலமற்ற விவசாயிகளுக்கு சேலை வேஷ்டி வழங்கும் திட்டம் போன்றவைகளாகும். இந்தத் திட்டங்கள் எல்லாம் தேர்தல் காலத்தில் வாக்களிக்கப்பட்ட திட்டங்கள் அல்ல. அவ்வப்போது அமைச்சர்கள் சுற்றுப் பயணம் செய்கிற நேரத்திலும், மற்ற நேரத்திலும் பொதுமக்கள் எடுத்துத் தெரிவிக்கின்ற நிலைமைகளை எண்ணிப் பார்த்து, அவர்களுடைய உண்மை நிலையை நேரில் கண்டு, இந்தத் திட்டங்கள் எல்லாம் இந்த நாட்டு மக்களுக்குத் தேவை என்று செய்து இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

இந்தத் திட்டங்கள் எல்லாம் மிகப் பெரிய திட்டங்கள். சத்துணவுத் திட்டத்தைப் பற்றிப் பேசுகிறபோது சிலவற்றைச் சொன்னார்கள். அதற்கு நான் பிறகு பதில் சொல்கிறேன். பல இடங்களில் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. பல ஆண்டு காலத்திற்கு ஆட்சி பீடத்தில் இருந்தவர்கள் பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். ஆனால், அதற்குப் பின்னாலே அந்தத் திட்டத்தை நிறைவேற்ற பணம் ஒதுக்கவில்லை. நான் உதாரணங்களைச் சொல்ல முடியும். என்னுடைய தொகுதியில் நாகரசம்பட்டி என்ற இடத்தில் ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டுவதற்காக 1962 ஆம் ஆண்டில் அடிக்கல் நாட்டப்பெற்றது அப்போது இந்த நாட்டின் முதலமைச்சராக இருந்த காமராஜர் அவர்களால். ஆனால் அதற்குப் பிறகு 20 ஆண்டுகள் கழிந்த பின்பும் அதற்கு பணம் ஒதுக்கப்படவில்லை. இடையிலே வந்த ஆட்சி அதை கவனிக்கவே இல்லை. இந்த அரசு வந்த பின்னாலே தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு வந்த பின்னாலே தான் 1982 ஆம் ஆண்டில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றி, மக்களிடத்தில் ஒப்படைத்தார்கள். அது போலத்தான், ஆண்டு தோறும் வரும் பெரு வெள்ளத்தால் ஒரு கிராமமே அடித்துச் செல்லும் சூழ்நிலை என்னுடைய தொகுதியில்—காவேரிப் பட்டினம்—ஐக்கசமுத்திரம் என்ற கிராமத்தில் இருந்தது. எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் எந்த அரசும் அதற்கு ஒரு



பாலம் கட்ட முன்வரவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவர்
அரசு வந்த பின்னாலே தான் எதிர்பாராதச் செலவு என்ற
அடிப்படையில் 117 லட்சம் செலவில் அங்கே ஒரு பாலம் கட்ட
முன்வந்து இருக்கிறது. ஏற்கனவே வாக்குறுதி கொடுக்காத
செலவாக இது இருந்தபோதிலும் அந்த மக்களைக் காப்பாற்ற
வேண்டும் என்ற அடிப்படையில் இதை இந்த அரசு செய்திருக்
கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இப்படி தமிழ்
நாட்டிலே ஆயிரக்கணக்கான அடிக்கல்கள் அப்படியே இருக்
கின்றன. அவற்றையெல்லாம் நிறைவேற்றுவதற்கு நிதி ஒதுக்கம்
செய்யப்பெறவே இல்லை. அதனால் அவைகள் நடைமுறைக்கு
வரவில்லை. ஆனால் இந்த அரசு எங்கெங்கு அவசரத்
தேவையோ, மிகமிகத் தேவையோ, அங்கேயெல்லாம் நியாய
மான உணர்வோடு, மக்களுக்குத் தேவையான திட்டங்களை
நிறைவேற்றுவதில் முனைப்பாக இருக்கிறது என்பதை எடுத்துச்
சொல்வதில் நான் பெருமைப்படுகிறேன்.

சத்துணவுத் திட்டத்தைப் பற்றி இங்கே பேசிய மாண்புமிகு
உறுப்பினர் ராஜா அவர்கள் குறிப்பிட்டார்கள். நான்
என்னுடைய தொகுதியில் நடைபெற்ற இரண்டு நிகழ்ச்சிகளில்
ஊராரே எடுத்த நடவடிக்கைகளை இங்கே எடுத்து வைக்க
விரும்புகிறேன். காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியத்தில்
இருக்கும் சத்துணவு மையத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி. அங்கே
யிருக்கும் பாலசேவிகா 5 லிட்டர் எண்ணெய், இரண்டு லிட்டர்
பருப்பு ஆகியவற்றை சத்துணவு மையத்தில் இருந்து எடுத்துச்
சென்று இருக்கிறார்கள். அவர்கள் எடுத்துச் செல்லும்போது
பின் தொடர்ந்து சென்று, வீட்டிற்குள் அதை வைத்தவுடன்,
அவரை பையும் கையுமாகப் பிடித்து, போலீஸ்
ஸ்டேஷனில் ஒப்படைத்தார்கள். அவர் மீது இப்போது வழக்கு
தொடரப்பட்டுள்ளது. பொதுமக்கள் எந்த அளவிற்கு விழிப்
புணர்வோடு இருக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்
காட்டாகும் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு
இருக்கிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு : ஆகவே, திருட்டு நடைபெறுகிறது
என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள், (குறுக்கீடு) திருட்டை
யார் கண்டுபிடிக்கிறார்கள் என்பது பெரிது அல்ல.

டாக்டர் கே. சமரசம் : திருட்டைச் செய்தவர்கள் தப்ப
முடியாது மக்கள் விழிப்புடன் இருந்தால். வேறு ஒரு இடத்தில்,
கண்டைக்காய்ப்பட்டி என்ற இடத்தில் அந்த சத்துணவு
மையத்தில் இருக்கிற ஆயா சில பொருள்களை எடுத்துச் செல்வ
தற்காக தனியாக ஒரு மூலையில் அதை எடுத்து வைத்து இருக்
கிறார்கள். இது எப்படியோ ஊராருக்குத் தெரிந்து இருக்கிறது.
அந்த நபரை சைக்கிளில் உட்கார வைத்து போலீஸ் ஸ்டேஷனுக்கு
அழைத்துச் சென்று ரிப்போர்ட் செய்து இருக்கிறார்கள்.
இப்படிப்பட்ட விழிப்புணர்வு நாட்டு மக்களுக்கு ஆங்காங்கு
ஏற்படுமானால் சத்துணவுத் திட்டம் நிச்சயமாக நல்ல
முறையில் வெற்றி பெறும். அப்படி பெறவேண்டும் என்ற அடிப்
படையில் ஆங்காங்குள்ள நாட்டு மக்கள் ஒத்துழைக்க முன்

வந்தால், நாட்டிலே உள்ள புல்லுருவிகளை நாம் இனம் கண்டு கொள்ள முடியும். சில இடங்களில் புல்லுருவிகள் எப்படியோ நுழைந்து இருக்கிறார்கள். அவர்களை இப்போது நாம் இனம் கண்டு கொண்டு வருகிறோம். அவர்களை நீக்கிவிட்டு, மக்களுக்குச் சேவை செய்கிற இந்தத் திட்டத்தை நல்ல முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற சூழ்நிலை இந்த அரசுக்கு ஏற்பட்டு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

(பிற்பகல் 1-00)

அது மட்டுமல்ல, இங்கே எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. எல். இளையபெருமாள் அவர்கள் பேசும்போது மதுவிலக்கைப் பற்றிச் சொன்னார்கள். அவர் சொல்லக்கூடிய கருத்து காங்கிரஸ் கருத்தா அல்லது மதுவிலக்குக் கமிட்டித் தலைவர் என்ற முறையிலே ஒரு நிலையை உருவாக்கிக்கொள்கின்ற கருத்தா என்று நான் அவரைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். காரணம் இன்றையதினம் காங்கிரஸ் ஆட்சி நடத்துகின்ற எல்லா மாநிலங்களிலும் மது அமுலில் இருக்கிறது.

திரு. எல். இளையபெருமாள் : மாற்றுத் தலைவரவர்களே, சகோதரர் டாக்டர் சமரசம் அவர்கள் என்னிடம் கேள்வி கேட்கிறார்கள். பதில் சொல்ல நான் அமைச்சர் அல்ல என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டாவதாக மனிதாபிமானம் என்ற வார்த்தையை நான் சொன்னேன். தமிழக முதலமைச்சர் இந்த மதுவிலக்கை முழுமையாக ஆதரித்தார்கள். ஆனால் சில அரசியல்வாதிகள் அல்லது குடியிலே நம்பிக்கை உள்ளவர்கள் தமிழக மக்களை மூடர்களாக்கி அவர்கள் ஐம்பது வருடங்களுக்கு மூடர்களாக இருக்க வேண்டும் என்ற பாவமான எண்ணத்திலே நம்பிக்கை உள்ளவர்கள் செய்த கேட்டினால்தான் மதுவிலக்கைத் தளர்த்துவது என்ற பெயரால் அநியாயம் நடக்கிறது. மேலும் இது மத்திய அரசினுடைய சப்ஜெக்ட் அல்ல; மாநில அரசின் சப்ஜெக்ட். ஆகையால் மாநில அரசுதான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

டாக்டர் கே. சமரசம் : நான் ஒன்றை, தெளிவாக்க விரும்புகிறேன். எங்கள் தலைவர் இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் சினிமாத் துறையிலே இருந்தாலும் சூது, மது இல்லாமல் தன்னை சுத்தத் தங்கமாக்கிக் கொண்டிருப்பவர்கள் என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். ஆட்சி என்பது வேறு கட்சி என்பது வேறு, கட்சித் தலைவரின் தனித் தன்மை என்பது வேறு. நாட்டிலே இருக்கிற நிலைமை, இந்தியத் துணைக் கண்டத்தினுடைய சிக்கல் என்ன என்பதை அறிந்து எந்த நேரத்தில் எதைக் கொண்டுவர வேண்டுமென்ற அவசியம் ஏற்படுகிறதோ அந்த அடிப்படையில் இங்கே மதுவிலக்கு தளர்த்தப்பட்டிருக்கிறதே தவிர வேறல்ல. எங்களுக்கு அது தகாதல்ல என்றுகூட தனிப்பட்ட முறையில் நாங்கள் ஏற்றுக் கொள்வோம். ஆனால் ஒரு ஆட்சி என்பது, நாட்டினுடைய நிலைமையைக் கருதி இருக்க வேண்டியது அவசியம். அதுபற்றி நான் இந்த மன்றத்திலே ஏற்கெனவே விளக்கியிருக்கிறேன்.



மது என்பது ஒரு பருவமங்கை. அவளை கன்னிமாடத்திலே கொண்டுபோய் வைத்திருந்தார்கள் சிலர். சிலர் அவளைக் கொண்டுவந்து சிவப்பு விளக்கு பகுதிக்கு அனுப்பிவிட்டார்கள். அவளை சிவப்பு விளக்குப் பகுதிக்கு அனுப்பியவர்களே மீண்டும் கன்னிமாடத்தில் கொண்டு வைத்துவிட்டு, குலப்பெருமை, பெண்ணின் பெருமை பேசலாமா? என்று நான் கேட்டேன். ஆனால் புரட்சித்தலைவர் அவர்கள் அவளை கன்னிமாடத்திலும் கொண்டு வைக்கவில்லை; சிவப்பு விளக்குப் பகுதிக்கும் அனுப்பவில்லை. அவள் யாரை விரும்புகிறாளோ, எவன் ஒருவன் அவளை விரும்புகிறானோ அந்த இருவரும் சேர்ந்துவர 'பெர்மிட்' வழங்குகிறார்கள். இது குற்றமா என்றுதான் நான் கேட்க ஆசைப்படுகிறேன். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில்தான் மதுவிலக்கு தளர்த்தப்பட்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அப்படி இருந்தபோதிலும் இந்த மது ஒழிய வேண்டும் என்பதற்காகவே ஏராளமான விளம்பரங்கள் செய்கிறோம். செய்திப் படங்கள் மூலமாக, நாடகங்கள் மூலமாக, இன்னும் பல்வேறு வகைகளிலே பொதுமக்களுக்கு மதுவினால் ஏற்படும் தீமைகளை கொள்கை விளக்கமாக, போதனையாக எப்படி எப்படி எல்லாம் எடுத்துச் சொல்ல வேண்டுமோ அப்படியெல்லாம் இந்த நாட்டு மக்களைத் திருத்த வேண்டுமென்ற அடிப்படையிலே இந்த அரசு தொடர்ந்து எடுத்துச்சொல்லி வருகிறது என்பதை காங்கிரஸ் பெரியவருக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

ஆக, இப்படிப்பட்ட சூழ்நிலையில் பல்வேறு வகைகளில் எதிர்பாராத செலவு என்று வருகிறபோது அதை எல்லாம் தவிர்க்க முடியாத நிலையில் நாங்கள் ஏற்றிருக்கிறோம். இந்த எதிர்பாராத செலவின்மீது பேசுகின்றபோது இந்த மது பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன். பல்வேறு இடங்களில் கள்ளச்சாராயம் காய்ச்சுகின்றவர்களை கண்டுபிடித்து, வழக்குப் போடுகின்றபோது நீதிமன்றங்களில் உடனடியாக சோதனை செய்து, தீர்ப்பு வழங்கப்படுகின்ற நிலைமை இல்லாத சங்கடங்கள் இருப்பதால் வழக்குகள் முடிவடைவதில் தாமதம் ஏற்பட்டு, குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. அதனால் தர்மபுரி மாவட்டத்தில் உடனடியாக ஒரு பரிசோதனைக் கூடத்தையும், ஒரு தனி நீதிமன்றத்தையும் இதற்காக அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. தர்மபுரி மாவட்டத்தில் 9-க்கு மேற்பட்ட அணைகள் கட்டப்பட்டது இந்த அரசால்தான். 1947-லிருந்து 1977-ஆம் ஆண்டு வரையில் தீர்க்க முடியாத பிரச்சனைகள் கடந்த 6 ஆண்டு காலத்தில் தீர்த்து வைக்கப்பட்ட பெருமை இந்த அரசுக்கு உண்டு. வறட்சியைப் போக்க கசிவு நீர் குட்டைகள் ஏராளமாக உண்டு. இந்த நிலையில் கிருஷ்ணகிரி

அணையிலிருந்து வாளையங்குடி, அதற்குக் கீழேயுள்ள எருமம்பட்டி, ஏலம்பட்டி சந்தூர் பகுதி வரையிலும் தொடர்ந்து ஒரு தனிக் கால்வாய் வெட்டி, மழைக்காலத்தில் அங்கே இருக்கிற ஏரிகளை எல்லாம் நிரப்புவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தினம் தினம் ஏற்படுகின்ற விபத்துக்களைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக மாட்டு வண்டிகள்மீது லாரிகள், பஸ்கள் மோதுவதற்கு 'ரிஃப்ளெக்ஷன் லைட்ஸ்' இல்லாததுதான் காரணமாக இருக்கிறது. அவை இருந்தால் பெருமளவில் ஏற்படுகின்ற இப்படிப்பட்ட விபத்துக்கள், வண்டிகள்மீது மோதுகின்ற நூற்றுக்கணக்கான விபத்துக்கள் தடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அடுத்து, கர்நாடகத்தில் ஆரம்பித்த விஷச்செடிப் பிரச்சனை இன்று பெருமளவுக்கு தமிழ்நாட்டைப் பாதித்திருக்கிறது. இப்போது எங்கு பார்த்தாலும் இந்த விஷச் செடியினால் மாட்டுக்கும் நோய் வருகிறது மக்களுக்கும் நோய் வருகிறது. இந்த விஷச் செடியின்மீது சிறிது உப்புத் தண்ணீரைத் தடவி, அதை எரித்து 'கோபார் காஸ்' என்று சொல்லக்கூடிய சாண எரிவாயுத் திட்டத்தைப் பயன்படுத்தலாம்; மிகப்பெருமளவில் அதிலிருந்து 'காஸ்' கிடைக்கிறது என்று என்னுடைய தொகுதியிலே ஏரமனூர் ஒன்றியத்தில் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதை அரசாங்கம் ஆராய்ச்சி செய்து அபிவிருத்தி செய்தால், இந்த வாடையைப் போக்கமுடியும். இந்த விஷச் செடியை ஒழிக்க முடியும். புதிய எரிசக்தியையும் பெறமுடியும். அதற்கு முயற்சிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்க கடமைப்பட்டிருக்கிறேன். ஆக மக்களுக்கு அத்தியாவசிய தேவையான உயிரோட்டம் உள்ளதாக இந்த நாட்டின் ஈர்ப்புத் தன்மையாக, இந்த நாட்டின் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய திட்டங்களுக்கு இந்த அரசாங்கம், எதிர்பாராத செலவினை கேட்பதை, தாராளமாக வழங்கவேண்டுமென்று வணங்கி வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, எதிர்பாராத செலவு என்ற தலைப்பில் இன்றைக்கு 50 கோடி ரூபாய் வரையில், எதிர்பாராமல் செலவு செய்யலாம் என்றிருந்த சட்டத்தை வறட்சி நிவாரண செலவுக்கும், புதிதாக சாராய தொழிற்சாலையை அரசாங்கம் ஏற்று நடத்தக் கூடிய முறையிலும், 150 கோடி ரூபாய் அதை நிர்ணயம் செய்து இன்றைக்கு இந்த பில்லில் கொண்டு வந்திருக்கிறீர்கள். மார்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் சொல்லிக் கொள்வது, இந்த பில்லானது 1984 ஆம் வருடம் மார்ச் 31 ஆம் தேதி வரை செலவு செய்வதற்கான தொகை என்று சொல்லி



யிருக்கிறீர்கள். ஆனால் இன்றைக்கு 1983 ஆம் ஆண்டு நவம்பர் கூட இன்னும் வரவில்லை. இன்னும் இதற்கிடையில் சட்டமன்றம் 2 தடவை கூட சந்தர்ப்பம் எல்லாம் இருக்கிறது. அப்படியிருக்கும் பொழுது, நீங்கள் 1984 மார்ச் 31 ஆம் தேதிவரையில் ஒதுக்கீடு செய்யவேண்டிய அவசியமில்லை என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு, வறட்சி நிவாரண வேலை ஏற்பட்டு விட்ட காரணத்தால் என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் உங்களிடத்திலே தெரிந்துகொள்ள விரும்புவது, வறட்சி நிவாரணப் பணி எப்படி நடந்தது என்பதை பல்வேறு உறுப்பினர்கள் சொன்னார்கள். அதிலே நானும் உடன்படுகிறேன். ஏனென்றால் வறட்சி நிவாரண வேலை ஒரு மாவட்டத்திலே 2,000 வேலைகள் எடுத்துக்கொண்டு, அதில் 1,000 வேலைகள் கூட செய்து முடிக்காமல் விடுபட்டிருக்கிறது. எங்களுடைய மாவட்டத்தில் அனுபவபூர்வமாக நான் பார்த்திருக்கிறேன். எண்ணிக்கையிலே தான் 2,000 வேலைகள். அந்த வட்டாரத்துப் பிரச்சினையைத் தீர்க்க கூடிய வேலைகளாக இல்லை.

ஏனென்று சொன்னால் 50 ஏக்கர் பாசனவசதிக்குக் கீழே தரக்கூடிய கண்மாய்களுக்கு பொதுப்பணித் துறையின் மூலமாக வேலை செய்யப்படும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் 50 ஏக்கருக்கு கீழே பாசன வசதி பெறக்கூடிய நிலங்கள் அங்கே இருக்கின்றதா என்று சொன்னால், தேடிப் பார்க்கத்தான் வேண்டி இருக்கிறது. நானும் என்னுடைய தொகுதியிலே பல இடங்களிலே சுற்றிப் பார்த்தேன். 117 ரெவின்யு கிராமங்கள் இருக்கக்கூடிய அந்தத் தொகுதியிலே ஒரு 7,8 இடங்களிலே கூட 50 ஏக்கருக்குக் கீழ் பாசனவசதி பெறக்கூடிய இடங்கள் இல்லை. ஆகவே அந்த மாதிரி வேலைகள் செய்பவர்களுக்கு வாய்ப்பில்லாத காரணத்தால் வறட்சி நிவாரண வேலை இல்லை என்று சொல்லுகிறார்கள்.

அதேபோல ரோடுகள் இருக்கின்றன. பல ஆண்டுகளாக செப்பனிடாமல் ரோடுகள் இருக்கின்றன. அந்த ரோடுகளை ரிப்பேர் செய்யுங்கள் என்றால் அதற்கு இந்த ஸ்கீமில் இடம் இல்லை என்று சொல்லுகிறார்கள்.

அதேபோல பள்ளிக்கூடங்கள் ஒழுகுகின்றன. பல வருஷங்களாக மராமத்து இல்லாமல் இருக்கின்றது. அதைச் செய்யுங்கள் என்றால் அதற்கும் இந்த திட்டத்தில் இடமில்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் இங்கே நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள், வறட்சி நிவாரண வேலைக்கு என்று சொல்லுகிறீர்கள். 50 கோடியில் இருந்து 150 கோடி என்று கேட்கிறீர்கள்.

இந்த வறட்சி நிவாரண வேலை 31–9–83 அன்றே முடிந்து விட்டது. இப்போது அது இல்லை. ஆனால் நீங்கள் இப்போது பில்லிலே வறட்சி நிவாரண வேலை நடைபெற்றுக் கொண்டு வருகிற காரணத்தால் என்று சொல்லி இருக்கிறீர்கள். 30–9–198

அன்றே முடிந்து விட்டது என்று அதிகாரிகள் சொல்லி 30-ந் தேதி வரை காத்திருக்காமல், 25-ந் தேதியே முடிக்கிறோம் என்று சொல்லி அவசரம் அவசரமாக முடித்துவிட்டார்கள். இன்றைக்கு அந்த வறட்சி நிவாரண வேலை என்று நாங்கள் போய் சொல்லமுடியாது. அவர்களும் செய்ய மாட்டார்கள். ஆனால் இப்போது நிதி ஒதுக்கீடு கேட்பது ஆச்சரியமாக இருக்கிறது. அதேபோல வறட்சி நிவாரண வேலை என்றால் குளம் வெட்டுவது மட்டும்தானா?

இன்றைக்கு ஏழைகளுக்கு இலவச வேட்டி சேலை கொடுப்பதாகச் சில இடங்களிலே சொல்கிறார்கள். நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், நான் போய் தாசில்தாரிடம் சொன்னேன். ஒரு லிஸ்ட் கொடுத்தேன். ஆனால் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், நான் ஒரு சட்டமன்ற உறுப்பினர் வந்து சொல்கிறேன். அந்த கணக்கிலே எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்வதில்லை. சரி சார், எல்லாம் ஆலோசனை பண்ணி நான் கொடுக்கிறேன். என்னய்யா, ஊர் ஊருக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள், நீ என்ன ஆலோசனை செய்கிறாய் என்று சொன்னால், உங்களுக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை. நாங்கள் எல்லாம் எப்படி இங்கே உத்தியோகத்திலே இருக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியும். அவர்கள் பேச்சை எல்லாம் மீறிப் போனால் இந்த வட்டாரத்திலே நாங்கள் இருக்க முடியுமா? எங்கள் பிள்ளைகள் எல்லாம் பள்ளிக்கூடத்திலேயும் காலேஜிலேயும் படிக்கிறார்கள் என்று அவர் நிலைமையை அவர் சொல்கிறார், பாவம். அப்படி என்றால் நாங்கள் என்ன நினைக்க வேண்டியிருக்கிறது? யாரோ ஒருவர் சொல்கிறார், அவர் சொல்லக்கூடிய வேலைகளை அங்கே இருக்கக் கூடிய அதிகாரிகள் செய்வார்கள் என்ற ஒரு நிலைதான் இருக்கிறது. ஆகையினாலே இன்றைக்கு ஜனநாயகம் என்பது வெறும் கேலிக்கூத்தாகி விட்டது. அதுதான் நடைமுறையிலே இருந்து கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 1–10.)

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

அதேபோல் இன்றைக்கு நகரசபையிலேயிருந்து வரக்கூடிய மக்களுக்கு நமது மதிப்பிற்குரிய அமைச்சர் எஸ்.டி.எஸ். அவர்கள் ஒரு தடவை பழனிக்கு வந்திருந்தார்கள். அப்படி வருகின்றபோது ஒரு பொதுக்கூட்டத்திலே பேசினார்கள். என்ன பேசினார்கள் என்றால் எங்களுடைய புரட்சித் தலைவர் மக்களைக் கேட்காமலேயே கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுப்பவர், ஆகவே நீங்கள் எதையும் கேட்க வேண்டிய அவசியம் கிடையாது, கேட்காமலே அவர்கள் கொடுக்கக்கூடியவர் என்று சொல்லிவிட்டு ஏழை எளிய மக்களுக்கு இலவச வேட்டி சேலை பல லட்சக் கணக்கில் கொடுக்கிறோம் என்று சொல்லி கிட்டத்தட்ட 4



மாதங்களுக்கு முன்னால் சொல்லிவிட்டு வந்தார்கள். ஆனால் இன்றைக்கு பழனி நகரத்திற்குள்ளே போனால் இப்போது நகராட்சிப் பகுதியிலே வாழக்கூடிய மக்கள்–இப்படிச் சொல்கிற அமைச்சர் அவர்கள் எங்கோ இருக்கிற குக்கிராமத்திலே போய் சொல்லிவிட்டார் என்றால்கூட ஒரு உண்மையாக இருக்கும் என்று சொல்லலாம். ஆனால் சேலை வேட்டிகள் கொடுக்காத இடத்திலேபோய் எங்களுடைய புரட்சித் தலைவர்......

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாற்றுத் தலைவர் அவர்களே, பொதுக்கூட்டத்திலே கூட எங்களுடைய முதல் அமைச்சர் அவர்களை பாராட்டக்கூடாது என்று அவர்கள் விரும்புகிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை. எதைச் செய்தார்களோ, அதைத்தான் நான் சொல்லியிருக்கிறேன். நான் சொல்கிறபோது நீங்கள் பக்கத்திலே இருந்தீர்களா? அல்லது பத்திரிகையிலே வந்ததா என்பது எனக்குத் தெரியாது. நான் சொல்கிறபோது, நிதானமாக உணர்ச்சிவசப்படாமல்––உணர்ச்சி வசப்படுவேனோ என்னவோ, எனக்குத் தெரியாது கேட்டவர்கள் தான் சொல்ல வேண்டும்–நான் சொல்கிறபோது மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். அதாவது இதுவரையிலும் 3 தடவைகள் வறட்சியில் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி பாதிக்கப் பட்டு இருக்கிறபோது விவசாயிகள், நிலம் வைத்திருக்கிற விவசாயிகளுக்கு நாம் தண்ணீர் தீர்வை, வாய்தா பணத்தைத் தள்ளிக் கொடுக்கிறோம். ஆனால் விவசாயிகளிடத்திலே வேலை செய்கிற விவசாயத் தொழிலாளர்களுக்கு, இந்த அரசு உதவி செய்ய முன் வருகிறது, புரட்சித் தலைவர் உதவி செய்கிறார்கள். அப்படி யாருமே இந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு வேட்டி, சேலை கொடுங்கள் என்று கேட்கவில்லை, என்ற இப்படித்தான் பேசியிருக்கிறேன். யாருமே வேட்டி சேலை கொடுங்கள் என்று கேட்கவில்லை; அப்படிக் கேட்காமலேயே, விவசாயத்தை நம்பியிருக்கிற தொழிலாளர்களுக்கு, நிலம் இல்லாத விவசாயத் தொழிலாளர்களுக்கு, விவசாயியாக இருந்து, கட்டுமனைகள் இருந்தாலும் பரவாயில்லை, 40 வயதிற்கு மேல் உள்ள ஆண்கள், 30 வயதிற்கு மேல் உள்ள பெண்கள் உள்ள குடும்பத்திற்கு ஒரு வேட்டி. சேலை கொடுக்கப்படும் என்று நான் சொல்லியிருக்கிறேன். நான் சொன்ன பிறகு, 4 மாதம் ஆகிவிட்டது என்றால், மக்களுக்கு வேட்டி சேலை கிடைக்கவில்லை என்றால் நீங்கள் உண்மையிலே மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று நினைத்தால், அதைப் பற்றி சட்டசபையிலே பேசுங்கள். ஆனால் அதற்கு முன்னாலே 4 மாதங்கள், 120 நாட்களில் ஒரு தடவை யாவது அந்த மக்களுக்காக வேட்டி சேலை கொடுக்கவில்லை என்று சொல்லி, அவர்களுக்கு கிடைப்பதற்கு வழி செய்திருந்தால் நல்லமாக இருந்திருக்கும். அதை விட்டுவிட்டு 120 நாட்கள் நீங்கள் கேட்காமல் இருப்பது பொதுமக்களுக்கு உண்மையிலே நன்மை செய்யவேண்டும் என்று நீங்கள் நினைக்கவில்லை என்பதைத்தான் குறிக்கிறது.

**திரு. என். பழனிவேல் :** மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு சில விஷயங்களைச் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் எங்கேயும் கொடுக்கவில்லை என்று சொல்லவில்லை. நகராட்சிப் பகுதியிலே, பழனி நகரத்திலே அமைச்சர் அவர்கள் பேசுகிறார்கள். அந்த நகர மக்களுக்கு இன்றைக்கு வரை கிடைக்கவில்லை. அதை நான் சொல்லியா தெரிய வேண்டும்? அதிகாரிகளுக்கு எல்லாம் தெரியும், உங்களுக்கு எல்லாம் தெரியும்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** * * நான் சொல்வதை நீங்கள் சரியாக புரிந்துகொள்ளவில்லை என்று நினைக்கிறேன். நகராட்சி என்று சொன்னால், செய்தித்தாளிலே அது போகும், அது மட்டுமல்ல, நகராட்சி என்றால், நகராட்சியின் ஓரத்திலேயும் வேலை செய்யும் விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் அப்படிப்பட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கு விட்டுப் போயிருந்தால் நீங்கள் இந்த 120 நாட்கள் வரையிலும் அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எதுவும் செய்யவில்லை என்று நான் சொல்லக்கூடாதா? இன்றைக்கு பெயரைக் கொடுங்கள், அல்லது நாளைக்குக் கொடுங்கள். நீங்கள் பெயரைக் கொடுக்காமல், இங்கே வந்து செய்தித்தாளிலே வரவேண்டும் என்பதற்காக வேண்டுமென்று குற்றம் சாட்டுவது எப்படி நியாயம்? யார் யாருக்கு நிவாரணம் கிடைக்கவில்லை என்று பெயரைக் கொடுங்கள். 120 நாட்களாகிவிட்டன. இன்னும் கொடுக்கவில்லை. இன்றைக்கு 122-வது நாள். இன்றைக்கும் கொடுக்கவில்லை நீங்கள். . . .

**திரு. துரைமுருகன் ;** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் பேசும் போது "**" என்று சொன்னார்களே, அது அவைக்குறிப்பிலே இருக்கலாமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மா. சின்னராசு) : அந்த வார்த்தையை நீக்குகிறேன்.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் ஏதோ என்னுடைய கடமையைச் செய்யத் தவறியது போலவும், அதனால் என்மீது குற்றம் சாட்டுவது போலவும் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஏழை எளியவர்

---

**மாண்புமிகு மாற்றுத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



களுக்கு உதவிகள் பெற்றுத் தருவதிலே, எந்த விதத்திலேயும் உங்களைக் காட்டிலும் சளைத்தவன் இல்லை நான், என்பதைச் சொல்ல முடியும். ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கக்கூடிய அந்த நிவாரணத்தின்—அதாவது அந்த நிவாரணம் எப்படிக் கொடுக்கப்படுகிறது என்கிற முறை தெரியவில்லை எனக்கு அதனால் கேட்கிறேன்—நகராட்சிப் பகுதிகளிலே இருக்கிற ஏழை எளியவர்களுக்கும் துணிகள் கொடுக்கிறீர்களா ; ஏனென்றால் பழனியிலே யாருக்குமே கொடுக்கவில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அரசு தன்னுடைய கடமையைச் செய்யவில்லை என்றால் ஏன் செய்யவில்லை என்று கேட்க உங்களுக்கு உரிமை இருக்கிறது. நீங்கள் யாராவது கடமையைச் செய்யவில்லை என்றால், அதை எடுத்துச் சொல்லவும் எங்களுக்கு உரிமை இருக்கிறது. மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த நிவாரணம் கொடுப்பதிலே யாருக்காவது உண்டா இல்லையா என்கிற சந்தேகம் ஏற்பட்டால், ஜி.ஓ. இருக்கிறதே—அரசு ஆணை—அதை வாங்கிப் பார்க்கக்கூடாதா? அரசு இப்படி எத்தனை விஷயங்களுக்கு ஆணை இட்டிருக்கிறது. சந்தேகம் வரும் போது அதை வாங்கிப் பார்த்து, அரசாங்கம் இதோ ஆணை பிறப்பித்திருக்கிறதே, ஏன் நீங்கள் இன்னும் இந்தப் பகுதியில் கொடுக்கவில்லை என்று, அந்த உத்தரவை காட்டியே அங்குள்ள அதிகாரிகளை நீங்கள் கேட்டிருக்கலாம் அல்லவா? ஏன் கேட்கவில்லை? அப்படி கேட்டிருந்தால், முன்பேயே அவர்களுக்கு நிவாரணம் கிடைத்திருக்கும் அல்லவா? இன்றைக்குச் சட்டசபைக் கூட்டம் நடைபெறவில்லை என்றால் அங்கே இருக்கிற விவசாயிகளுக்கு இன்னும் கிடைக்காமலே இருக்கிற சூழ்நிலை ஏற்படும் அல்லவா? ஆகவே இதுபோன்ற விஷயங்களில் காலதாமதம் ஆவதில் அரசு ஒரு காரணமாக இருந்தால், நீங்களும் ஒரு காரணமாக இருந்திருக்கிறீர்கள்.

**திரு. என். பழனிவேல் :** இன்னும் அமைச்சர் அவர்கள் நான் கேட்டதற்குப் பதில் சொல்லவில்லை. நாங்கள் வேண்டுமானால் ஜி.ஓ.வைப் பார்க்காமல் இருந்திருக்கலாம். அன்றாடம் ஒவ்வொரு ஜி.ஓ. போடப்படுகிறது. எதை என்று பார்ப்பது. நீங்கள் யாராவது சலுகைகள் தரவேண்டும் என்று கேட்டீர்களா? கேட்காமலேயே நாங்கள் தரவில்லையா என்று பெருமை பேசுகிறீர்கள். என்னைப் பொறுத்தவரையில், நீங்கள் என்ன செய்ய நினைக்கிறீர்களோ அதைச் செய்துக் கொள்ளுங்கள், ஆனால் நாங்கள் கேட்டதையே செய்யவில்லையே. விவசாயி

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

23. 1983-84 ஆம் ஆண்டு கூடுதல் செல்வுக்கான துணை மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும் (தமிழ், ஆங்கிலம்)

24. 1983-84 ஆம் ஆண்டில் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்)

25. 1983–84 ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீடுகள் பற்றிய மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் உரை (தமிழ், ஆங்கிலம்).

26. 1975-76 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (தமிழ் ஆங்கிலம்)

27. 1976-77 ஆம் ஆண்டு மிகைச் செல்விற்கான மானியக் கோரிக்கைகள் (தமிழ், ஆங்கிலம்)

28. 1977-78 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் தமிழ், ஆங்கிலம்).

29. 1975-76 ஆம் அண்டில் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்).

30. 1976-77 ஆம் ஆண்டில் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்)

31 1977-78 ஆம் ஆண்டில் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு.

32. 1975-76, 1976-77, 1977-78 ஆம் ஆண்டுகளின் மிகை செலவு மானியக் கோரிக்கைகள் பற்றிய மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் உரை. (தமிழ், ஆங்கிலம்)

ஆவணக்காப்பக நூலகம்
136055
சென்னை-600 008